BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

1 பேதுரு

ரோமாபுரியில் பவுல் முதலாவது காவலில் வைக்கப்பட்டிருந்ததைத் தொடர்ந்து வந்த வருடங்களில், சபைக்கு உபத்திரவம் பெருகத் தொடங்கியது. இந்தச் சூழ்நிலைக்கேற்ப செயலாற்றும் விதத்தில் அப்போஸ்தலனாகிய பேதுரு இந்த நிருபத்தை எழுதினார்.

கர்த்தருக்கு மிக நெருக்கமாயிருந்த மூன்று சீஷர்களில் பேதுரு ஒருவராயிருந்தார் (மத்தேயு *26:37*; லூக்கா *9:28*). இவர் சில வேளைகளில் ஆவிக்குரிய உள்ளுணர்வின் மேன்மையை வெளிப்படுத்தினார் (மத்தேயு 16:13-17), ஆனால், சிற்சில சமயங்களில் இதில் தவறினார் (மத்தேயு 16:21-23; 26:69-75). இருப்பினும், உறுதியற்றவரும், தன்னிச்சையாய் செயல்பட்டவருமான பேதுரு பெந்தெகொஸ்தேக்குப் பிறகு ஆவிக்குரிய மாபெரும் பலசாலியாக மாறினார். இவர் தைரியமாக சுவிசேஷத்தையும், பெந்தெகொஸ்தே அனுபவத்தையும் பிரஸ்தாபப் படுத்தி, இயேசுவின் நாமத்திலுள்ள அதிகாரத்தினால் அடையாளங்களையும், அற்புதங்களையும் நடப்பித்தார் (அப்போஸ்தலர் 2:15-41; 3:6,7). ஒரு முறை ஆண்டவரை மறுதலித்தவர், சகோதரரை ஸ்திரப்படுத்துகிறவரானார் (லூக்கா *22:32*).

இவர் ஆதித் சபையின் பிரதானமான தலைவர் ஆனார். பவுலைப் போல இவரும் அதிகமாகப் பிரயாணஞ் செய்து ஊழியஞ் செய்தார். நீரோ சக்கரவர்த்தி கிறிஸ்தவர்களைத் துன்புறுத்த ஆரம்பித்த சில காலத்திற்குப் பிறகு பேதுரு ரோமாபுரியில் இரத்தசாட்சியாக மரித்திருக்கலாம்.

வரலாற்றுப்பின்னணியும், பொருளடக்கமும்

பலவிதமான சோதனைகளையும், துன்பங்களையும் ஆசியாவில் அனுபவித்துக் கொண்டிருந்த விசுவாசிகளுக்கு முதலாம் பேதுரு எழுதப்பட்டது (1:1-6; 3:14; 4:12-19). பேதுரு வாசகர்களுக்கு மாற்குவின் வாழ்த்துதலையும் கூறியிருப்பதினால், மாற்கு அச்சமயத்தில் ஆசியாவிற்குச் சென்றிருக்கிறார் என்பது புலனாகிறது (5:13). பவுல் ரோமாபுரியில் முதலில் காவலில் இருந்த வேளையில் மாற்கு (மாற்கு சுவிசேஷம் எழுதிய மாற்கு என்னும் யோவான்) இப்பகுதியைப் பார்வையிடத் திட்டமிட்டான், ஆனால் அது நிறைவேற வில்லை. ஆதலால், பவுலின் இந்தக் காவலுக்கு சற்று பின்னரே இந்த நிருபம் எழுதப்பட்ட தென்பதைச் சுட்டிக் காண்பிக்கிறது (கொலோசெயர் 4:10).

யாருக்குப் பேதுரு நிருபம் எழுதினாரோ அவர்களை அவர் அறிந்திருக்கவில்லை. இருப்பினும், அவர்களுடைய கஷ்டங்களை அவர் தெரிந்து வைத்திருந்தார். ஒருவேளை அவர்களுடைய நிலவரங்களை மாற்கு பேதுருவுக்கு அறிவித்திருந்திருக்கலாம். அவர்கள் முதலாவது எவ்விதம் சுவிசேஷத்தைக் கேள்வியுற்றார்கள் என்பது பற்றிய குறிப்பிட்டத் தகவல் ஏதும் கொடுக்கப்படவில்லை. எபேசுவில் பவுல் ஊழியஞ் செய்ததின் பலனாக அவர்கள் கிறிஸ்தவர்களாகியிருந்திருக்கலாம் (அப்போஸ்தலர் 19:10). அவர்கள் சபைகளை உருவாக்கியிருந்தார்கள் என்பதற்கு “மூப்பருக்கு” எனப் பேதுரு குறிப்பிட்டிருப்பது ஓர் நிருபணமாகும் (1 பேதுரு 5:1).

1 பேதுரு

உங்கள் சகோதராரிடத்திலே அப்படிப்பட்டப் பாடுகள் நிறைவேறி வருகிறது எனப் பேதுரு கூறுவதிலிருந்து *(5:9)* அவர்கள் அடைந்த துன்பங்கள் நீரோவின் கீழ் உண்டான உபத்திரவங்களுடன் சம்பந்தப்பட்டவை என்பது சாத்தியமாகும்.

தன் நிருபத்தை வாசிப்பவர்களைப் பேதுரு தைரியப்படுத்தினார். கிறிஸ்துவைப் போன்ற ஆவியுடன் தங்கள் சத்துருக்களைச் சந்திக்கும் படி அவர் அவர்களை நினைவுபடுத்தினார் *(2:20-23)*. அநித்தியமான பூமிக்குரிய பாடுகளை, நித்தியமான பரலோக மகிமையுடன் வேறுபடுத்திக் காட்டுகிறார் *(1:6,7; 5:10)*. இயேசு கிறிஸ்துவில் தொடர்ந்து வைத்திருந்த விசுவாசத்தின் மூலம் அவர்கள் பெற்றுக் கொண்ட நித்திய மகிமையையும், சுதந்தரத்தையும் அவர்களுக்கு நினைப்பூட்டினார் *(1:1-12)*. பரிசுத்த வாழ்க்கைக்குத் தேவையானது இன்னதென்று கூறிவிட்டு, அவர்கள் வஞ்சகத்தையும், கபடத்தையும், பொறாமையையும், புறங்கூறுதலையும் ஒழித்து விட வேண்டுமென்று அவர்களைப் பேதுரு ஊக்குவித்தார் *(1:13-2:3)*. தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனமாகிய அவர்களுடைய நிலவரம் இன்னதென்று விவரிக்கிறார் *(2:4-12)*. அதிகாரிகளுடன் அவர்களுக்கு இருக்க வேண்டிய தொடர்பு பற்றி புத்திசொல்லுகிறார் *(2:13-25)*.

மனைவிகள் தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டுமென்றும், புருஷர்கள் மனைவிக்குச் செய்ய வேண்டிய கனத்தைச் செய்ய வேண்டுமென்றும் பேதுரு கூறுகிறார் *(3:1-7)*. செவ்வையானதைச் செய்து, அதில் நிலைத்திருக்கும்படி விசுவாசிகள் அனைவருக்கும் புத்தி சொல்லுகிறார் *(3:8-22)*. கிறிஸ்துவுக்காகப் பாடுபடும்படி அழைக்கப் பட்டிருந்தால், எவ்வித மனப்பான்மை உடையவர்களாயிருக்க வேண்டும் என்று விவரிக்கிறார் *(4:1-19)*. அவர் மூப்பருக்கும், இளைஞருக்கும் ஆலோசனை கூறி, அவர்கள் ஒவ்வொருவரும் தேவனில் விசுவாசம் வைக்கும்படி புத்திசொன்னார் *(5:1-14)*.

1பேதுரு: பாடுபடும்படிக்கு ஆலோசனை

1. நம்முடைய ஜீவனுள்ள நம்பிக்கை *(1:1-12)*.
2. நம்முடைய விலைபெறப் பெற்ற மீட்பு *(1:13-2:3)*.
3. நம்முடைய பாக்கியமுள்ள நிலவரம் *(2:4-12)*.
4. நம்முடைய தனிப்பட்ட மாதிரி *(2:13-25)*.
5. நம்முடைய வெளியரங்க நடவடிக்கை *(3:1-22)*.
6. நம்முடைய உள்ளான மனோபாங்கு *(4:1-19)*.
7. நம்முடைய நித்திய மகிமை *(5:1-14)*.

துயரமும்தேவனுடைய இரட்சிப்பின் திட்டமும்

1 பேதுரு 1:3-12

முன்னுரை

அ. சின்ன ஆசியா முழுவதிலும் (பொந்துபு, கலாத்தியா, கப்பதோகியா, பித்தினியா, நவீனகால துருக்கியின் பெரும்பாகம் ஆசியா) சிதறடிக்கப்பட்டிருந்த விசுவாசிகளாகிய புறஜாதியாருக்காக முக்கியமாக இந்த நிருபம் எழுதப்பட்டது. இந்த விசுவாசிகளில் அநேகர், பெந்தேகொஸ்தே நாளன்று எருசலேமில் இருந்தார்கள். (அப்போஸ்தலர் 2:9-11) இவர்கள் ஒருசமயம், பேதுருவின் பிரசங்கத்தின் மூலமாக, கிறிஸ்துவின் பக்கமாக மனந்திரும்பிய 3000 பேர்களில் இவர்களும் இருந்திருக்கக் கூடும் (அப்போஸ்தலர் 2:41). பவுல், அவனுடைய முதல் இரண்டு சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும் பிரயாணங்களில், இந்தப் பிரதேசங்களின் வழியாகப் பிரயாணம் செய்தான்.

ஆ. கிறிஸ்துவின் மீது வைத்த விசுவாசத்தினிமித்தமும், அவனோடு சம்பந்தம் வைத்திருந்ததின் நிமித்தமும் பாடுகளை அனுபவித்த கிறிஸ்தவர்களுக்கு பவுல் இந்த நிருபத்தை எழுதுகிறார். அவர்கள், வேறு பலவிதமான தொல்லைகளையும், அவ்வாறே சோதனைகளினாலும் துன்பத்தையும் வேதனைகளையும் கூட அனுபவித்தார்கள். ஆகவே, பேதுரு, அந்த விசுவாசிகளை, கீழ்க்கண்டவற்றை ஞாபகப்படுத்தி ஊக்குவிக்க முயற்சித்தான்.

1. தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தின் நன்மைகள்

அ.வசனம்3.'தம்முடைய காருண்ணியத்தினால்'காருண்ணியம், தேவனுடைய ன்மார்க்க தன்மைகளில் ஒன்று. இது மற்றவர்களிடம் இரக்கம் பாராட்டுவது என்று பொருள்படும். தேவன் இந்த இரக்கத்தை நம்மீது நிரூபித்துக் காட்டினார்: "நாம் பெலனற்றவர்களாயிருக்கையில் .... பாவிகளாயிருக்கையில்.....தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில் ..." ரோமர் 5:6-10, மற்றும் 2கொரிந்தியர் 5:21; எபிரெயர் 9:26)

ஆ. வசனம் 3. தேவனுடைய குமாரனை அவர்களுடைய இரட்சகரும் ஆண்டவருமாய் ஏற்றுக்கொள்பவர்களுக்கு, 'அவர் மறுபடியும் பிறக்க அருள் செய்வார்' நம்முடைய ஆவியின், இந்த புதிய பிறப்பு, பரிசுத்த ஆவியானவரால் நடப்பிக்கப்படுகிறது. இயேசு நிக்கொதேமுவிடம், 'ஒருவன் ஆவியினால் (அவர் பரலோகத்திலிருந்து அனுப்பப்படுவார்) மறுபடியும் பிறவாவிட்டால், தேவனுடைய இராஜ்ஜியத்தில் (அரசாட்சியில்) பிரவேசிக்கமாட்டான்'. (யோவா 3:5,14:26, 16:7) "அந்த (பரிசுத்த) ஆவி, (மானிடர்) ஆவியைப் பிறப்பிக்கிறது." (யோவான் 3:6,8) "பரிசுத்த ஆவியினால் மறுபடியும் பிறப்பதன்," மூலமாக தேவன் நம்மை இரட்சிக்கிறார் என்று பவுல் நமக்குக் கூறுகிறார் (தீத்து 3:5).

இ. நம்முடைய ஆவிகளில் இந்தப் புதிய பிறப்பைப், பரிசுத்த ஆவியாகிய தேவன் நமக்குக் கொடுப்பது, காற்று வீசுவதற்கு ஒப்பாயிருக்கிறது. நாம் காற்று வீசுவதின் சப்தத்தைக் கேட்கிறோம் ஆனால், அது எங்கிருந்து வந்ததென்றும், அடுத்து எங்கு போகிறதென்றும் நமக்குத் தெரியாது. அவ்வாறாகவே, நாம் விசுவாசியின் வாழ்க்கையில் மாறுதலைப் பார்க்கிறோம் ஆனால் அவனிடம் பரிசுத்த ஆவியானவர் வந்ததையாவது, அடுத்து யாரிடம் செல்வார் என்பதையாவது நாம் காண முடியாது. (யோவான் 3:8) தேவனுக்குத் ஸ்தோத்திரம்.

ஈ. "ஜீவனுள்ள நம்பிக்கை". "நம்பிக்கை" என்பது, நாம் இன்னும் பெற்றுக்கொள்ளாத ஒன்றைக் குறித்து நிச்சயமாய் இருப்பது. (ரோமர் 8:24-25). நம்முடைய புதிய பிறப்பினாலே, கிறிஸ்து அவருடைய சபைக்காக,

துயரமும்தேவனுடைய இரட்சிப்பின் திட்டமும்

1 பேதுரு 1:3-12

வானத்தில் தோன்றும்போது, நம்முடைய சரீரங்கள் மறுபடியும் உயிர்ப்பிக்கப்படும் என்ற ஜீவனுள்ள நம்பிக்கை நமக்கு உண்டாயிருக்கிறது.

உ. பாவத்திற்கு அடிமைகளாயிருந்த நம்மை இரட்சிக்க, கல்வாரி சிலுவையில் மரித்த, நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து, பாதாளத்தில் விடப்படுவதுமில்லை, அழிவைக் காண்பதுமில்லை. (அப்போஸ்தலர் 2:31 இத்துடன் சங்கீதம் 16:10) தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார். அவர் நித்தியமாக ஜீவிக்கிறார். இவ்வாறாக, மறுபடியும் பிறந்தவர்களின் சரீரங்களும், மரித்தோரிலிருந்து எழுந்து,மகிமையடைந்து, நித்தியமாக ஜீவிக்கும். (யோவான் 11:25-26; ரோமர் 8:29; பிலிப்பியர் 3:21; 1கொரிந்தியர் 15:42-44,49,52; 1தெசலோனிக்கேயர் 4:16-17) இதுவே ஒவ்வொரு விசுவாசியின் "மகிமையின் (மற்றும் ஜீவிக்கிற) நம்பிக்கை" (தீத்து 2:13)

ஊ. வசனம் 4. "ஒரு சுதந்திரம்" நமக்கு ஒரு புதிய பிறப்பும், ஒரு ஜீவனுள்ள நம்பிக்கையும் இருப்பதுமல்லாமல், நாம் நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ளுவோம். இது உலகப் பிரகாரமான சுதந்திரத்தைப்போல் அல்லாமல், அது ஒரு போதும்,

1. அழியாது - இது அழிவுக்குட்படாதது. இது மரணமற்றது. இதற்கு எதுவும் தீமை செய்யவோ அழிக்கவோ முடியாது.

2.கெட்டுப்போவது - இது எந்த விதத்திலும் கெட்டுப்போகாது. இது சுத்தமும், தூய்மையும், பரிசுத்தமுமானது.

3.மங்குவது - இது மறையாமல் தொடர்ந்து இருக்கும். இதற்கு முடிவு இல்லை.

எ. வசனம் 5. நாம், சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ளும்வரை, "தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிறோம்". தேவன் இடைவிடாமல் பகைஞனிடமிருந்து நம்மைப் பாதுகாக்கிறார். (நம்முடைய வாழ்க்கையின் நுழைவாயிலில் காவலராக நிற்கிறார், இராணுவ மெய்க்காப்பாளர்போல் நம்மைச் சூழ்ந்து இருந்து நம்மைப் பாதுகாக்கிறார்). நம்மிடத்தில் இருக்கிறவர் (பரிசுத்த ஆவியானவர்) உலகத்தில் இருக்கிறவனை விட (சாத்தானும் அவனுடைய பிசாசுகளும்) பெரியவர் (வல்லமையுடையவர்) (1யோவான் 4:4)

நாம் கிறிஸ்துவில் நிலைத்திருக்கும் வரை அவருடைய கரத்திலிருந்து நம்மை ஒருவரும் பிரிக்க முடியாது. (யோவான் 10:28; 17:12,15, ரோமர் 8:38-39)

ஏ. வசனம் 6. "இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்". வாடாத நித்திய சுதந்திரத்திற்கு ஏதுவான நம்பிக்கையினாலும் நம்முடைய பரமபிதாவினால் காக்கப்பட்டிருப்பதினாலும், நாம் துன்பத்தையும், வருத்தத்தையும் அடைந்து எல்லாவிதமான சோதனைகளுக்குள் சிறிது காலம் இருந்தபோதிலும், நாம் மிகுந்த சந்தோஷப்பட்டு களிகூர பலப்படுத்தப்படுகிறோம்.

2. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளும் தூதர்களும், தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தைப்பற்றி மேலும் அதிகமாக அறிய வாஞ்சிக்கின்றனர் (1:10-12)

அ. வசனம் 10. "தீர்க்கதரிசிகள் ..... கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனைபண்ணினார்கள்". இந்தக் காரியத்தைக் குறித்து ஆராய்வதில் அவர்களுக்கு ஆழமான வாஞ்சை இருந்ததை இது காட்டுகிறது.

துயரமும்தேவனுடைய இரட்சிப்பின் திட்டமும்

1 பேதுரு 1:3-12

இவர்கள் இதைக் கண்டுபிடிக்கும்படியாக ஆவிக்குரிய பரிசோதனையை நடத்திக்கொண்டேயிருந்தார்கள். (லூக்கா 10:23-24)

ஆ. வசனம் 11. "தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் .... இன்ன காலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள்". இது பழைய ஏற்பாட்டிலுள்ள வேத வசனங்கள், பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டவைகள் என்று தேவனுடைய வார்த்தையில் கூறப்பட்ட மற்றொரு கூற்றாயிருக்கிறது.

(2 பேதுரு 1:20-21, 2தீமோத்தேயு 3:16) பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பிடுவதற்கு, புதிய ஏற்பாட்டு வேத வசனங்களில், கிறிஸ்துவின் ஆவி, தேவனுடைய ஆவி, பரிசுத்த ஆவி, ஆகிய சொற்தொடர்கள் இடைக்கிடையே மாறி மாறி பயன்படுத்தப்படுகிறது. (யோவா 14:16-20; அப்போஸ்தலர் 5:3-4; 16:6-7; 2 பேதுரு 1:21).

இ. பழைய ஏற்பாட்டுத் தீர்க்கத்தரிசிகளின் மூலமாக, கிறிஸ்துவினுடைய துயரங்களையும் மகிமைகளையும், அவர் முன்னறிவித்த போது, பரிசுத்த ஆவியானவர், வருங்காலத்திலுள்ள ஒரு நேரத்தையும் சூழ்நிலையையும் சுட்டிக் காட்டினார். இதைக் கண்டுபிடிப்பதற்காகவே அவர்கள் கவனமாக ஆராய்ந்து கொண்டிருந்தார்கள்.

ஈ. வசனம் 11. "கிறிஸ்துவுக்கு வரும் பாடுகளையும், அதன் பின்வரும் மகிமைகளையும் அவர் முன்னறிவித்த போது ..." கிறிஸ்துவினுடைய பாடுகளையும், அவருடைய பாடுகளைத் தொடர்ந்து அவர் பெற்றுக்கொள்ளப்போகும் மகிமையும், (துதி, கனம், வணக்கம்) ஆதியாகமம் 3:15 ஏசாயா 52:13- 53:12; சங்கீதம் 16:8-11, சங்கீதம் 22; சங்கீதம் 110; மற்றும் சகரியா 9:9-10; 13:7-9).

உ. வசனம் 12. "தங்கள் நிமித்தம் அல்ல......" என்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது. கிறிஸ்துவினுடைய பாடுகளையும் மகிமைகளையும் முன்னறிவித்த பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள், கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுந்தலுக்குப்பின் வாழும் தலைமுறைகளைச் சேவித்தார்கள். அவர்கள், அவர்களுடைய சொந்த தலைமுறை மக்களை சேவிக்கவில்லை. இதைத்தான் அவர்கள் கண்டு கொண்டார்கள். இதைத்தான் பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு வெளிப்படுத்தினார்.

ஊ. வசனம் 12. "உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக் கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது" பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் மூலமாகப் பேசிய, பரிசுத்த ஆவியானவர், அப்போஸ்தலர்கள் மூலமாகவும், தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தைக் குறித்துப் பேசினார். அவர் தொடர்ந்து அதே செய்தியை, இன்று இயேசுவை பின்பற்றுகிறவர்கள் மூலமாக உலகத்தின் மக்களோடு பேசுகிறார். (அப்போஸ்தலர் 1:8; யோவான் 14:16,26; 16:13-14)

எ. வசனம் 12. "பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே ...." இயேசு பரத்திற்கு ஏறிச் சென்ற பின்பு, அவர் பரிசுத்த ஆவியை அப்போஸ்தலர்களுக்கும், மற்ற விசுவாசிகளுக்கும் அனுப்பினார். பெந்தெகோஸ்தே தினத்தன்று கூடியிருந்த கூட்டத்தினருக்கு பேதுரு கீழ்க்கண்டவாறு கூறினார்: "அவர் (இயேசு) தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்" (அப்போஸ்தலர் 2:33)

துயரமும்தேவனுடைய இரட்சிப்பின் திட்டமும்

1 பேதுரு 1:3-12

ஏ. தேவனுடைய இரட்சிப்பின் திட்டம் நிறைவேறுவதற்கு நேரம் மற்றும் சூழ்நிலைகள் சம்பந்தப்பட்ட செய்திகளுக்காக நாம் இனிமேல் ஆராய்ந்து பார்க்க அவசியமில்லை. "அருகில் இருப்பவர்களுக்கும், வெகு தூரத்தில் உள்ளவர்களுக்கும்" (அப்போஸ்தலர் 1:8) சாட்சி கூறுவதே நமக்கு நியமிக்கப்பட்ட ஒரே கடமையாக இருக்கிறது. பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் மற்றும் கிறிஸ்துவினுடைய ஆதி அப்போஸ்தலர்கள் மூலமாக அவர் என்ன செய்தாரோ, அதே காரியத்தை நம்மூலமாகவும் செய்ய பரிசுத்த ஆவியானவர் விரும்புகிறார்.

3. தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தின் பலன்களை, துன்பம் உறுதிப்படுத்துகிறது. 1:6-9)

அ. வசனம் 6. "இப்பொழுது கொஞ்சக் காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள்". சின்ன ஆசியாவில் இருந்த விசுவாசிகள் அநேகவிதமான சோதனைகளைச் சந்தித்தனர். அவைகள் ஒவ்வொரு தலைமுறைகளிலும் விசுவாசிகள் சந்தித்த சோதனைகளிலிருந்து வேறுபட்டவைகள் அல்ல:

1. குடும்பம், சிநேகிதர்கள் மற்றும் உறவினர்களிடமிருந்து தனிப்படுத்தப் படுகின்றனர்.

2.அவிசுவாசிகளாலும்,அரசாங்கங்களினாலும்,பொய்யானசமயமார்க்கங்களினாலும் உபத்திரவம் நேரிடும்.

3.குடும்பத்தில், வியாதி, மரணம், தீ மற்றும் பலவிதமான விபத்துக்கள்.

4. வெள்ளப்பெருக்கு, சூறாவளி, புயல்காற்று அல்லது பூமி அதிர்ச்சி முதலிய இயற்கை அழிவுகள்.

ஒருவரும் உங்களை ஏமாற்றவிடாதீர்கள். இந்த சோதனைகள் நாம் துன்பத்தை அனுபவிக்கச் செய்கிறது. நாம் இருதயத்தில் பாரப்படுகிறோம் மற்றும் அவைகளால் சரீரத்திலும், உணர்ச்சியிலும் வேதனைப்படுகிறோம்.

ஆ. வசனம் 7. இவைகள் நேரிடுகிறது, நம்மீது இச்சோதனைகளைக் கொண்டு வர, சாத்தானுக்கு, தேவன் ஏன் அனுமதியளிக்கிறார் என்பதற்குக் காரணங்களை இப்பொழுது பேதுரு நமக்குக் கூறுகிறார்.

1. சோதனைகள் ஒரு விசுவாசியின், விசுவாசத்தை சோதித்து, அது உண்மையானது என்று நிரூபிக்கிறது. நம்முடைய விசுவாசம் உண்மையில் நல்லது என்று அறிவது, கிறிஸ்துவுடன் நடப்பதில் உறுதி ஏற்படுகிறது.

2. சோதனைகளின் மத்தியில் அவர்களுடைய விசுவாசத்தைக் காத்துக்கொண்டவர்கள், அவர் வெளிப்படும்போது, துதியும், மகிமையும், கனமும் கொண்டுவருவார்கள். யோபின்மீது சாத்தான் சோதனைகளைக் கொண்டுவர அனுமதிக்கப்பட்ட போது யோபு அவற்றை சகித்ததினால் தேவன் பெற்றுக்கொண்ட மகிமைக்கு அது ஒப்பாக இருக்கும். (யோபு 1:1- 2:10; 23:10).

இ. யாக்கோபு நமக்கு இவ்வாறு கூறுகிறார்: "உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது, பொறுமையை உண்டாக்குகிறது.... சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் உத்தமன் என்று விளங்கினபின்பு, ஜீவகிரீடத்தைப் (நித்தியமான) பெறுவான்" (யாக்கோபு 1:3, 12; ரோமர் 5:3) எனவே, சோதனைகளினால் உண்மையில் நான்கு நன்மைகள் இருக்கிறது. அவைகளாவன:

துயரமும்தேவனுடைய இரட்சிப்பின் திட்டமும்

1 பேதுரு 1:3-12

1. விசுவாசியின் விசுவாசம் உண்மையானது என்று நிரூபிக்கப்படுகிறது.

2. இயேசுவுக்கு, துதி, மகிமை மற்றும் கனத்தை கொண்டு வருகிறது.

3. சகிப்புத் தன்மையை வளரச் செய்கிறது.

4. நித்திய ஜீவ கிரீடத்தை விசுவாசி பெற்றுக்கொள்வதை உறுதிசெய்கிறது.

ஈ. வசனம் 8. "அவரை நீங்கள் காணாமலிருந்தும் ...... இப்பொழுது அவரை தரிசியாமலிருந்தும் ....." பேதுரு தனக்கும், அவருடைய நிரூபத்தைப் பெற்றுக்கொள்கிறவர்களுக்கும் இடையேயுள்ள வேற்றுமையை எடுத்துக் கூறுகிறார். அவர்கள், ஒருபோதும் இயேசுவைப் பார்க்கவில்லை அல்லது அவருடைய சமுகத்தில் இருந்ததுமில்லை. ஆதி அப்போஸ்தலர்களை அடுத்த பக்கம் எடுத்துக்கொண்டால், அவர்கள் அவர் பூமியில் மூன்று ஆண்டு ஊழியம் செய்து கொண்டிருக்கும்போது, பெரும்பாலும் இயேசுவுடன் கூடவே இருந்தார்கள்.

உ. கொர்நெலியு வீட்டில், பேதுரு அவருடைய வியாக்கியானத்தில், இவ்வாறு கூறுகிறார். "யூதருடைய தேசத்திலும் எருசலேமிலும், அவர் செய்தவைகளெல்லாவற்றிலும் நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம் (அப்போஸ்தலர் 10:39) யோவான் அவருடைய முதல் நிரூபத்தில், நமக்கு இவ்வாறு கூறுகிறார்: நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும் ...... எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ..... நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கு அறிவிக்கிறோம்" (1யோவான் 1:1,3) பேதுருவினுடைய கடிதத்தைப் பெற்றுக்கொண்ட விசுவாசிகள் இயேசுவோடுகூட இருந்து இந்த அனுபவங்களை ஒருபோதும் பெற்றதில்லை. இருந்தபோதிலும், அவர்கள் அவரை நேசித்தார்கள். அத்துடன் அவரில் விசுவாசம் வைத்தார்கள். இயேசு தோமாவில் ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு, 'என்னைக் காணாதிருந்தும் (என்னை உன் போல) விசுவாசிக்கிறவர்கள் (என்னில்) பாக்கியவான்கள்' (யோவான் 20:29)

ஊ. வசனம் 8-9. "சொல்லிமுடியாததும், மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷத்தால் நிறைந்திருக்கிறீர்கள்" நாம் ஒருபோதும் இயேசுவை முகமுகமாய்ப் பார்க்காமலும் பலவிதமான சோதனைகளைச் சகிக்க வேண்டியவர்களாய் இருந்தபோதிலும் நம்முடைய எல்லா சந்தோஷத்திற்கும் காரணமாயிருப்பது இதுவே: நாம் மறுபடியும் உயிர்ப்பிக்கப்படுவோம் என்றும், புதிய வானம் மற்றும் பூமியில், புதிய எருசலேமில் கிறிஸ்து மற்றும் தேவனுடைய சமுகத்தில் நித்திய ஜீவனைப் பெற்று வாழுவோம் என்ற வாடாத நம்பிக்கை நமக்கு உண்டு! தேவனுக்குத் தோத்திரம், எப்படிப்பட்ட பரிசு!! நாம் இயேசுவைப் பார்க்கும்போது, இவையெல்லாம் அதற்குத் தகுதியாக இருக்கும்!!

முடிவுரை

அ. அநேகவிதமான சோதனைகளினால் ஏற்படும் துன்பத்திற்கும், தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்திற்கும் ஒரு தொடர்பு இருக்கிறது. அவருடைய இரட்சிப்பின் திட்டத்தின் நன்மைகளை விசுவாசிகள் தாங்கள் பெற்றுக் கொள்வோம் என்று உறுதிபடுத்த, நம்மீது அநேகவிதமான சோதனைகளைக் கொண்டுவர, தேவன் சாத்தானை அனுமதிக்கிறார். இது இவ்வாறு படிப்படியாகத் தொடர்கிறது:

துயரமும்தேவனுடைய இரட்சிப்பின் திட்டமும்

1 பேதுரு 1:3-12

1. அநேக வித்தியாசமான வழிகளில் நம்மைச் சோதிக்க, தேவன் சாத்தானை அனுமதிக்கிறார்.

2. இச் சோதனைகளின் மூலமாக நம்முடைய விசுவாசம் உண்மை என்று நிரூபிக்கப்படுகிறது.

3.வருங்காலத்தில் கடினமான சோதனைகளைத் தாங்கும் தன்மையைப் பெற்றுக் கொள்ள சோதனைகள் சகிப்புத்தன்மையை வளர்க்கிறது.

4. இவைகளெல்லாவற்றின் நிமித்தமும், கிறிஸ்து மேகங்களின்மேல் மகிமையோடே சபையை எடுத்துக்கொள்ளவரும்போது அல்லது நாம் சரீரத்தில் மரித்து, அவருடைய பிரசன்னத்தில் உடனே பிரவேசிக்கும்போது, நாம் நிலைத்து நிற்போம். (மாசற்றவர்களாக)

5. நம்முடைய விசுவாசம் உண்மை என்று நிரூபிக்கப்பட்டதினால், தூதர்களுக்கு முன்பாகவும், வானலோகத்தின் சக்திகளுக்கு முன்பாகவும், இயேசு கனப்படுத்தப்படுகிறார்.

பரிசுத்த ஜீவியம்
1 பேதுரு 1:13-2:3

முன்னுரை

அ. இது நம்முடைய நிரந்தரமான வீடு அல்ல. நாம் அந்நியதேசத்திலே பரதேசிகளாக இருக்கிறோம். நாம் மறுபடியும் பிறந்திருக்கிறோம். கிறிஸ்துவின் சுவிசேஷம் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின் மூலமாகப் புதிதாக்கப்பட்டிருக்கிறோம். நம்முடைய மனது மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, நாம் பிரித்தெடுக்கப்பட்டவர்களும், உலகத்திலுள்ள மற்ற மனிதர்களிடமிருந்து வேறுபட்டவர்களுமாயிருக்கிறோம். நாம், இனிமேல் நம்முடைய துன்மார்க்கமான ஆசைகளுக்கும், பாவ சுபாவத்திற்கும் உரியவர்கள் அல்ல.

ஆ. எப்படி இருப்பினும், தேவன் நம்முடைய இரட்சிப்புக்காக மிகப் பெரிய கிரயம் செலுத்தியிருக்கிறார். எனவே, நாம் இந்த உலகத்தில் ஜீவிக்கும் காலத்தில், நமது நடத்தைக்கு ஏற்றவாறு பாரபட்சமின்றி நியாயந்தீர்க்கபோகிறார். இக்காரணத்தினாலும்; இன்னும் வேறு காரியங்களினிமித்தமாகவும், அப்போஸ்தலனாகிய பேதுரு, நாம் பரிசுத்த வாழ்க்கையில் தொடர்ந்து ஜீவிக்கவேண்டுமென்று ஊக்குவிக்கிறார். இவ்வாறு நடக்க நமக்கு உதவி செய்யும்படியாக, அவர் சில ஆலோசனைகள் கொடுக்கிறார்.

1. கிரியை நடப்பிக்க உன்னுடைய மனதை ஆயத்தம் செய்.

2. இங்கு பயபக்தியோடு அந்நியன்போல் வாழ்க்கை நடத்து.

3. ஒருவரில் ஒருவர் ஊக்கமாக இருதயத்திலிருந்து அன்பு கூரவேண்டும்.

4. ஆவிக்குரிய பாலை ஆசையுடன் வேண்டிக்கொள்.

1. கிரியை நடப்பிக்க மனதை ஆயத்தப்படுத்துவது, ஒரு பரிசுத்த வாழ்க்கை ஜீவிக்க நமக்கு உதவிசெய்யும். (1:13-16).

அ. வசனம் 13. “ஆகையால் நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு....”

கிழக்கத்திய நாடுகளில், மனிதர்கள் அவர்களுடைய அசைவுகளை தடைசெய்யும் நீண்ட அசைந்தாடும் அங்கிகளை அணிந்திருப்பார்கள். ஆகவே, அவர்கள் “கிரியைசெய்ய ஆயத்தமாகும்போது ” அவர்களுடைய நீண்ட அசைந்தாடும் ஆடைகளை எடுத்து, அதை இடுப்பைச் சுற்றி கட்டியிருக்கும் கச்சையில் சொருகிவிடுவார்கள். இன்று நாம் “உன்னுடைய நீண்ட சட்டைக் கையை மேலே சுருட்டு”. அல்லது “உன்னுடைய மேல் சட்டையை எடுத்துவிடு” என்று கூறுவோம்”.

ஆ. பேதுரு இந்த உதாரணத்தை நம்முடைய மனதைக் குறிப்பிட்டுப் பேசும்போது பயன்படுத்துகிறார். கிழக்கு தேசத்து மனிதர் கிரியை நடப்பிக்க ஆயத்தப்படுவதுபோல, நாம் ஒரு பரிசுத்த வாழ்க்கையை இந்த உலகத்தில் ஜீவிக்க நம்முடைய மனதை ஆயத்தப்படுத்த வேண்டும்.

1. தன்னடக்கத்துடன் இருக்கவேண்டும் அமைதலாக இரு. உன்னுடைய முடிவுகளில், நீ விசுவாசிக்கும் காரியங்களில், கிறிஸ்துவின் வருகையைப்பற்றிய உன்னுடைய நம்பிக்கையில், யோசனைசெய்து சீர்தூக்கிப்பார்த்து அதில் நிலைத்திரு.

2. உனக்கு அளிக்கப்படும் கிருபையின் மீது முற்றிலும் உன்னுடைய நம்பிக்கையை வை. மிகச்சிறந்தது இனிமேல் வரும் என்ற சத்தியத்தின் அடிப்படையில்,தற்போதுள்ளபாடுகளை நோக்கிப்பார்.

பரிசுத்த ஜீவியம்
1 பேதுரு 1:13-2:3

சோதனையை சகித்தால், ஜீவகிரீடத்தை நாம் பெற்றுக்கொள்வோம், என்று நாம் அறிவோம். (யாக்கோபு 1:12)

இ. வசனம் 14. "நீங்கள் ..உங்கள்.....இச்சைகளின்படி இனி நடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து..." "கீழ்படிதல்" என்றால் கவனத்தை செலுத்துதல், ஒப்புக்கொடுத்தல், அடிபணிந்து நடத்தல், என்று பொருள்படும். இந்தப் பொல்லாததும் மாறுபாடானதுமான சந்ததியின் மத்தியில், தொடர்ந்து ஒரு பரிசுத்த ஜீவியம் செய்வதற்கு, ஒரு சரியான மனநிலைக்கும்மேல் அதிகப்படியாகத் தேவைப்படுகிறது. நமக்குள் வாசம்செய்யும் பரிசுத்த ஆவியானவரின் தூண்டுதல்களுக்கு, சிறு பிள்ளைகளைப்போல நாம் கீழ்ப்படியவேண்டும், அத்துடன் நாம் கிறிஸ்துவிடம் சேருவதற்குமுன், நாம் செய்த துன்மார்க்க நடவடிக்கைகளை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

ஈ. வசனம் 15-16 "உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும், உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்." "பரிசுத்தம்" என்ற சொல், மற்ற மனிதர்களிடமிருந்து வித்தியாச மானவர்கள், பிரித்தெடுக்கப்பட்டவர்கள், தேவனுடைய ஊழியத்திற்காக.. அர்ப்பணிக்கப்பட்டவர்கள், என்று பொருள்படும். பேதுரு, பரிசுத்தத்திற்கு தான் அழைக்கப்பட்டதை பலப்படுத்த, பழைய ஏற்பாட்டிலிருந்து, மேற்கொள் எடுத்து இவ்வாறு கூறுகிறார், "நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருப்பீர்களாக" (லேவியராகமம் 11:45).

உ. தேவன், பிரித்தெடுக்கப்பட்டவர், அவர் இந்த உலகத்தின் மனிதர்களிலிருந்து வேறுபட்டவர். ஆகவே நாம் யாவரும், அவருடைய பிள்ளைகளாக நாமும் உலகத்திலுள்ள மற்ற மனிதர்களிடமிருந்து வித்தியாசமானவர்களாகவும், பிரித்தெடுக்கப்பட்டவர்களென்றும் வெளிப்படுத்தப்படத்தக்கதாக நாம் ஜீவிக்கவேண்டும்! நாம் கிரியை நடப்பிக்க, நாம் நம்முடைய மனதை ஆயத்தம்செய்யவேண்டும் அத்துடன்.

1. பாவ சுபாவ ஆசைகளை நிறைவேற்றும் எண்ணங்களை புறக்கணிக்கவேண்டும்.

2. உலகத்திலுள்ள மற்ற மனிதர்களைவிட; வேறுவிதமாகவும், வித்தியாசமான வாழ்க்கை நடையிலும், வாழவேண்டும்.

3. உலகத்து மனிதர்களைப்போல் அல்லாமல், வித்தியாசமான எஜமானை சேவிக்க வேண்டும்.

2. இங்கே பயபக்தியுடன், அந்நியர்கள்போல் ஜீவிப்பது, பரிசுத்த வாழ்க்கைக்கு உதவிசெய்யும். (1:17-21)

அ. வசனம் 17. "பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி நியாயந்தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாகத் தொழுதுகொண்டுவருகிறபடியால்...." "கிரியை" என்றால் செய்கைகள் அல்லது நடவடிக்கைகள், என்று பொருள்படும். ஒருவனுடைய இனம், நிறம், சமூகநிலை, பதவி, அல்லது பிறந்ததேசம் என்பவைகளைக் கருதாமல், ஒவ்வொரு விசுவாசியும் அவனவனுடைய கிரியைகளுக்குக் கணக்குக் கொடுக்கவேண்டும் என்று, தேவன் தீர்மானித்திருக்கிறார். "அவர் பட்சபாதம் பண்ணுகிறவருமல்ல, பரிதானம் வாங்குகிறவரும் அல்ல." (உபாகமம் 10:17) "தேவனிடத்தில் பட்சபாதமில்லை" (ரோமர் 2:11) ஒவ்வொரு விசுவாசியும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நின்று,

பரிசுத்த ஜீவியம்

1 பேதுரு 1:13-2:3

தன்னுடைய கணக்கை தேவனுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். அவர் பார்வைக்கு மறைவான சிருஷ்டிஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும், வெளியரங்கமாயுமிருக்கிறது. அவருக்கே, நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும். (எபிரெயர் 4:13).

ஆ. வசனம் 17. "இங்கே பரதேசிகளாய் சஞ்சரிக்குமளவும், பயத்துடனே நடந்துகொள்ளுங்கள்" நாம் இந்த உலகத்தில பரதேசிகள்போல் ஜீவிக்கவேண்டும் என்று இந்த ஒரு வசனம் மட்டும் கூறவில்லை. மற்றும் அநேக வசனங்கள் இவ்வாறு கூறுகிறது. (2:11, எபிரெயர் 11:13; பிலிப்பியர் 3:20) "பரதேசிகள்போல்" என்றால், நீங்கள் ஒரு அந்நியநாட்டில் வாழுவதுபோல் ஜீவிக்கவேண்டும். உங்களுடைய நிரந்தரக் குடியிருப்பு மற்றொரு இடத்தில் இருக்கிறது. ஆகவே, புண்ணியஸ்தலத்திற்கு யாத்ரீகர்களாகச் செல்லும் இந்தப் பிரயாணக்காலத்தில், உங்களுடைய வாழ்க்கை நடை, உங்களைச் சுற்றியுள்ளவர்களின் வாழ்க்கை நடையிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக இருக்கவேண்டும்.

இ. வசனம் 17-19. "பயபக்தியோடு வாழவேண்டுமென்றால், நியாயத்தீர்ப்பில் பட்சபாதமற்றவரும், ஓரவஞ்சனை இல்லாதவருமான பக்திக்குரிய அச்சமூட்டும் அதிசயமான தேவனுடைய பிரசன்னத்தில் நீ வாழ்கிறாய் என்ற இடைவிடாத உணர்வுடன் ஜீவிக்கவேண்டும். கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவுக்குள் அவர்களுடைய புதிய வாழ்க்கையைப்பற்றிய பயபக்தியும் கரிசனையுமுடையவர்களாக கண்டிப்பாக இருக்கவேண்டும். தேவன் சார்பாக வெளிப்படையாக பயபக்தியுடன் இருக்கவேண்டியது, அவர்களுக்கு அவசியமாயிருக்கிறது. அவர்களுடைய விடுதலைக்காக அவர் ஒருவரே அரிதான கிரயம் செலுத்தியவர். அத்துடன், அவர் ஒருவரே அவர்களுடைய கிரியைகளுக்காகவும், நடத்தைக்காகவும் கணக்கு கேட்கப் போகிறவர். ஆகவே, அவர்கள் தங்களுடைய கிரியைகளுக்காக அவர்களுடைய மனதை ஆயத்தம் செய்வது மட்டும் அல்லாமல், அவர்களுடைய வாழ்க்கை நடையையும் அவ்வாறே நேர்மையாக்கிக்கொள்ளவேண்டும்!

ஈ. வசனம் 18,20 "உங்கள் முன்னோர்களின் பாரம்பரியமாய் நீங்கள் அனுசரித்துவந்த வீணான நடத்தையினின்று...." கல்வாரியில் அவருடைய இரத்தபலியினால், நம்முடைய பெற்றோர்களிடமிருந்து, நம்மில் அநேகர் சுதந்தரித்துக்கொண்ட மதியீனமான வாழ்க்கையிலிருந்து கிறிஸ்து நம்மை மீட்டுக்கொண்டார்! (நாம் எல்லோரும் ஆதாமிடமிருந்து பெற்றோம்)

உ. வசனம் 21. "உங்கள் விசுவாசமும், நம்பிக்கையும் தேவன்மேலிருக்கும்படி..." நம்முடைய விசுவாசமும் நம்பிக்கையும், தேவனிடம் இருக்கிறது. எப்படியிருப்பினும், நாம் தேவனண்டைக்கிட்டிச்சேர, கிறிஸ்துவின் மூலமாக மட்டும் முடியும். (1 தீமோத்தேயு 2:5) அவர் நம்மோடு இல்லாமல், நாம் தேவனைக் கண்டடைய முடியாது. அவரைச் சேவிக்கமுடியாது, அவருக்குக் கனத்தைக் கொடுக்கவும் முடியாது. இயேசு, இவ்வாறு கூறினார். "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வாரான்". (யோவான் 14:6).

ஊ. அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் நாம் இவ்வாறு வாசிக்கிறோம் அவராலேயன்றி வேறொருவராலும் (எந்த மனிதனாலும்) இரட்சிப்பு இல்லை. (அப்போஸ்தலர் 4:12). நாம் இப்பொழுது, கிறிஸ்துவின் மூலமாக, தேவனில் விசுவாசம் வைக்கிறோம். நாம் பயபக்தியோடும், அவருக்கு முன்பாக கண்ணியமாகவும், இங்கு பரதேசிகள்போலவும் ஜீவிக்கிறோம்.

பரிசுத்த ஜீவியம்
1 பேதுரு 1:13-2:3

3. ஒருவரையொருவர், இருதயத்தின் ஆழத்திலிருந்து அன்புகூருவது, பரிசுத்த ஜீவியம்செய்ய நமக்கு உதவிசெய்கிறது. (1:22-25).

அ. வசனம் 22. "ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால்..." "சுத்தமாக்கி" என்றால், சன்மார்க்கமாகக் கறையற்றவர்கள் மற்றும் பிரிக்கப்பட்டவர்கள், என்று, பொருள்படும். "சத்தியம்" என்றால் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம் என்று நிச்சயமாகப் பொருள்படும். விசுவாசிகள் தொடர்ந்து, கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தின் மூலமாக சன்மார்க்கத்தில் சுத்தமானவர்களாகவும், முற்றிலும் தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்பட்ட வர்களுமாயிருப்பார்கள்.

ஆ. வசனம் 22. "சுத்த இருதயத்தோடே, ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்" "ஊக்கமாய்" அன்புகூருங்கள் என்றால், ஆர்வத்துடனும், தீவிரமான உணர்ச்சியுடனும் உங்களுடைய முழு பலத்துடனும் அன்புகூரவேண்டும் என்று பொருள்படும். "இருதயத்திலிருந்து" என்றால் "ஒருவரில் தியாகத்துடன் அன்பு கூரவேண்டும்" இதைப் பவுல், கொரிந்தியர்களுக்கு எழுதிய முதல் நிருபத்தில் விவரிக்கிறார். (1கொரிந்தியர் 13:4-8) இயேசு, இவ்வாறு கூறுகிறார்: "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு, ஒருவரிடத்திலும் இல்லை. கிறிஸ்து நமக்காகத் தம்முடைய ஜீவனைக் கொடுத்தார். ஒருவரிலொருவர் அன்பு கூருவதாகிய தொடர்பில், இதுவே அடிப்படையாக இருக்க வேண்டும். யோவான் 15:12-13; (1யோவான் 4:7-11)

இ. வசனம் 23-25. "... என்றென்றைக்கும் நிற்கிறதும், ஜீவனுள்ளதுமான தேவ வசனத்தினாலே, ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்கள்" பழைய ஏற்பாட்டு வேத வசனங்களைப் போலவே சுவிசேஷ செய்தியும், "ஜீவனுள்ளதும் (கிரியை நடப்பிக்கிற) என்றென்றைக்கும் நிலைத்திருக்கிற தேவனுடைய வார்த்தையாக" இருக்கிறது. அவன் (பேதுரு) பழைய ஏற்பாட்டு வேத வசனங்களையும், ஒருசமயம் அவன் உரிமையோடு எடுத்துக் கூறுபவைகளுக்கு, இயேசுவின் வார்த்தைகளையும் ஆதாரமாக பயன்படுத்துகிறான். (ஏசாயா 40:8; மத்தேயு 5:18) சுவிசேஷ செய்தியும், "ஒருவரிலொருவர், இருதயத்திலிருந்து ஊக்கமாக அன்புகூருங்கள்"! என்ற பழைய ஏற்பாட்டு வார்த்தைகளைக் கூறுகிறது என்பதையும் நாம் பார்க்கவேண்டுமென்று, அவர் விரும்புகிறார்.

ஈ. இயேசுவைப் பின்பற்றுகிறவர்களுக்கு (ரோமர் 10:17; அப்போஸ்தலர் 1:8) பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தையையும் (சுவிசேஷ செய்தி) தெய்வீக பலத்தையும் தருகிறார். அத்துடன் அவர், அவர்களை இந்த இரட்சிப்பின் செய்தியை (மத்தேயு 28:19-20). உலகமெங்கும் எடுத்துச் செல்லும்படியாக அனுப்புகிறார். அவர்கள் அந்த வார்த்தையைப் பிரசங்கிக்கும்போது, பரிசுத்த ஆவியானவர், ஆண்கள் மற்றும் பெண்கள் இருதயங்களில் அது, செயல்முறைப்படுத்தும்படியாகவும், பாவம், நீதி மற்றும் நியாயத்தீர்ப்பு, ஆகியவைகளைப்பற்றி அவர்கள் தவறான வழியில் இருப்பதை அவர்களுக்கு உணர்த்தி மனந்திரும்பும்படியாகவும் செய்கிறார். (யோவான் 16:8-11) இம்மாதிரியாகவே மக்கள் மறுபடியும் பிறந்தவர்களாகிறார்கள். (யோவான் 3:3-8). இது ஒருமுறை நடந்துவிட்டால், நாம் ஒருவரிலொருவர் இருதயத்திலிருந்து ஊக்கமாக அன்புகூரத் துவங்குவோம்!

உ. ரோமருக்கு எழுதின நிருபத்தில் பவுல் நமக்கு இவ்வாறு கூறுகிறார்: "... அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்?

பரிசுத்த ஜீவியம்
1 பேதுரு 1:13-2:3

பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படி பிரசங்கிப்பார்கள்? .... ஆதலால் விசுவாசம் கிறிஸ்துவின் செய்தியைக் (வேத வசனம்) கேட்பதினாலே வரும்" (ரோமர் 10:14-15,17)

4. ஆவிக்குரிய பாலை வாஞ்சையோடு கேட்பது, பரிசுத்த வாழ்க்கை வாழ உதவிசெய்யும். (2:1-3)

அ. வசனம் 1. ஆகையால் "சகல துர்க்குணத்தையும் சகலவித கபடத்தையும் .... ஒழித்து விட்டு" "ஒழித்துவிட்டு" என்றால், நம்முடைய சரீரத்தைவிட்டு நம்முடைய ஆடைகளை உரிந்து விடுவதற்கு ஒப்பாக இருக்கிறது. விவசாய பண்ணையில் உரம் தெளித்துவிட்டு, துர்நாற்றமான அழுக்கு ஆடைகளை உரிந்து எரிந்துவிடுவது போல் இருக்கிறது. அவிழ்த்து எரிந்து விடு, திரும்ப ஒருபோதும் அவற்றை எடுக்காதே! மற்றவர்களுக்கு விரோதமாக நம்முடைய இருதயங்களிலுள்ள காரியங்களில் இதுதான் நாம் செய்யவேண்டிய வேலை.

1. துர்க்குணம் - எல்லாவழிகளிலும் துன்மார்க்கமாக, உலகத்திலுள்ள அவிசுவாசிகள் போல் நடப்பது.

2. கபடம் - மற்ற மனிதர்களை தங்கள் சொந்த லாபத்திற்காக வேலைசெய்ய திறமையாக ஈடுபடுத்துவது. உன் சொந்த நன்மைக்காக மற்றொருவரை ஏமாற்றுவது.

3. வஞ்சகம் - ஒரு காரியத்தைச் சொல்லுவது ஆனால் வேறொன்றைச் செய்வது. முகமூடிக்குப் பின்னால் இருந்து பேசுவது. உண்மைக்குப் புறம்பாக நோக்கமுடையவர்களாயிருத்தல்.

4. பொறாமை - நம்முடைய இருதயத்தில், மற்றவர்களிடம் எரிச்சலடைவது. நீ வேறொருவர் வெற்றிபடைவதைப் பார்க்கும்போது, கோபத்தினாலும், பகைமையுணர்விலும் பற்றி எரிவது.

5. புறங்கூறுவது - ஒருவர் இல்லாமல் இருக்கும்போது அவரைக்குறித்து அவதூறாகப்பேசுவது, வீண் பேச்சு பேசுதல், ஒருவருடைய மனதின் உணர்வுகளில் வேதனையைக் கொடுப்பதற்காக அல்லது அவருடைய நல்ல பெயருக்கு ஊறுவிளைவிப்பதற்காக ஏதாவது வீணாகப்பேசுவது.

ஆ. நாம் உண்மையாகவே,

1. கிரியை நடப்பிக்க நம்முடைய இருதயங்களையும் மனதையும் ஆயத்தம் செய்திருந்தால்,

2. இங்கே, பயபக்தியோடு, பரதேசிகளைப்போல் ஜீவித்துக்கொண்டிருந்தால்,

3. ஒருவரையொருவர் இருதயத்திலிருந்து ஊக்கமான அன்புடையவர்களாயிருந்தால், அப்பொழுது, நாம் இந்த எல்லா காரியங்களையும் நம்முடைய இருதயத்திலிருந்து சீக்கிரமாக நீக்கிப்போட்டு, அவைகள் இனி ஒருபோதும் திரும்ப நுழையவிட அனுமதிக்கமாட்டோம்!

இ. வசனம் 2. "புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்" ஒரு புதிதாய்ப் பிறந்த குழந்தை தாய்பாலுக்காக வாஞ்சிப்பதுபோல,

பரிசுத்த ஜீவியம்
1 பேதுரு 1:13-2:3

புதிதாய் பிறந்த கிறிஸ்தவன், தேவனுடைய புனிதமான (கறைப்படாத) வார்த்தையைப்பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்ள வாஞ்சிக்கவேண்டும். (பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஆழமான ஆசை) விசுவாசிகள், பெந்தெகோஸ்தே நாளன்று விசுவாசித்தவர்களைப்போல் இருக்கவேண்டும் "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்தில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" (இடைவிடாமல் உண்மையான வாஞ்சையோடு தேடினார்கள்) (அப்போஸ்தலர் 2:42) அவர்கள் தேவனுடைய வார்த்தையை, 'மானானது நீரோடையை (தெளிவான) வாஞ்சித்துக் கதறுவது போல ...', தேவனுடைய வார்த்தைக்காக ஆசையாய்த் தேட வேண்டும் (சங்கீதம் 42:1)

ஈ. வசனம் 23. "நீங்கள் உங்கள் இரட்சிப்பில்வளரும்படி..." இக்காரணத்திற்காகவே, கிறிஸ்து அவருடையசபைக்கு அப்போஸ்தலர்களையும், தீர்க்கதரிசிகளையும், சுவிசேஷகர்களையும், மற்றும் போதகர்கள்— உபதேசிமார்களையும், ஈவாகக் கொடுத்திருக்கிறார். (எபேசியர்4:11-15)" அவரைப் பின்பற்றுகிறவர்கள், அவர்களுடையவிசுவாசத்திலும், அவரைப்பற்றும் அறிவிலும் வளர்ந்து ஒன்றுசேர்ந்து ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்று, அவர் விரும்புகிறார். கீழ்க்கண்டவாறு அவர்கள் இருக்க அவர் விரும்பவில்லை.

1. ஆவியில் வளராதவர்களாக.

2. பாதுகாப்பற்றவர்களாக

3. தங்களைக் காத்துக்கொள்ள கூடாதவர்களாக.

4. பொய்போதகர்களுக்கு இலகுவாக இரையாக இருப்பவர்களாக.

5. கட்டுப்பாட்டிற்குள் இல்லாத கப்பல்கள் போல.

உ. வசனம் 1 "இப்படியிருக்க, கர்த்தர் தயையுள்ளவரென்பதை, நீங்கள் ருசிபார்த்தீர்கள்". "ருசிபார்ப்பது" என்றால், ஏதாவது ஒன்றை நாமே அனுபவித்துப்பார்ப்பது. சுவிசேஷத்தின் வார்த்தைகளை அவர்கள் விசுவாசித்தின் வார்த்தைகளை அவர்கள் விசுவாசித்ததினால், அவர்களுடைய ஆவியில் ஒரு புதிய பிறப்பை, விசுவாசிகள் அனுபவிக்கிறார்கள். மற்றும் கிறிஸ்துவின் மூலமாக, தேவனுடன் அவர்கள் பெற்ற அவர்களுடைய புதிய தொடர்பு, நன்மையாக இருக்கிறது என்று அவர்கள் கண்டுகொண்டார்கள். இதை அவர்கள் போதுமான அளவு பெற்றுக்கொள்ள முடியவில்லை. "கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்", (சங்கீதம் 34:8). என்ற சங்கீதக்காரனின் அறைகூவலுக்கு பதில் கூறுவது போல், இவை யாவும் இருக்கிறது. இதே அறை கூவலை, இந்த கூட்டத்திற்கு வருகை தந்திருக்கும் ஒவ்வொரு அவிசுவாசியிடமும் நாம் உரிமையுடன் கூறுகிறோம்: "கர்த்தர் நல்லவர் என்பதை, நீ ருசித்துப் பார்க்க மாட்டாயா?"

1. அப்பொழுது, எங்களைப்போல நீயும் ஆவிக்குரிய பாலை வாஞ்சையோடு தேடுவாய்.

2. இதைத் தொடர்ந்து, நீ ஒரு பரிசுத்த வாழ்க்கை வாழ இது உனக்கு உதவிசெய்யும்.

முடிவுரை

அ. கிறிஸ்துவின் வருகைக்காக நாம் காத்துக்கொண்டிருக்கும்போது, ஒரு பரிசுத்த வாழ்க்கை வாழ, இக்காரியங்கள் நமக்கு உதவும்.

பரிசுத்த ஜீவியம்

1 பேதுரு 1:13-2:3

1. கிரியைசெய்ய நம்முடைய மனதை ஆயத்தபடுத்தவேண்டும். ஒரு பரிசுத்த, தேவ பக்தியுள்ள வாழ்க்கை வாழ முயற்சிசெய்யவேண்டும்.

2. இங்கே பயபக்தியுடன் ஜீவிக்கவேண்டும். தேவன் பட்சபாதமில்லாமல் நியாயம்தீர்ப்பார் என்றும், நாம் நம்முடைய கிரியைகளுக்கும் நடத்தைக்கும் கிறிஸ்துவின் நியாயாசனத்தின்முன் கணக்குக் கொடுக்கவேண்டும் என்றும், நாம் அறிவோம்.

3. இருதயத்திலிருந்து, ஒருவரிலொருவர், ஆழமாக அன்புகூரவேண்டும்.

4. ஆவிக்குரிய தூயபாலை, எப்போதும் வாஞ்சையோடு தேடவேண்டும். கிறிஸ்து மற்றும் வார்த்தை பற்றிய அறிவில் நாம் வளர்ந்து, ஊழியம்செய்ய ஆயத்தப்படவேண்டும்.

5. நாம் ஆயத்தப்பட்டவுடனே, மனிதர்கள் மத்தியில் நற்கிரியைசெய்ய துவங்கிவிடவேண்டும்.

இயேசுவிடம் வந்தவர்கள்
1 பேதுரு 2:4-12

முன்னுரை

அ. யூதர்கள், வாக்குத்தத்தம் செய்யப்பட்ட மேசியாவிற்காகக் காத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள், அவர் தங்களுடைய பகைஞரிடமிருந்து அவர்களை விடுவிக்கும் ஒரு அரசியல் தலைவராக அவர் இருப்பார் என்று நினைத்தனர். ஆனால், கிறிஸ்து "பாடுபடுகிற ஊழியனாக" வந்தார்.

ஆ. இக்காரணத்தினாலேயே, அவர்கள் அவரைப் புறக்கணித்தார்கள். இன்றும் அவர்கள், அவரைப் புறக்கணிக்கிறார்கள்! ஆனால், அவரிடம் வந்து, அவரில் விசுவாசம் வைக்கிறவர்கள், யூதராயினும், புறஜாதியாராயினும் அவர்களுக்கு அவர் அருமையானவர், மதிப்பிற்குரியவர். (விலைபெறப்பெற்றவர், தகுதியானவர்) மற்றும், அவரிடம் வருகிறவர்களே, கீழ்க்கண்டவாறு, மாற்றப்படுவார்கள்.

1.ஆவிக்குரியமாளிகையாகக் கட்டப்படுவதற்குஜீவனுள்ள கற்களைப்போலாவார்கள்.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாவார்கள்.

3. இந்த உலகத்தில் அந்நியர்களும், பரதேசிகளுமாயிருப்பார்கள்.

1. இயேசுவிடம் வருகிறவர்கள், ஆவிக்குரிய மாளிகையாகக்கட்டப்படுவதற்கு ஜீவனுள்ள கற்களைப்போலாவார்கள். (2:4-8).

அ. வசனம் 4. "ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்கள்" "ஜீவனுள்ள கல்" நிச்சயமாக இயேசுவாக இருக்கிறார். அவர் சிலுவையில் அறையப்பட்டார், மரித்தார் மற்றும் அடக்கம் செய்யப்பட்டார். ஆனால் அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து, என்றென்றைக்கும் நித்தியமாக ஜீவிக்கிறார்! இந்த ஒருவரிடமே நாம் இரட்சிப்புக்காக வந்தோம். ஆனால், அவருடைய சொந்த ஜனங்களாகிய யூதர்கள் அவரைப் புறக்கணித்துவிட்டனர். இருந்தபோதிலும் அவர் "தேர்ந்தெடுக்கப்பட்டவர்" (தேவனுடைய ஆசைக்குரிய நேசன்) தேவனுடைய மதிப்பிற்குரியவர், (மிகுந்த விலைமதிப்புக்குரியவர் மற்றும் தகுதியானவர்) ஏனெனில் அவர் சபைக்கு மூலைக்கல்லாக இருக்கிறார்.

ஆ. மூலைக்கல்லை, கட்டடத்தின் மூலையின் அடியில் சிறிதும் தவறின்றிபதித்துவிட்டால், அது, அந்த முழு மீதியான அமைப்பினுடைய குறுக்கான மற்றும் நேரான பாகங்களைத் துல்லியமாக சரியாக இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்த பயன்படுத்த பயன்படுத்தப்படுகிறது. இதுவே, கிறிஸ்துவையும், அவருடைய சபையையும் வருணிக்கும் ஓவியம்.

இ. "போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப்போட ஒருவனாலும் கூடாது" (1கொரிந்தியர் 3:11) கிறிஸ்துவை மூலைக்கல்லாக விவரித்துக் காட்ட பழைய ஏற்பாட்டிலிருந்து கருத்துக்களைப் பெற்றுக் கொண்டார்:

1. "இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை, நான் சீயோனிலே வைக்கிறேன். அது பரீட்சிக்கப்பட்டதும், விலைபெறப் பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக் கல்லாயிருக்கும். அவரில் விசுவாசம் வைக்கிறவன், (தன்னை அவரோடு சேர்த்துக் கொள்ளுகிறவன்) ஒரு போதும் கலங்கமாட்டான்". (ஏசாயா 28:16; எபேசியர் 2:20)

இயேசுவிடம் வந்தவர்கள்
1 பேதுரு 2:4-12

2. "வீடு கட்டுகிறவர்கள் (யூதர்கள்) ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கலாயிற்று. (மூலைக்கல்)" (சங்கீதம் 118:22)

இயேசு, திராட்சத் தோட்டக்குத்தகைக்காரர்கள் உவமையில், இம்மாதிரியாகவே தம்மை விவரிக்கிறார். (மத்தேயு 21:33-45; வசனம் 42-44)

ஈ. வசனம் 5. "நீங்களும் ஜீவனுள்ள கற்களைப் போல ...... (இருக்கிறீர்கள்)" "ஒரு காலத்தில் நாம், நம்முடைய பாவங்களில் மரித்தவர்களாயிருந்தோம்" என்று இது பொருள்படும். ஆகிலும், கிறிஸ்துவின் மூலமாக, நாம் ஆவியில் ஜீவனுள்ளவர்களாக இருக்கிறோம்: "பிதாவின் மகிமையினாலே, கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் (கிறிஸ்துவுக்குள்) நடந்து கொள்ளும்படி ....." (ரோமர் 6:4) மற்றும், மிகப்பெரிய அஸ்திபாரக்கல்லாகிய இயேசுவின் மீது, ஒவ்வொரு விசுவாசியும், படுக்கை நிலையில் அல்லது நேர் செங்குத்து நிலையில், சிறிதும் தவறில்லாமல், சரியான நிலையில் வைக்கப்படுகிறான்! அத்துடன், நாம் அந்த அஸ்திபாரக்கல்லுக்குப் பொருத்தமாக இருப்போம். (நிறம் மற்றும் தன்மையில் ஒன்று போலாகிவிடுவோம்).

உ. வசனம் 5. "நீங்களும் ஜீவனுள்ள கற்களைப் போல ..... ஆவிக்கேற்ற மாளிகையாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்". இயேசுவிடம் வந்து, அவரைத் தங்களுடைய ஆண்டவரும் இரட்சகருமாக ஏற்றுக்கொள்ளுகிற ஒவ்வொரு மனிதனும், அஸ்திபாரக்கல்லின் மீது, கட்டடத்தின் மற்றொரு கல்லாக வைக்கப்பட்டு, சபையாகிய ஆவிக்குரிய மாளிகையின் ஒரு பாகமாகிறான். சபை ஐக்கியத்தில் ஒவ்வொரு விசுவாசியின் தொடர்பும், உள்ளூர் சபை சுற்றுவட்டாரங்களில் செய்யும் பணியும், கற்களை ஒன்றுசேர்த்து வைக்கும், சாந்தாக (சுண்ணாம்பு+மணல்+நீர் கலவை) இருக்கிறது. 'இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார். அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது' (எபேசியர் 2:20-21)

ஊ. வசனம் 5. "பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும்..." விசுவாசிகள், அவருடைய தேவாலயத்தில் தேவனைச் சேவிக்கும் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளைப் போலும் இருக்கிறார்கள். (எபிரெயர் 5:1-2) அவர்கள் சன்மார்க்கமாகக் குற்றமற்றவர்களாகவும், தேவனுக்கென்று பரிசுத்தமாக்கப்பட்டவர்களுமாகிறார்கள். மேலும் அவர்கள்:

1. தேவனைக் கிட்டிச் சேரமுடியும் (எபிரெயர் 10:19-20)

2. கிறிஸ்துவின் மூலமாகத் தேவனைக் கண்டடையும்படியாகக் கடந்து செல்ல பாலம் கட்டுகிறவர்களாக வேலை செய்கிறார்கள். 2கொரிந்தியர் 5:19-20)

3. தேவனுக்குக் காணிக்கைகளைக் கொண்டு வருகிறார்கள். அவர்கள் தங்களையே ஜீவபலியாகத் தேவனுக்குப் படைக்கிறார்கள். (ரோமர் 12:1)

அவர்கள் அவர்களுடைய வேலை, உடைகள், ஆராதனை மற்றும் அவர்களுடைய துதி ஆகிய இவைகள் யாவையும் கூட தேவனுக்குப் பலியாகச் செலுத்துகின்றனர். அவர்கள் முற்றிலும் தேவனுக்கென்று அர்ப்பணிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். மனிதர்கள் மத்தியில் அவருடைய திட்டங்களும், சித்தமும் செய்யப்பட வேண்டுதல் செய்வார்கள் (மத்தேயு 6:10)

இயேசுவிடம் வந்தவர்கள்
1 பேதுரு 2:4-12

ஏ. வசனம் 7. 'விசுவாசிக்கிற உங்களுக்கு அது விலைபேறப் பெற்றது ....' பிதாவுக்கு அவர் எவ்வளவு விலைபேறப்பட்டவராக இருக்கிறாரோ அதே அளவிற்கு (மேன்மையானவர், மிகுந்த மதிப்பிற்குரியவர், தகுதியானவர்) விசுவாசிகளின் கண்களுக்கும் விலைபேறப் பெற்றவராக இருக்கிறார். ஏனெனில், அவர் நம்முடைய நிர்பந்தமான தேவையான நேரத்தில், நம்மைக் காப்பாற்றினார். அத்துடன், எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் நம்மீது பொழிந்தருளினார்!

ஏ. வசனம் 7-8. 'ஆனால் விசுவாசியாமலிருக்கிற மற்றவர்களுக்கு....' எப்படி இருப்பினும், இது, கிறிஸ்துவை புறக்கணித்தவர்கள் குறித்து சரியல்ல. கிறிஸ்து முதலாவது யூதர்களுக்கு வந்தார், ஆனால் அவர்கள், அவரைப் புறக்கணித்து விட்டனர். 'அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவர்களுக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை' (யோவா 1:11) இப்பொழுது, அவரைப் புறக்கணிப்பவர்கள் யாராயிருப்பினும் யூதரானாலும் புறஜாதியாரானாலும், வித்தியாசமின்றி, கிறிஸ்து அவர்களுக்கு கீழ்க்கண்டவாறு காணப்படுகிறார். 'தடுக்கலின் கல்லும், இடறுதலின் கன்மலையுமாயிருப்பார்' (ஏசாயா 8:14)

'இந்தக் கல்லின்மேல் விழுகிறவன் நொறுங்கிப் போவான், இது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப் போடும்...' என்று, இயேசு கூறுகிறார். (மத்தேயு 21:44) என்னை தள்ளிவிடுகிறவனை நியாயந்தீர்க்கிற ஒன்று (நியாயத்தீர்ப்பு) இருக்கிறது. (யோவா 12:48)

2. இயேசுவிடம் வருகிறவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாக இருக்கிறார்கள் (2:9-10)

அ. வசனம் 9. 'நீங்கள் தெரிந்தெடுக்கப்பட்ட மக்கள் புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள்,தேவனால்தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். (அவருடைய தனிசலுக்கைக்குரியவர்களாக, பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் தேசத்தாரைப் போலவே, தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.)' அவர்கள், அவருக்கு விலைபேறப்பட்டவர்கள்(மிகுந்தமதிப்பிற்குரியவர்கள், தகுதியுடையவர்கள்): (ஏசாயா 43:10, 20; 44:1-2)'தமக்குமுன்பாகநாம்பரிசுத்தமுள்ளவர்களும், குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்திற்கு முன்னே, நம்மை (தேவன்) தெரிந்துகொண்டபடியே, (கிறிஸ்துவை தம்முடைய ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக் கொண்டவர்கள்)......நம்மை (விசுவாசிக்கிறவர்களை) தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார்'. (எபேசியர் 1:4-6)

ஆ. மோசே இஸ்ரவேல் தேசத்தை விவரித்து இவ்வாறு கூறுகிறார்: 'நீங்கள் எனக்கு ஆசாரிய (இராஜரீக) இராஜ்ஜியமும், பரிசுத்த ஜாதியாயும் இருப்பீர்கள்' (யாத்திராகமம் 19:6) மறுபடியுமாக, 'நீ உன் தேவனாகிய கர்த்தரான எனக்குப் பரிசுத்த ஜனமாயிருப்பாய் ......' (உபாகமம் 26:18-19) இக்காரணத்தினாலே, பேதுரு, புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களை இவ்வாறு பார்க்கிறார்.

1. வசனம் 9. 'இராஜரீக ஆசாரியக் கூட்டம்' புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள், தேவனுக்கு முன்பாக, பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகிறார்கள் என்று, நாம் ஏற்கனவே பார்த்தோம். அவர்கள், அவரை நெருங்கிச் சேரக் கூடியவர்கள், மற்றும் அவரிடம் மற்றவர்கள்கடந்துசெல்ல, பாலம் கட்டுகிறவர்களாக வேலைசெய்கிறார்கள்,இத்துடன், அவர்கள், ஜீவபலியாகவும் தங்களை அவருக்குப் படைக்கிறார்கள் (1பேதுரு 2:5; ரோமர் 12:1)

இயேசுவிடம் வந்தவர்கள்
1 பேதுரு 2:4-12

2. வசனம் 9. 'ஒரு பரிசுத்த தேசம்' புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள், உலகத்திலுள்ள மற்றவர்களைவிட வித்தியாசமானவர்களாக இருக்கிறார்கள். அவர் பரிசுத்தராயிருக்கிறார். அவர் சன்மார்க்கமாக தூய்மையாகவும் குற்றஞ்சாட்டப்படாதவராகவும் இருக்கிறார். அவர், ஒரு பரிசுத்த வாழ்க்கை மாதிரியில் ஜீவிக்கிறார். அவர் பாவத்திலிருந்தும் உலகத்தின் வழிகளிலிருந்தும், விலகியிருக்கிறார் மற்றும், தேவனுடைய ஊழியத்திற்குத் தம்மை அர்ப்பணித்திருக்கிறார். (அவருடைய சித்தத்தையும் திட்டங்களையும் நிறைவேற்றுவதற்காக) பல்வேறு தேசங்களில் அவர்கள் வாழ்ந்து கொண்டிருப்பதைக் கருத்தில் கொள்ளாமல், கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கிற யாவரும் சேர்ந்து பரிசுத்த மக்களுள்ள ஒரு தேசத்தை' உண்டாக்குகிறார்கள்.

3. வசனம் 9. 'தேவனுக்குச் சொந்தஜாதியாக....' (அவரால் கிரயத்திற்குக் கொள்ளப்பட்ட உடைமை) இங்கே, பேதுரு, புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களைக் குறிக்கும் மற்றொரு பழைய ஏற்பாட்டு மேற்கோளைப் பயன்படுத்துகிறார்.

'நான் தெரிந்து கொண்ட, என் ஜனத்தின் தாகத்துக்கு, வனாந்தரத்தில் தண்ணீர்களையும் .... உண்டாக்குவதினால் ..... இவர்கள் என் துதியைச் சொல்லிவருவார்கள்' (ஏசாயா 43:2-21) ஓசியா 1:9-10) தேவனால் தெரிந்து கொண்ட மக்கள், இப்பொழுது அவருடைய துதியை சொல்லி வருவார்கள், இதுவே ஒரே வித்தியாசம், ஏனெனில் அவர்களை இருளிலிருந்து, அவருடைய ஆச்சரியமான ஒளிக்குள் (இயேசுகிறிஸ்துவினுடைய) அவர் அவர்களை அழைத்துக் கொண்டார்.

இ. வசனம் 10. 'முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை..... இரக்கம்பெறாதவர்களாயிருந்தீர்கள்'. பவுல் கீழ்க்கண்டவாறு கூறும்போது, இதே சத்தியத்தை வெளிப்படுத்துகிறார்: 'அக்காலத்திலே, கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும் இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக் கொள்ளுங்கள்' (எபேசியர் 2:12)

ஈ. வசனம் 10. 'இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள்......இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்'. மறுபடியும் பவுலுடைய வார்த்தைகள், பேதுருவுடைய வார்த்தைகளை எதிரொலிக்கிறது: 'முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே, சமீபமானீர்கள்....ஆகையால், நீங்கள் இனி அந்நியரும், பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும், தேவனுடைய வீட்டாருமாயிருக்கிறீர்கள்' (எபேசியர் 2:13, 19). ஒரு காலத்தில் கீழ்க்கண்டவாறு இருந்த நமக்கு எப்பேர்ப்பட்ட ஆச்சரியமான பதவி:

1. அவருடைய மக்களாக இராமல், தேவனைவிட்டு வெகுதூரம் விலகியிருந்தோம்'

2. கலகம் செய்கிறவர்களாக, தேவனுடைய கிருபையை இழந்தவர்களாயிருந்தோம்'

3. இயேசுவிடம் வருகிறவர்கள், இந்த உலகத்தில் அந்நியரும் பரதேசிகளுமாயிருப்பார்கள். (2:11-12)

அ. வசனம் 11 'பிரியமானவர்களே' இது அன்பை வெளிப்படுத்தும் ஒரு சொல். இது ஆதி சபையில் போதகர்களால் அடிக்கடி பயன்படுத்தப்பட்டது. (1கொரிந்தியர் 10:14; 1யோவா 3:2; 4:1; யூதா 1:3) பேதுரு, விசுவாசிகளை நேசித்தான்.

இயேசுவிடம் வந்தவர்கள்
1 பேதுரு 2:4-12

மற்றும் அவர்களுடைய நன்மைக்காக, உண்மையாகவே கருத்துள்ளவனாக இருந்தான். (யோவா 21:15-17)

ஆ. வசனம் 11. 'நான் உங்களுக்கு புத்திசொல்லுகிறேன்' 'புத்திசொல்லுகிறேன்' என்றால் நீ ஒருவருக்கு ஏதோ ஒரு மிகமுக்கியமான காரியத்தை சொல்லத்தக்கதாக, ஒருவரை உன் அருகில் வரும்படி செய்து கூறுவது, என்று பொருள்படும். பவுல் 'நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து கொள்ளுங்கள்' (எபேசியர் 4:1; 1கொரிந்தியர் 1:10, 4:6; 1தீமோத்தேயு 2:1)

இ. வசனம் 11. 'இந்த உலகத்தில் அந்நியரும் பரதேசிகளுமாயிருக்கிற ...' ஒருவன் அவனுடைய தாய் நாட்டை விட்டு, அந்நியதேசத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவனே அந்நியனும் பரதேசியும் என்று கூறப்படுவான். அவன் ஒரு அந்நிய இடத்தில் அவனுடைய ஜனத்தாரை விட்டு தூரமாக இருக்கிறான்.

ஈ. கிறிஸ்தவர்கள், பூமியில் தற்காலிகமாக வாழும் மக்கள். ஆனால், அவர்கள் பிறந்த வீடும் தேசமும் பரலோகமாக இருக்கிறது. 'நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை; வரப்போகிறதையே நாடித்தேடுகிறோம்' என்று இக்காரணத்தினாலேயே எபிரெய நிருப ஆசிரியர் இவ்வாறு கூறுகிறார்.

உ. வசனம் 11-12. 'மாம்ச இச்சைகளை விட்டு விலகுங்கள்'. மற்றும், நாம் இந்த அந்நிய நாம் அறியாத வெளிநாட்டிலே வாழும்போது கீழ்க்கண்டவாறு ஜீவிக்கவேண்டும்.

1. மாம்ச இச்சைகளைவிட்டு விலகியிருக்கவேண்டும். இங்கு இப்பாவங்கள் எங்கும் பரவி காணப்படுகிறது. இவை நம்முடைய ஆத்துமாக்களுக்கு விரோதமாகப் போர்செய்கிறவைகளாகவும் இருக்கிறது. கிறிஸ்து வந்து நம்மை வீட்டிற்கு அழைத்துச் செல்லும்வரை நாம் இங்கு தங்கியிருக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே, இந்த அந்நிய நாம் அறியாத நாட்டு மக்களுடைய பொல்லாத பாவ வழிகளுடன் நமக்கு எந்தவிதமான ஈடுபாடும் இருக்கவேண்டிய அவசியமில்லை.

2. புறஜாதிகளின் (அவிசுவாசிகள்) மத்தியிலே நல்நடக்கையுள்ளவர்களாயிருங்கள். நாம் பூமியில் சஞ்சரிக்கும் நாட்களில் கிறிஸ்துவைப் போல் இருக்கவேண்டும். ஒரு கிறிஸ்தவனுக்கு விரோதமாக, அவிசுவாசியொருவன் கொண்டுவரும் குற்றச்சாட்டுகள், பொய் என்று நிரூபிக்கப்பட வேண்டிய அளவுக்கு, அவன் வாழ்க்கை நடையின் வழிகளெல்லாம், காண்பதற்குக் கவர்ச்சிகரமானதாகவும், மிக நன்மை நிறைந்ததுமாயிருக்கவேண்டும்.

ஊ. 'காண்பது' என்ற சொல், நீண்ட நேரம்கருத்துடன் கவனிப்பது, என்று பொருள்படும். அவிசுவாசிகள், நம்முடைய வார்த்தைகளும் நம்முடைய நடத்தைகளும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்கிறதா என்று இடைவிடாமல் கவனித்துப்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இது, அநேகசந்தர்ப்பங்களில், அவர்கள் கிறிஸ்துவின் பக்கம் திரும்புகிறார்களா, அல்லது, அவரைவிட்டு விலகிச் செல்கிறார்களா, என்பதைத் தீர்மானிக்கும். "மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது," என்று இயேசு கூறினார். (மத்தேயு 5:16).

இயேசுவிடம் வந்தவர்கள்
1 பேதுரு 2:4-12

முடிவுரை

அ. இயேசுவிடம் வருபவர்கள் கீழ்க்கண்டவாறு காணப்படுவார்கள்:-

1. இவர்கள் ஜீவனுள்ள கற்களைப்போல் இருக்கிறார்கள். வெட்டப்பட்ட கல் துண்டுகள், துண்டுகளாக வைக்கப்படுவதுபோல, விசுவாசிகள், விசுவாசிகளாக வைக்கப்பட்டு, ஆவிக்குரிய மாளிகையாகக் கட்டப்படுகிறார்கள். இந்த மாளிகையில் தேவன், அவருடைய ஆவியில் வாசம் செய்கிறார்.

2. தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களாகிறார்கள். தேவனுடைய ஊழியத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட, இராஜரீக ஆசாரியக் கூட்டமாகிறார்கள். அவருக்குமட்டும் சொந்தமான, பரிசுத்த தேசத்தின் மக்களாகின்றனர்.

3. இந்த உலகத்தில் அந்நியரும், பரதேசிகளுமாயிருக்கிறார்கள். இந்த அந்நிய தேசத்தில் அவர்கள் இருக்கும் காலத்தில், புறஜாதிகள் மத்தியில், பொல்லாப்பிற்கு விலகி, தேவபக்தியுள்ள வாழ்க்கை வாழவேண்டும். இது, அவர்களுக்கு விரோதமாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் பொய்யானவைகள் என்று நிரூபிக்கவும், மற்றவர்கள் மனந்திரும்பி, கிறிஸ்துவை, அவர்களுடைய கர்த்தரும் இரட்சகருமாக ஏற்றுக்கொள்ள உதவிசெய்யும்.

ஆ. அநேகர், ஏற்கனவே கிறிஸ்துவண்டை வந்திருக்கின்றனர். கிறிஸ்துவுக்குள் உங்களுக்கு புதிய ஜீவன் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும், நீங்கள் தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் என்றும் உங்களுக்குத் தெரியும். எப்படியிருப்பினும், அநேகர், உண்மையில் பெரும்பாலான மக்கள் இக்காரியத்தைச் செய்யவில்லை. இந்த உலகம்தான் அவர்கள் வீடு என்று அவர்கள் நினைக்கிறார்கள். அவர்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள் அல்ல என்பதை அவர்கள் அறிவார்கள்.

**விசுவாசிகளின்
கீழ்ப்படிதல்
1 பேதுரு 2:13- 3:7**

முன்னுரை

அ. இன்றைய நமது வேதபாகம், 4:19 வசனத்தில் உள்ள: 'விசுவாசிகள் அநியாயமாக துன்புறுத்தப்படுவார்கள்' என்ற கருத்துடன் ஒத்துப் போகிறது, பேதுரு முதலாவது இந்த உபதேசத்தை, மேலான அதிகாரத்திற்கு நாம் கீழ்ப்படியவேண்டும் என்ற கருத்தில் செயல்முறைப்படுத்துகிறார். சபையை கொடூரமாக உபத்திரப்படுத்தின, மிருகத்தனமான இராஜாவாகிய நீரோவின் ஆட்சிகாலத்தில், ரோமாபுரியிலிருந்து, ஒரு சமயம் அவர் இந்த நிருபத்தை எழுதியிருக்கக்கூடும். ஆகவே ரோம சாம்ராஜ்ஜியத்தின் குடையின் கீழ் வாழ்ந்து வந்த அநேக விசுவாசிகள் அநீதியான தண்டனையை அனுபவித்து வந்ததை பேதுரு அறிந்திருந்தார்.

ஆ. இப்பொழுது, பேதுரு 'அநீதியாகப் பாடனுபவிக்கும்', அவருடைய உபதேசத்தை, வேலைக்கு நியமிக்கிறவர்களால் (எஜமான்களால்) நியமிக்கப்பட்ட வேலைக்காரர்கள் (அடிமைகள்) கடூரமாக நடத்தப்படுவதற்கும், அவிசுவாசியான கணவன்மார்களால் கொடுமையாக நடத்தப்படும் மனைவிமார்களுக்கும் பிரயோகிக்கிறார்.

இ. கிறிஸ்துவே நம்முடைய உன்னதமான முன்மாதிரி. அவர் சிலுவையை எவ்வாறு சகித்தாரோ, அவ்விதமாகவே, நாமும் மேலதிகாரிகளிடமிருந்தும் அவ்வாறே மனைவிகள் கணவன்மார்களிடமிருந்தும் வரும் அநீதியான உபத்திரவங்களைச் சகிக்க அழைக்கப்படுகிறோம்.

1. விசுவாசிகள் மேலதிகாரிகளுக்குக் கீழ்ப்படியவேண்டும் 2:13-17

அ. வசனம் 13-14. மனிதர்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்ட எல்லா அதிகாரங்களுக்கும் கீழ்ப்படியுங்கள். 'கீழ்ப்படிதல்' என்றால், நீங்கள் ஒருவருக்கு அடியில் பணிந்து இருக்கிறீர்கள் என்று பொருள்படும். அரசாங்கத்தில் இருப்பவர்கள், நம்மை ஒரு காரியம் செய்யச் சொல்லும்போது, நாம் கீழ்ப்படியவேண்டும். ஆதிசபையில் ரோமர் சட்டங்களுக்கு எவ்வாறு கீழ்ப்படிந்தார்களோ அவ்வண்ணமாகவே, நாமும் நம்முடைய தேசத்தில் அதிகாரியாக இருப்பவர்களால் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களுக்குக் கீழ்ப்படியவேண்டும். 'இராயனுடையதை இராயனுக்குக் கொடுங்கள்' (மத்தேயு 22:21) என்று இயேசு கூறுவதற்கு, இது இசைந்ததாக உள்ளது. இந்த அறிவுரைகளையே, பவுல் ரோமருக்கு எழுதின நிருபத்தில் கொடுக்கிறார். (ரோமர் 13:1-7; நீதிமொழிகள் 24:21)

ஆ. நிலவரப்படுத்தப்பட்ட சட்டங்களுக்குக், 'கர்த்தர் நிமித்தம்' நாம் கீழ்ப்படிய வேண்டும் என்று, பவுல் நமக்குக் கூறுகிறார். அதிகாரத்தில் உள்ளவர்களால் நியமிக்கப்பட்ட சட்டங்களுக்கு நாம் முற்றிலும் கீழ்ப்படியும் போது, நாம் பிரசங்கிக்கிற இயேசுவுக்கும், சுவிசேஷத்திற்கும் ஒரு நல்ல சாட்சியைக் கொடுக்கிறோம்.

ஈ. வசனம் 15. 'நீங்கள் நன்மை செய்கிறதினாலே புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குகிறீர்கள்' கிறிஸ்தவர்கள் வித்தியாசமானவர்கள் உலகத்தின் வழிபாடுகளுக்கு அவர்கள் ஒத்துப்போகமாட்டார்கள். கிறிஸ்துவுக்குப் புறம்பானவர்கள் நாம்ஏன் வித்தியாசமானவர்களாய் இருக்கிறோம் என்பதை விளங்கிக்கொள்ள முடியாது. நாம் செய்கிற அநேகக் காரியங்களைப்பற்றி, அவர்கள் அறிய முடியாது. ஆகவே, அவர்கள் ஒருவருக்கொருவர், நம்மைப்பற்றி வம்பு பேசி, நமக்கு விரோதமாக இகழ்ச்சியாகப் பொய்யான குற்றச்சாட்டுகளை பலமாகச் சாற்றுகிறார்கள். ஆகிலும், நாம் மேலதிகாரத்தில் உள்ளவர்களின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிவதினால், நம்மைக் குற்றஞ்சாட்டுகிற அநேகரை நாம் அடக்கமுடியும். (அவர்களுடைய வாய்களுக்குக் கடிவாளம் போடமுடியும்)

விசுவாசிகளின் கீழ்ப்படிதல்
1 பேதுரு 2:13- 3:7

உ. வசனம் 16. 'சுயாதீனமுள்ளவர்களாயிருந்தும், உங்கள் சுயாதீனத்தைத் துர்க்குணத்திற்கு மூடலாகக் கொண்டிராதேயுங்கள்' 'சுயாதீனமுள்ள வர்களாய்', என்றால் பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தின் சட்டதிட்டங்களிலிருந்து விடுவிக்கப்படுவது என்று, இங்கு பொருள்படும். கிறிஸ்துவின் மூலமாக விசுவாசிகள் கீழ்க்கண்ட காரியங்களிலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள்:

1. பாவத்தின் சக்தியிலிருந்தும் அதனால் வரும் ஆவிக்குரிய மரணம்,

2. பாவம் செய்ததைச் சார்ந்துவரும் குற்றமுள்ள மனச்சாட்சியிலிருந்து மற்றும் தேவனுக்கு விரோதமாகக் கலகம் செய்வதும்,

3. வருங்காலத்தைப்பற்றி நம்பிக்கையற்ற பயங்கரமுடிவு

4. பழைய ஏற்பாட்டு நியாயப் பிரமாணத்தின்படி செய்யவேண்டுமென்று விரிவாக விவரிக்கப்படும் நிபந்தனைகளை நிறைவேற்றவேண்டிய நிர்பந்தம்

ஊ. வசனம் 6. 'மூடலாக', என்றால் மேல் ஆடையினால் முற்றிலும் மூடி மறைத்துக் கொள்வதுபோல், என்று பொருள்படும். கிறிஸ்துவுக்குள் உள்ள அவர்களுடைய சுதந்தரத்தை, தேவ பயமற்ற நடக்கைகளை மறைக்கும் மூடலாக, விசுவாசிகள் பயன்படுத்தக்கூடாது என்று, பேதுரு விசுவாசிகளை எச்சரிக்கிறார். 'இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரிக்கக் கூடாது', என்று பவுல் கூறும்போது, இதே அபாயத்திற்கு விரோதமாகவே, அவர் நம்மை எச்சரிக்கிறார். (கலாத்தியர் 5:13)

எ. வசனம் 17. 'எல்லாரையும் கனம்பண்ணுங்கள்'. 'கனம்பண்ணுவது', என்றால் ஈவாக உள்ள உடைமையைப் போல் மதிப்பிடுவது, என்று பொருள்படும். கிறிஸ்துவுக்குள் நம்முடைய சுதந்தரத்தை, தேவபயமற்ற நடத்தைக்கு மூடலாகப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, யாவரையும் கனம்பண்ணுவதைக் காட்ட நாம் அதைப் பயன்படுத்தவேண்டும்:

1. விசுவாசிகளின் சகோதரத்துவத்துக்கு.

2. தேவன்.

3. இராஜா மற்றும் அவன் யாருக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறானோ அவன் (ஆளுநர்கள் - ரோமர் 13:7) நாம் அவர்கள் தலைமையின் கீழ் பாடனுபவிக்க வேண்டியதாயிருந்த போதிலும், எவ்வாறு ஆதிசபையில் இருந்து விசுவாசிகள், ரோம இராஜ்ஜியத்தின் அரசர்களுக்கடியில் இருந்தார்களோ அவ்வாறு நாம் அவர்களை மதிக்கவேண்டும்.

ஏ. 'இயேசுவின் நாமத்தைக் குறித்து எவ்வளவும் பேசவும் போதிக்கவும் கூடாதென்று அவர்களுக்குக் கட்டளையிட்ட (அப்போஸ்தலர் 4:18) அந்த ஒரு சமயம் மட்டுமே பேதுரு மேலான அதிகாரத்தை எதிர்த்து நின்றான். மேல் அதிகாரிகள், தேவனால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்திற்கப்பால் செல்லும்போதும், தேவனுடைய சன்மார்க்கச் சட்டங்களுக்கும், சுவிசேஷ செய்தி பரவுவதற்கும் எதிராகச் சட்டங்களை ஏற்படுத்தும்போதும், விசுவாசிகள், 'மனுஷருக்குக் கீழ்ப்படிவதைக் காட்டிலும் தேவனுக்கு கீழ்ப்படியவேண்டும்' (அப்போஸ்தலர் 4:19-20).

விசுவாசிகளின்
கீழ்ப்படிதல்
1 பேதுரு 2:13 - 3:7

ஆகிலும், அவர்கள், அவ்வாறு செய்யும் போது, அநியாயமாகத் துன்பப்படுவார்கள் என்பதை, அவர்கள் விளங்கிக்கொள்ளவேண்டும்' ஆதித் திருச்சபையில், கிறிஸ்துவை மறுதலிக்க மறுத்தபோது, அரசர்களுடைய கரங்களிலிருந்து அநேக விசுவாசிகளுக்கு இதுவே நடந்தது.

2. அவர்களை வேலைக்கு அமர்த்திக்கொண்ட எஜமான்களுக்கு, விசுவாசிகள் கீழ்ப்படிய வேண்டும்.

அ. வசனம் 18. 'வேலைக்காரரே, அதிக பயத்துடனே உங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்'. சில வரலாற்று ஆசிரியர்கள், ரோம சாம்ராஜ்ஜியத்தில் 60 மில்லியன் அடிமைகள் இருந்ததாகக் குறிப்பிடுகின்றனர் அவர்களில் சிலர், அன்பாகவும் நேர்மையாகவும் நடத்தப்பட்டார்கள். ஆனால் பெரும்பான்மையானவர்கள் அவ்வாறு அல்ல. இக்காரணத்தினாலேயே, கொடுமையாகவும், அநீதியாகவும் நடத்தப்பட்ட அநேக அடிமைகள், கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, சபையின் அங்கத்தினர்களானார்கள்.

ஆ. இன்று, உலகத்தில், இந்த அடிமைத்தனப்படுத்தும் வழக்கம் ஏறக்குறைய முற்றிலும் நீக்கப்பட்டுவிட்டது. ஆகவே, பேதுருவுடைய வார்த்தைகளை, நம்முடைய நவீனகாலசமுதாயத்திற்குப்பயன்படுத்துவோமானால் ,இவ்வாறு சொல்லவேண்டும்.

"வேலைக்காரர்களே, உங்களை வேலைக்கு அமர்த்தினவர்களுக்கு நீங்கள் கீழ்ப்பட்டவர்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள், அவர்கள், ஒரு ஈவாகப்பெற்ற உடைமைகளாக எண்ணி, கனம்பண்ணுங்கள், நீங்கள் செய்யும்படியாக அவர் கூறுகிறவைகளைக் கீழ்ப்படிந்து செய்யுங்கள்". (எபேசியர் 6:5-8).

இ. வசனம் 18 "...நல்லவர்களுக்கும் சாந்தகுணமுள்ளவர்களுக்கும் மாத்திரம் அல்ல முரட்டுகுணமுள்ளவர்களுக்கும்..."
"முரட்டுகுணமுள்ளவர்கள்" என்றால், நியாயத்தைப் புரட்டி, மாறுபாடாகச் செயலாற்றுகிறவன், என்று பொருள்படும். அவன், மற்றவர்களோடு உள்ள அவனுடைய தொடர்புகளில், நியாயமற்றவனாகவும், துஷ்டத்தனமுள்ளவனாகவும், நேர்மையற்றவனாகவும் இருக்கிறான். எனவே, அநேகமுறைகள்கொடுமையாக நடத்தப்பட்டபோதிலும், விசுவாசிகளான அடிமைகள், அவர்களுடைய எஜமான்களுக்கு மரியாதை கொடுத்து அவர்கள் செய்யும்படியாகச் சொல்லுகிறவேலைகளை அக்காரியங்களைக் கருதாமல், செய்யவேண்டும். கிறிஸ்தவ ஜீவியத்தின் இந்தக் கொள்கை, சபையில் இன்று ஊழியத்திற்கு அமர்த்தப்பட்ட, ஊழியர்களால் கடைபிடிக்கப்படவேண்டும்.

ஈ. வசனம் 19-20. "இதற்காகவே நீங்கள் அழைக்கப்பட்டீர்கள்" மானிடர்களின் பாவங்களுக்காக, (அவர்களுடைய ஆவியில் குணமடைவதற்காக). அவர் சிலுவையில் அறையப்பட்டு, கிறிஸ்து அநீதியாகப் பாடுகளை அனுபவித்ததுபோலவே, பெரும்பாலான கிறிஸ்தவர்களும், பொல்லாத எஜமான்களின் கரங்களில், அநீதியாக துன்பங்களை அனுபவிக்க அழைக்கப்படுகிறார்கள். ஆகவே இந்தச் சூழ்நிலையில், கிறிஸ்து நமக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறார். அவர்.

1. தூஷிக்கப்படும்போது பதில் பேசவில்லை

2 பாடுபடுத்தப்படும்போது பயமுறுத்தவில்லை,

விசுவாசிகளின்
கீழ்ப்படிதல்
1 பேதுரு 2:13- 3:7

3. பழிக்குப்பழி வாங்குவதற்கு அல்லது பயமுறுத்துவதற்குப் பதிலாக, அவர் தம்மைத்தாமே, தேவனிடத்தில் நம்பிக்கைவைத்து ஒப்புக்கொடுத்தார்.

உ. "ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்; ....பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார், என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்". (ரோமர்12:17,19). என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறும்போது, மேற்கூறிய கருத்துகளை எதிரொலிக்கிறார்.

ஊ. பெரும்பாலான மக்கள், அவர்கள் பக்கம் தவறு காணப்படும்போது, பாடுகளை சகித்துக்கொள்ளுவார்கள். சட்டப்பூர்வமாக சரியாக இல்லாமலும், உண்மைபற்றதுமான ஒரு காரியத்திற்காகத் துன்பத்தை சகிப்பதற்கு ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவின் சிந்தைபோடு இருக்கவேண்டும். (பிலிப்பியர் 2:5-8) திரும்ப தாக்குவதுதான் ஒரு இரட்சிக்கப்படாத ஒருவரின் இயற்கையான பதில். நம்முடைய மேலதிகாரிகளோடுள்ள நம்முடைய தொடர்பில், நம்முடைய பதில் இப்படிப்பட்டதாக இருக்கக் கூடாது. எந்த சூழ்நிலையிலும், நாம் நேர்மைபற்ற முறையில் நடத்தப்படும்போது, நம்முடைய பதில் இப்படி இருக்கும் என்று நாம் நம்பவில்லை (1கொரிந்தியர் 6:7).

3. விசுவாசிகளான மனைவிமார்கள் அவிசுவாசியான கணவன் மார்களுக்குக் கீழ்ப்படியவேண்டும். (3:1-7)

அ. இன்று உலகத்திலுள்ள அநேக நாடுகளிலுள்ள சபைகளில், விசுவாசிகளான மனைவிமார்கள், அவிசுவாசிகளான கணவன்மார்களுடன் இருப்பது, அபாயகரமான பிரச்சனைக்குரியதாக இருக்கிறது. இவ்வாறாகவே ஆதிசபையிலும் இது ஒருஅபாயகரமான பிரச்சனையாக இருந்ததாகக் காணப்படுகிறது. பவுலும் கூட கொரிந்து சபைக்கு அறிவுரை கூறும்போது, இந்தக் காரியத்தைக் குறித்து பேசவேண்டியது அவசியம் என்று கண்டார். (1கொரிந்தியர் 7:12-16).

ஆ. வசனம் 1. "அந்தப்படி மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்," விசுவாசிகள் எவ்வாறு மேலான அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிகிறார்களோ, அடிமைகள், எஜமான்களுக்குக் கீழ்ப்படிகிறார்களோ, அவ்வாறாகவே, மனைவிமார்கள் அவர்களுடைய கணவன்மார்களுக்குக் கீழ்ப்பட்டவர்கள் என்பதை அறிந்துகொள்ள வேண்டும். (எபேசியர் 5:22-24). அவர்கள் கீழ்ப்படிதலுள்ளவர்களாயிருக்கவேண்டும். மனச்சாட்சிக்கு விரோதமான சன்மார்க்கநெறிகளை மீறுகிற காரியங்களைத் தவிற, அவர்கள் கூறும் மற்ற காரியங்களை நிச்சயமாகச் செய்யவேண்டும்.

இ. வசனம் 1-2,4. "அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால் .... மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள்." விசுவாசிகளான மனைவிமார்கள், அவிசுவாசிகளான அவர்கள் துணைவர்கள், எப்போதும் குற்றங்கண்டு தொந்தரவுசெய்வதாலோ, விவாதிப்பதினாலோ, அல்லது பிரசங்கம் செய்வதாலோ, வெற்றிபெறமுடியாது. அவர்களுடைய மிகச்சிறந்த சக்திவாய்ந்த ஆயுதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள:

**விசுவாசிகளின்
கீழ்ப்படிதல்
1 பேதுரு 2:13 - 3:7**

1. அவர்களுடைய கணவன்மார்களுக்குக் கீழ்ப்படிதல்.

2. குடும்பத்தில் தேவபக்தியுள்ள வாழ்க்கை நடை சுத்தமான, புனிதமான மற்றும் குற்றஞ்சாட்டப்படமுடியாத நடத்தை.

3. சாந்தமும் (சாதுவான, தாழ்மையுள்ள) அமைதலுமுள்ள; (உன்னுடைய இடத்தைக் காத்துக்கொள்,குழப்பம் ஏற்படக் காரணமாயிராதே) இனிய கவர்ச்சிகரமான ஆவியுடன் இரு.

மனைவியானவள் குடும்பத்தில் அநீதியாகத் துன்பப்பட்டுக்கொண்டிருந்தால், மனைவிக்கு இப்படிப்பட்ட வாழ்க்கை நடை கடினமாகக் காணப்படும்.ஆகிலும் அவள் சகித்துக்கொண்டால், அவளுடைய கணவனை கிறிஸ்துவுக்கு ஆதாயம் செய்து, குடும்பத்திலும் சமாதானத்தைக் கொண்டுவருவாள்.

ஈ. வசனம்3. "புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல்...." கற்கள் பதித்த தலையில் சொருகும் சீப்பு...பொன்தலை கட்டுகள், நாடாக்கள் (ரிப்பன்) மற்றும்செந்திறன்மிக்க, விலையுயர்ந்த ஆபரணங்களும், ஆடைகளும், ஆகிய இவைகள், ரோமர்நாட்டு பெண்களின் உயர்ந்த நாகரீக அலங்காரப் பொருட்களுடன் அடங்கும்.அவிசுவாசியான கணவன்மார்களையுடைய மனைவிகளுக்கு பேதுரு அறிவுரை அளிக்கும்போது, இவை எல்லாம் அவர் மனதில் இருந்தது. இப்படிப்பட்ட அலங்காரம், அவிசுவாசிகளான அவர்களுடைய துணைவர்களை கிறிஸ்துவுக்கு ஆதாயம் செய்வதற்கு ஏற்ற ஓர் கருவியாக பயன்படாது.

உ. வசனம் 5-6, இப்படியே பூர்வத்தில்...பரிசுத்த ஸ்திரீகள்...தங்களை அலங்கரித்தார்கள். அவிசுவாசியான அவர்களுடைய கணவன்மார்களுடன் எவ்விதமாகத் தொடர்புகொள்ளவேண்டும் என்பதை விளக்க, பேதுரு சாராளை, ஒரு எடுத்துக்காட்டாக பயன்படுத்துகிறார். சாராள், ஆபிரகாமை என் "ஆண்டவன்" என்று அழைக்கும் அளவிற்கு, அவள் பணிவுடன் நடந்துகொண்டாள். (ஆதியாகமம் 18:12) அவளுடைய கணவனை அவர் மிக உயர்வாக மதித்தாள் என்று இது பொருள்படும். அதிகாரத்தில் அவன் உயர்ந்தவன் என்றும், குடும்பசம்பந்தமான காரியங்கள் அவன் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது என்பதையும் அவள் அறிந்திருந்தாள்.

ஊ. "நீங்கள் நன்மைசெய்து, ஒரு ஆபத்திற்கும் பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள். கிறிஸ்தவ பெண்கள், அவர்களுடைய கணவன்மார்களுடன் தொடர்புகொள்ளும்போது, சாராளைப்போல் மாறினார்களேயானால், சாராளுடைய குமாரத்திகளாவார்கள். இதுவே அவர்கள் செய்யவேண்டிய சரியான காரியம் என்று பேதுரு கூறுகிறார். மற்றும், அவர்கள் "பயத்திற்கு" இடம் கொடுக்கக் கூடாது. அவிசுவாசியான கணவனுடன் ஜீவிப்பதின் விளைவாக மறைவாக ஏதும் தீங்குநேரிடக் கூடும் என்ற பயத்தில் விசுவாசத்தில் அசைக்கப்படவோ, திகிலடையவோ கூடாது என்று பொருள்படும் (நீதிமொழிகள் 3:25-27).

எ. "புருஷர்களே, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடன் வாழ்ந்து..." இது விசுவாசிகளான கணவன்மார்களுக்குக் கூறப்பட்டது. அவர்கள் கீழ்க்கண்டவாறு இருக்கவேண்டும்.

விசுவாசிகளின் கீழ்ப்படிதல்
1 பேதுரு 2:13- 3:7

1. விவேகத்துடனும் கருணையுடனும் நடந்துகொள்ளவேண்டும்----அவர்களுடைய மனைவிகளுக்கடுத்த காரியங்களைப்பற்றி சிந்திக்கும்போது அவர்களுடைய எல்லா அறிவையும், விவேகத்தையும் பயன்படுத்த வேண்டும்.

2. அவர்களுடைய மனைவிகளை மதித்து நடத்தவேண்டும்----அவர்களுடைய மனைவிகளை விலையேறப்பெற்றவர்களாகவும் அதிக கண்ணியத்திற்குரியவர்களாகவும் எண்ணவேண்டும்.

3. அவர்களுடைய மனைவிகளை பலவீனபாண்டங்களாக எண்ணி நடத்தவேண்டும். ----அவர்கள் சரீரபிரகாரமாக வித்தியாசமானவர்கள் மற்றும் சாதாரணமாக பலவீனமானவர்கள் ஆகவே, அவள் வீட்டில் செய்யவேண்டிய வேலைகளில் சிலவற்றை விட்டுவிட அனுமதியளிக்கவேண்டும்.

4. கிருபையின் ஈவாகிய நித்தியஜீவனில் பங்குபெற அவர்களுடைய மனைவிகளும் சுதந்தரவாளிகள் என்பதை அறிந்து கொள்ளவேண்டும்---மனைவிகளும் இரட்சிப்பின் அனுபவத்தை, அவர்களுடைய கணவன்மார்களுக்குரிய அதே நிபந்தனையின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளுகிறார்கள். (கலாத்தியர் 3:28).

ஏ. வசனம் 7. "எனவே உங்கள் ஜெபத்திற்குத்தடை ஏற்படாதபடிக்கு...." குடும்பத்தில் ஒரு பிளவு ஏற்படும்போது, கணவன், மனைவி ஆகியவர்களின் ஜெபங்கள் தடைபடுகிறது. (முறியடிக்கப்படுகிறது, அழிக்கப்படுகிறது, அறுந்துபோய்விடுகிறது, விலக்கப்படுகிறது). மனைவி பணிந்து நடந்துகொள்வதைக் காட்டுவதினாலும், கணவன் சிந்தித்து கரிசனையுடன் இருப்பவனாகவும் இருந்தால், அல்லது இருவரும் கிறிஸ்துவின் முன்மாதிரியை; அவர்கள் அநீதியாகத் துன்பப்படும்போது பின்பற்றியிருந்தால், வாழ்நாள் முழுவதும் அவர்கள் வல்லமையாக, தேவனுடன் ஒற்றுமையுடன் தொடர்புகொள்ள முடியும்.

முடிவுரை

அ. மேலான அதிகாரம் உள்ளவர்களுக்கும், எஜமான்களுக்கும் விசுவாசிகள் கீழ்ப்படிய வேண்டுமென்பது, வரலாறு அல்லது உலகக் கலாச்சாரத்தின் ஒரு குறிப்பிட்ட காலத்தின் எல்லைக்குட்பட்டதல்ல. அவ்வாறாகவே, மனைவி அவளுடைய கணவனுக்குக் கீழ்ப்படிதலும், கணவன்மார்கள், அவர்களுடைய மனைவிகளிடம் தயவாக இருக்கவேண்டுமென்பதும் இருக்கிறது.

ஆ. இந்த எல்லா சூழ்நிலைகளிலும், விசுவாசிகள் சந்தேகமின்றி அநீதியாகப் பாடுகளை அனுபவிப்பார்கள். இப்படிப்பட்டவைகள் நடக்கும் போது நாம் கிறிஸ்துவைப் பார்த்து அவர் வாழ்ந்த வண்ணமாகவே ஜீவிக்கும்படி பவுல் நமக்குப் போதிக்கிறார்:

1. அவர்கள், அவரை அவமதிக்கும்போது பதில் சொல்லவில்லை.

2. பாடுபடுத்தும்போது பயமுறுத்தவில்லை அதற்குப்பதிலாக, நீதியுள்ள நியாயாதிபதியாகிய தேவனிடத்தில் முற்றிலுமாக நம்பிக்கை வைத்து தம்மை ஒப்புக்கொடுக்கிறார்.

நன்மைசெய்து பாடநுபவித்தல்
1 பேதுரு 3:8 - 22

முன்னுரை

அ. கிறிஸ்துவுடன் அவர்களுக்கிருந்த தொடர்பினால் பாடுகளை அனுபவித்த விசுவாசிகளுக்கு, பேதுருவினுடைய இந்த நிருபத்தின் இந்த பாகம் எழுதப்பட்டுள்ளது. அவிசுவாசிகள் அவர்கள்மீது நிந்தைகளையும் அவதூறுகளையும் சுழற்றி எறிந்து கொண்டிருந்தார்கள் மற்றும் சரீரத்தில் துன்புறுத்தப்போவதாகவும் பயமுறுத்தினார்கள். ஆகவே, பேதுரு, அவர்களுடைய பகைஞர்களைத் தொடர்ந்து ஆசீர்வதிக்கும் படியாகவும் கிறிஸ்துவில் அவர்களுடைய நம்பிக்கையை வைக்கும்படியாகவும் சொல்லி, அவர்களை ஊக்கப்படுத்தினார். அவர்கள் பயப்படுவதற்கு இடங்கொடுக்கக்கூடாது. ஜலப்பிரளயத்தில் நோவாவையும், அவனுடைய குடும்பத்தையும் காப்பாற்றியது போலவே, கிறிஸ்து, அவர்களைப் பாதுகாத்து விடுவிப்பார்!

1. நன்மைசெய்துபாடுகளை அனுபவிக்கும்போது,பதிலுக்கு ஆசீர்வதித்தல் (3:8-12).

அ. வசனம்8. "மேலும் நீங்களெல்லாரும்" 2:18-25 வசனங்களில், பேதுரு அடிமைகளிடம் நேரடியாகப் பேசுகிறார். 3:1-6 வசனங்களில், அவிசுவாசிகளான கணவன்மார்களையுடைய மனைவிகளை நோக்கிப்பேசுகிறார். 3:7 வசனத்தில் விசுவாசிகளான கணவன்மார்களுக்குப் பேசுகிறார். ஆனால் 3:8-12, வசனங்களில் பரிசுத்தவான்களை நோக்கிப்பேசி, அவர்களிடம், கீழ்க்கண்டவாறு செய்யும்படி கூறுகிறார்.

1. ஒருவரோடொருவர் ஒற்றுமையுடன் வாழுங்கள்.

2.ஒருவருக்கொருவர்கருணை காட்டுங்கள்.

3.சகோதரர்களைப்போல் அன்பு கூருங்கள்.

4. ஒருவருக்கு ஒருவர் தயவாகவும், தாழ்மையாகவும் இருங்கள்.

ஆ. நாட்கள் அதிகமதிகமாய் கடினமாகும்போது, விசுவாசிகள் மேற்கூறிய காரியங்களை இன்னும் அதிகமாக செய்யவேண்டியது அவசியமாயிருக்கிறது. படுகொலையிலிருந்து நாம் உயிர்தப்பவேண்டுமானால், நமக்குள் ஒத்துழைக்கும் ஆவியும், சுயவெறுப்பும், மற்றவர்களிடம் தாழ்மையாக இருக்கும் ஆவியும், நமக்கு அதிக தேவையாக இருக்கிறது.

இ. வசனம் 9. தீமைக்கும், உதாசினத்திற்கும் பதிலாக ஆசீர்வதியுங்கள். இது, கிறிஸ்து வாழ்ந்தும், போதித்தும் காட்டின கிறிஸ்தவ கொள்கையாக இருக்கிறது. சிலுவையிலிருந்து, அவரை சிலுவையில் அறைந்தவர்களுக்காக இவ்வாறு ஜெபித்தார். "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்". (லூக்கா23:34) அவருடைய மலைப்பிரசங்கத்தில், அவர் கீழ்க்கண்டவாறு போதித்தார். "ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு. உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள், உங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்காக ஜெபம்பண்ணுங்கள்". (மத்தேயு 5:39,44).

ஈ. புற ஜாதிகள் சபைகளுக்கு அப்போஸ்தலனாகிய பவுல் இந்த, இதே செய்தியை எடுத்துச்சென்றார்.

நன்மைசெய்து பாடநுபவித்தல்
1 பேதுரு 3:8 - 22

"தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்--பழிவாங்காதீர்கள் .....அதற்கு மாறாக, உன்னுடைய பகைஞன் பசியாயிருந்தால் ஆகாரம் கொடு, தாகமாயிருந்தால், அவனுக்குப் பானம் கொடு, தீமையை நன்மையினால் வெல்லுங்கள் (ரோமர்12:17-21). மேலும், "ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமைசெய்யாதபடி பாருங்கள்". (1தெசலோனிக்கேயர் 5:15).

உ. வசனம் 9. அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்...." இந்த வாழ்க்கை நடையில் வாழ நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். கிறிஸ்தவர்கள், தீமை மற்றும் அவதூறு ஆகியவைகளுக்கு இவ்வாறு பதிலளிக்கவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

ஊ. வசனம் 9-12. "நீங்கள் ஆசீர்வாதத்தை சுதந்தரிக்கும்படியாக..." மலைப்பிரசங்கத்தில், நம்மை உபத்திரவப்படுத்துகிறவர்களை ஆசீர்வதிக்கும்படியாகக் கூறுவது மட்டுமல்லாமல், நாம் இவ்வாறு செய்யும்போது, பரலோகத்தின் ஈவுகளைப் பெற்றுக் கொள்வோம் என்றும், இயேசு நமக்குக் கூறுகிறார். நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோக இராஜ்ஜியம் அவர்களுடையது. என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள். சந்தோஷப்பட்டு களிகூருங்கள். பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும் (மத்தேயு 5:10-11)

எ. "நம்மை உபத்திரவப்படுத்துகிறவர்களுக்கு ஆசீர்வாதத்தை விதைத்து, பரலோக ஈவுகளை அறுவடை செய்யலாம்". என்ற இந்தக் கொள்கையை சங்கீதப்புத்தகத்திலிருந்து மேற்கோளாக எடுத்துக்காட்டி, ஆதரிக்கிறார். பொல்லாப்பிற்கும் அவதூறுக்கும் பதிலாக ஆசீர்வதிக்கிற ஒருவன், கீழ்க்கண்ட ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுவான்:

1. வாழ்க்கை மிகுந்த மனநிறைவாக இருப்பதைக் காண்பான்.

2. அநேக நல்ல நாட்களைப் பார்ப்பான்.

3. தேவன் அவனைக் காத்துக் கொள்ளுவார்.

4. தேவன் அவனுடைய ஜெபங்களைக் கவனித்துக் கேட்பார். (சங்கீதம் 34:12-16)

ஏ. நாம் யாவரும், பொல்லாப்புக்கும், அவதூறுகளுக்கும், நாம் எவ்வாறு பதிலளித்தோம் என்பதை மறுபடியும் சிந்தித்துப்பார்ப்போமானால் நலமாயிருக்கும். நாம் அவரை வேண்டிக்கொள்வோமானால், தேவன் நமக்கு உதவிசெய்வார். பரிசுத்த ஆவியானவர், இதைச் செய்வதற்கு நமக்கு பலன் கொடுப்பார். பேதுரு உற்சாகமூட்டுகிற அநேகக் காரியங்களை, நமக்கு அட்டவணைப்படுத்தி நமக்குக் கொடுத்திருக்கிறார் ஆகவே முயற்சியாவது செய்வோம்! "நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்" இவ்வாறு கூறும்போது, பவுலும்கூட நம்மைத் தைரியப்படுத்துகிறார். (கலாத்தியர் 6:9)

2. நன்மை செய்து பாடுகளை அனுபவிக்கும் போது, பயப்படாதீர்கள் (3:13-17)

அ. வசனம் 13. "நீங்கள் நன்மையைப் பின்பற்றுகிறவர்களானால், உங்களுக்குத் தீமை செய்கிறவன் யார்?" இது உண்மையில் இவ்வாறு பொருள்படும்,

நன்மைசெய்து பாடநுபவித்தல்
1 பேதுரு 3:8 - 22

"நன்மை செய்வதில், இயேசுவைப் பின்பற்றுவதில் வைராக்கியமாயிருப்பீர்களானால், உங்களை யார் துன்புறுத்த முடியும்?" சாதாரணமாக உங்களுடைய இரக்கமுள்ள கிரியைகளுக்காக, மனிதர் உங்களை துன்புறுத்த மாட்டார்கள். ஆகிலும் அவிசுவாசிகள், தங்களுடைய பொல்லாத கிரியைகளை, அவர்கள் (விசுவாசிகள்) வெளிப்படுத்துவதால், விசுவாசிகளை அவதூறு செய்து அவர்களுக்கு துன்பம் செய்ய விரும்புகிறார்கள். "பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான். தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான்" என்று இயேசு நமக்குக் கூறுகிறார். (யோவான் 3:20)

ஆ. வசனம் 14. "நீங்கள் பயப்படாமலும் கலங்காமலும்...." ஆகவே, நீங்கள் அவமதிக்கப்படும்போதும், சரீரத்தைத் துன்புறுத்துவதாக பயமுறுத்தப்படும்போதும், நாம் கலங்கவோ அல்லது பயத்தினால் மேற்கொள்ளப்படவோ கூடாது. நாம் திகிலடையவும், இருதயத்தில் பயங்கரமான எண்ணங்களைப் பேணி வைக்கவும் கூடாது என்று, இது பொருள்படும். இதற்குப் பதிலாகக் கீழ்க்கண்டவற்றை செய்யவேண்டும்:

1. வசனம் 15. "கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயத்தில் பரிசுத்தம்பண்ணுங்கள்" பயமுறுத்தப்படும்போதும், நிந்திக்கப்படும்போதும், கிறிஸ்து உங்களுடைய ஆண்டவராயிருக்கிறார் என்பதை நினைவுகூருவதே, நாம் கையாளவேண்டிய ஒரே வழி. அவர் பரிசுத்த ஆவியானவராயிருக்கிறார். உனக்கு மூர்க்கமான மனிதர்கைகளில் என்ன நேர்ந்தது என்பதைப்பற்றி சம்பந்தமில்லாமல், உன்னுடைய மாம்சசரீரம் மறுபடியும் உயிர்ப்பிக்கப்படும் என்ற ஆசீர்வாதமான நம்பிக்கை உனக்கு இருக்கிறது!

2. வசனம் 15. "யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்". உங்களுடைய இரட்சிப்பு அனுபவத்தைச் சாட்சியாகக் கூற ஆயத்தமாயிருங்கள். நீங்கள் எப்போது இரட்சிக்கப்பட்டீர்கள், அது எப்படி நடந்தது, உனக்கு ஏன் ஒரு இரட்சகர் அவசியமாய் இருந்தது. இதைப் பெற்றுக் கொண்டதினால், உன் இருதயத்திலுள்ள நம்பிக்கை, ஆகிய இவைகளைக் குறித்து சாட்சி கூற வேண்டும். அவிசுவாசியை பயப்படுத்தாத முறையில், இதை நீ செய்யவேண்டும்.

3. வசனம் 16. "நல்மனச்சாட்சியுடையவர்களாயிருங்கள்". பொல்லாப்புக்கும் அவதூறுக்கும் பதிலாக, ஆசீர்வதிக்கும்போது இது உண்டாகிறது. பகைஞர்கள், அவர்கள் நிந்தித்துக் கூறியவைகளுக்காக வெட்கப்படும்படியான பலனை இது நிச்சயமாகக் கொடுக்கும். நம்முடைய மனச்சாட்சி, நம்முடைய கிரியைகள் நியாயமானவை என்று ஏற்றுக்கொள்ளும் அல்லது நாம் ஏற்றவாறு நடந்துகொள்ளாவிட்டால், நம்மை குற்றவாளிகளென்று குற்றஞ்சாட்டும். (ரோமர் 2:15) பரிசுத்த ஆவியானவர், தேவனுடைய வார்த்தையை எடுத்து, நம்முடைய இருதயங்களில் அதை செய்முறைப்படுத்துவதினால், இது நமக்குள் வளர்ச்சியடைகிறது.

இ. வசனம் 17. "தீமை செய்து பாடநுபவிப்பதிலும், ... நன்மை செய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும்" விசுவாசிகள் நியாயப்பிரமாணத்தைமீறுவதில் கண்டுபிடிக்கப்பட்டால், அதன் பலனாகிய தண்டனையை அனுபவிக்கும்படியாக எதிர்பார்க்கப்படுவீர்கள்.

நன்மைசெய்து பாடநுபவித்தல்
1 பேதுரு 3:8 - 22

இது கிறிஸ்துவுக்கும், சுவிசேஷத்திற்கும், கனத்தையும் மகிமையையும் கொண்டுவரமாட்டாது. பரலோக பலனையும் ஈவாகக் கொடுக்காது. ஆனால், விசுவாசிகள் நன்மை செய்து பாடநுபவிக்கும் போது, கிறிஸ்து மகிமைப்படுகிறார், அவர்கள் பரலோக ஈவைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். ஆகவே, நன்மை செய்து பாடநுபவிப்பது, தீமை செய்து பாடநுபவிப்பதைக்காட்டிலும் மேலானது.

3. நன்மை செய்து பாடநுபவிப்பதற்கு கிறிஸ்து நம்முடைய உன்னத எடுத்துக்காட்டாக இருக்கிறார் (3:18-22)

அ. வசனம் 18. "...கிறிஸ்துவும் ... அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்". "அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்" என்ற சொற்றொடரை, நாம் தியானிக்கும்படி, பேதுரு விரும்புகிறார். இயேசு முற்றிலும் நீதியுள்ளவர். அவர் ஒரு பாவமும் அறியாதவர். (2கொரிந்தியர் 5:21) இருந்தபோதிலும் அவர் அநீதி நிறைந்த மனிதர்களின் பாவத்திற்காக அவமான சிலுவையில் மரித்தார். நன்மைசெய்ததற்காக அவர் பாடுபட்டார்.

ஆ. அவரைப் பின்பற்றுகிறவர்களாக இந்த மனப்பான்மையை நாம், ஆயுதமாகத் தரித்துக் கொள்ளவேண்டும். கிறிஸ்துவின் இரத்தபலியின் மூலமாக நாம் நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறோம். இருந்தபோதிலும், அநீதியின் மத்தியில், நாம் நன்மைசெய்யும்போது, துன்பத்தை அனுபவிக்க எதிர்பார்க்கப்படுகிறோம்.

"இயேசுகிறிஸ்துவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது" ...அவர் தம்மை தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து .... மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார். (அநீதியுள்ளவர்களுக்காக) பிலிப்பியர் 2:5-8)

இ. வசனம் 18. "அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்". கிறிஸ்துவின் மரணத்தைப்பற்றிய சிந்தனை, அவருடைய மரணத்திற்குப்பின் என்ன நேர்ந்தது என்பதைப்பற்றி வியாக்கியானம் கூற, பேதுருவை வழிநடத்தியது. பரிசுத்த ஆவியானவர், கிறிஸ்துவைமரணத்திலிருந்து எழும்பப்பண்ணினார். (ரோமர் 8:11) இது, இதற்கு அடுத்தபடியாக, பரிசுத்தஆவியானவர் மூலமாகக் கிறிஸ்து, நோவாவின் காலத்திலிருந்தவர்களுக்கு என்ன செய்தார் என்பதைப் பற்றிய விளக்கம் கூற வழி நடத்தியது.

ஈ. வசனம் 19-20. "அந்த ஆவியிலே அவர் போய்க் காவலிலுள்ள (நரகத்திலுள்ள) ஆவிகளுக்கு (தற்சமயம்) பிரசங்கித்தார்". பரிசுத்த ஆவியானவர், நீதிமானாகிய நோவாவின் மூலமாகப் பேசி, அவன் காலத்திலிருந்த மக்களுக்கு, மனந்திரும்புதல் மற்றும் நீதியைப்பற்றிய செய்திகளை பிரசங்கித்தார். ஜலப்பிரளயத்திற்குத் தப்பின எட்டு பேர்களைத் தவிர மற்றவர்கள் யாவரும், மரித்த துன்மார்க்கரின் ஆவிகளுடைய இடமாகிய நரகமாகிய சிறையில் இப்பொழுது இருக்கிறார்கள். (லூக்கா 16:19-31)

உ. வசனம் 21. "அதற்கு (ஜலப்பிரளயத்திற்கு) ஒப்பனையான ஞானஸ்நானமானது .... இப்பொழுது நம்மையும் ... இரட்சிக்கிறது". விசுவாசத்தினால்மட்டுமே நாம் இரட்சிக்கப்படுகிறோம். அப்படியானால், இதன் பொருள் என்ன? அவருடைய மரணத்திலும், அடக்கம் செய்யப்படுவதிலும், உயிர்த்தெழுதலிலும், கிறிஸ்துவோடு நம்முடைய ஐக்கியத்தின் அடையாளமாக, தண்ணீர் ஞானஸ்நானம் இருக்கிறது.

நன்மைசெய்து பாடநுபவித்தல்
1 பேதுரு 3:8 - 22

(ரோமர் 6:3-13; கொலோசெயர் 12:12). ஆகவே இது, நம்முடைய இரட்சிப்பிற்கு ஒரு அடையாளமாயிருக்கிறது. தண்ணீர் ஞானஸ்நானத்திற்கு நாம் கீழ்ப்படியும்போது, கீழ்க்கண்டவற்றிற்குச் சாட்சி கூறுகிறோம்:

1. கிறிஸ்து பாவத்திற்காக சிலுவையில் அறையப்பட்டபோது, அவரோடு இருக்கிறோம். நம்முடைய பாவசரீரம் அவரோடு சிலுவையில் அறையப்படுகிறது.

2. கிறிஸ்துவோடு அடக்கம் செய்யப்பட்டோம். பாவத்துக்கு மரித்தவர்களாக நம்மை எண்ணுகிறோம்.

3. கிறிஸ்துவோடு மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டோம், இப்பொழுது நாம், கிறிஸ்துவின் மூலமாக தேவனுக்கு ஜீவிக்கிறோம்.

4. தேவனுக்கு முன்பாக சுத்தமனச்சாட்சியுடையவர்களாக இருக்கிறோம்.

ஊ. வசனம் 22. "அவர் பரலோகத்திற்குப் போய் ...." கிறிஸ்து, பரலோகத்திற்குத் திரும்ப போய்விட்டார். ஆனால், அவரைப் பின்பற்றியவர்கள், அவர்களுக்குள் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவருடைய பலத்தினாலும் அபிஷேகத்தாலும், அவருடைய வேலையை இங்கு இருந்து, நிறைவடையச் செய்கிறார்கள். இந்த வேலையின் ஒரு பாகம், நன்மைசெய்து, துன்புறுத்தப்படுவதாக இருக்கிறது. நன்மை செய்ததற்காக கிறிஸ்து அனுபவித்த பாடுகள் நம்முடைய ஜீவனுக்குள் பாய்ந்து ஓடுகிறது. (2கொரிந்தியர் 1:5)

முடிவுரை

அ. கிறிஸ்துவுக்காக வாழும் நம்முடைய வாழ்க்கையின் ஒரு பாகம், நன்மை செய்ததற்காகப் பொல்லாத மனிதர்களின் கரங்களில் பாடனுபவிப்பதும் உள்ளடங்கும். நமக்கு இது நேரிடும்போது, நாம், கீழ்க்கண்ட காரியங்களைச் செய்யவேண்டும்:

1. ஆசீர்வதிப்பதின் மூலமாகப் பதிலளிக்க வேண்டும்.

2. பயமடையவோ அல்லது நம்முடைய இருதயங்களில் திகிலையுடையவர்களாகவோ இருக்கக் கூடாது.

3. நன்மை செய்ததற்காக துன்புறுத்தப்படும்போது, கிறிஸ்து பாடுபடும்போது நடந்து கொண்ட மாதிரியைப் பின்பற்றவேண்டும்.

ஆ. மேலும், பேதுரு அவருடைய நிருபத்தில் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்: "பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி, உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ... திகையாமல் ... நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால், பாக்கியவான்கள், ஏனென்றால் தேவனுடைய ஆவியானவர், உங்கள்மேல் தங்கியிருக்கிறார். ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக் கடவன்" (1பேதுரு 4:12-16)

சரீரத்தில் பாடநுபவித்தல்
1 பேதுரு 4:1 - 6

முன்னுரை

அ. கிறிஸ்துவில் ஒருவன் விசுவாசம் வைக்கும்போது, அவன் மாறிவிடுகிறான். பழைய மனிதன் சென்றுவிடுகிறான், ஒரு புதிய மனிதன் தோன்றுகிறான். புதிய நடத்தை, பழைய நடத்தைகளின் இடத்தை மாற்றி வருகிறது. புதிய நண்பர்கள், பழைய நண்பர்களின் இடத்தில் வருகிறார்கள். எப்படியிருப்பினும் இது, மூர்க்கமான மனிதர்களின் கரங்களில் அநீதியாக நாம் துன்புறுத்தப்படுவதிலேயே முடிவடைகிறது. அவர்கள் நம்மீது தூஷணங்களைக் குவிக்கிறார்கள். ஏனெனில்,

1. பாவத்திற்கு நாம் ஒரு முடிவுகொண்டு வந்துவிட்டோம்.

2. துன்மார்க்கமான மற்றும் மாம்ச இச்சைகளை திருப்திபடுத்த நாம் இப்பூவுலக வாழ்க்கை வாழவில்லை.

3. இனி ஒருபோதும், கூட்டத்தோடு கூட்டமாக ஓடவில்லை.

1. நாம் சரீரத்தில் பாடுபடும்போது, பாவங்களைவிட்டு ஓய்ந்திருப்போம் (4:1-2)

அ. 'இப்படியிருக்க கிறிஸ்து நமக்காக மாம்சத்திலே பாடுபட்டபடியால்....' இது, 3:18 வசனத்தில் கூறப்பட்டதைக் குறிப்பிடுகிறது: 'கிறிஸ்து, பாவங்களுக்காக *(மற்றவர்களுடைய)* மரித்தார். *(சரீரத்தில் பாடுபட்டார்)' (2:24)*

ஆ. கிறிஸ்து 'பாடு அநுபவித்தவராயிருந்தார்.' .... அவர் குத்தப்பட்டார் .... அவர் காயப்பட்டு .... நொறுக்கப்பட்டார், ... அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார். .... கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார். *(ஏசாயா 53:3-7,10)'* என்று ஏசாயா நமக்குக் கூறுகிறார். பவுல் நமக்கு இவ்வாறு கூறுகிறார். 'பாவம் அறியாத அவரை, நமக்காகப் பாவ பலியாக்கினார்'. *(2கொரிந்தியர் 5:21).* கிறிஸ்து, 'மரணபரியந்தம் அதாவது, சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார்!' *(பிலிப்பியர் 2:8).*

இ. 'அப்படிப்பட்ட சிந்தையை ஆயுதமாகத் தரித்துக்கொள்ளுங்கள்' 'ஆயுதமாகத் தரித்துக்கொள்ளுங்கள்' என்றால், யுத்தத்திற்காக ஆயத்தம் செய்யுங்கள் என்று பொருள்படும். கிறிஸ்து நமக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும். நன்மை செய்ததற்காக அவர் அநீதியாக அவருடைய சரீரத்தில் பாடுபட்டது போலவே, அவரில் விசுவாசம் வைக்கிறவர்களும், அவர்கள் நன்மை செய்யும்போது, சரீரத்தில் இதேவிதமாக நடத்தப்படுவதை அனுபவிக்க, எதிர்பார்க்கவேண்டும். 'கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்' *(2தீமோத்தேயு 3:12)* என்று பவுல் நமக்குக் கூறுகிறார். 'உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப்போல் எண்ணப்படுகிறோம்' என்று சங்கீத புத்தகத்திலிருந்து அவர் மேற்கோளாக எடுத்துச் சொல்லுகிறார். *(ரோமர் 8:36, சங்கீதம் 44:22)* 'எந்த வேலைக்காரனும் அவனுடைய எஜமானைவிட பெரியவனல்ல.அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், (நான் நன்மை செய்யும்போது) உங்களையும் துன்பப்படுத்துவார்கள். (நீங்கள் நன்மை செய்யும்போது) *(யோவா 15:20)* என்று கிறிஸ்து நமக்கு ஞாபகப்படுத்துகிறார்.'

**சரீரத்தில்
பாடநுபவித்தல்
1 பேதுரு 4:1 - 6**

ஈ. 'சரீரத்தில் உபத்திரவப்படுகிறவன், பாவங்களைவிட்டோய்ந்திருப்பான்'. நாம் சரீரத்தில், உணர்ச்சியில் மற்றும் ஆவியில் வேதனையை அனுபவிக்கும்போது, அல்லது, நம்முடைய வாழ்க்கை அபாயத்தில் இருப்பதாகக் காணும்போது, பாவ இச்சைகளும், பழக்கங்களும் மறைந்து விட ஏதுவாயிருக்கிறது. மற்றவர்கள் பொல்லாத நோக்கத்துடன் செய்தவற்றை, தேவன் எடுத்து, அதிலிருந்து நன்மையானதொன்றைக் கொடுக்கிறார். பொல்லாத மனிதர்களால், சரீரம் மற்றும் உணர்ச்சிகளில் அநீதியாகத் துன்புறுத்தப்படுவதை, நாம் மேலும் அதிகமாகப் பரிசுத்தமாக்கப்பட பயன்படும் கருவியாக அவர் மாற்றுகிறார். நாம் கிறிஸ்துவின் சாயலாக மாற அவர் அதைப் பயன்படுத்துகிறார். (ஆதியாகமம் 50:20; 2கொரிந்தியர் 3:18; மற்றும் சங்கீதம் 94:12, யோபு 5:17, எபிரெயர் 12:7,10).

உ. அவருடைய சரீரத்தில் கிறிஸ்து பாடுகளை அனுபவித்தது, எவ்வாறு மானிடர்களுக்கு இரட்சிப்பை கொடுத்ததோ, அவ்வாறாகவே, நம்முடைய சரீரத்தில் பாடுகளை அனுபவிப்பது, நம்முடைய வாழ்க்கையில், நாம் மேலும் அதிகமாகப் பரிசுத்தமாக்கப்பட பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்ய உதவிசெய்கிறது. இரண்டும் இரட்சிப்பின் தன்மையுடையதாயிருக்கிறது. இது, விடாமுயற்சியை வளர்க்கிறது. அத்துடன் கிறிஸ்துவில் நம்முடைய விசுவாசம் உண்மையானது என்பதை நிரூபிக்கிறது. (1பேதுரு 1:6-7, யாக்கோபு 1:2-3). தேவன் சகல காரியங்களையும் நம்முடைய நன்மைக்கு ஏதுவாக மாற்றுகிறார் (ரோமர் 8:28-29)

2. நாம் தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்கு ஜீவிக்கிறபடியினால், நாம் நம்முடைய சரீரங்களில் உபத்திரவப்படுகிறோம். (4:2-3)

அ. வசனம் 2. "இனி மாம்சத்திலிருக்கும் காலம் வரைக்கும் மனுஷருடைய இச்சைகளின்படி பிழைக்காமல், ..." "மாம்சத்திலிருக்கும் காலம்வரை, என்றால் அவனுடைய எஞ்சிய உலக வாழ்க்கையில், என்று பொருள்படும்.

ஆ. வசனம் 2. "... தேவனுடைய சித்தத்தின்படியே பிழைக்கத்தக்கதாக...." கிறிஸ்துவோடு அவனுக்குள்ள ஐக்கியத்தினிமித்தமாக அவனுடைய சரீரத்தில் பாடுகளை அனுபவிக்கிறவன், மேலும் அதிகமாகக் கிறிஸ்துவுக்குத் தன்னை அர்ப்பணிப்பான் ஆனால் மேலும் அதிகமாக பொல்லாத மாம்ச இச்சைகளை நிறைவேற்றுவதை விட்டு ஓய்ந்திருப்பான். அநீதியாக, சுவிசேஷத்திற்காகப் பாடுகளை அனுபவிப்பது, நம்முடைய பரிசுத்தமாக்கப்படுவதை மேலும் அதிகப்படுத்துவது மட்டும் அல்லாமல், அதிகமாக கிறிஸ்துவுக்கு நம்மை அர்ப்பணிக்கவும், நம்முடைய வாழ்க்கையில் சுவிசேஷத்தின் கிரியை வளரவும் உதவி செய்கிறது.

இ. வசனம் 3. "சென்ற வாழ்நாட்காலத்திலே நாம் புறஜாதிகளுடைய இஷ்டப்படி நடந்துகொண்டபோதும்...." புறஜாதியார்களின் பின்னணியிலிருந்து கிறிஸ்துவிடம் வந்தவர்கள், அவர்களுடைய இதற்கு முந்திய வாழ்நாட்களில் மிக துன்மார்க்கமான (சன்மார்க்க நெறி தவறிய எல்லா விதமான காரியங்களிலும் அளவுக்கு மிஞ்சிய நடத்தை) இச்சை, குடிவெறி, விக்கிரக வணக்கத்துடன் தொடர்புடைய சடங்காச்சார நடனங்கள், மற்றும் அருவருப்பான விக்கிரக ஆராதனை ஆகிய இக்காரியங்களில், தங்கள் வாழ்க்கையை நடத்திக்கொண்டு வந்தனர். போதுமான அளவு (பாவம்) செய்த காரியங்கள் (பாவம் செய்தது) போதும், என்று பேதுரு கூறுகிறார்.

**சரீரத்தில்
பாடநுபவித்தல்
1 பேதுரு 4:1 - 6**

ஈ. கிறிஸ்துவிடம் வருவதற்கு முன்பு, நம்மில் அநேகர் நடப்பித்த காரியங்களுடன் சேர்த்துக் கொள்ளத்தக்கதாக, புதிய ஏற்பாட்டில், துன்மார்க்கப் பழக்கவழக்கங்களின் அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது. (ரோமர் 1:29-31; கலாத்தியர் 5:19-21 1கொரிந்தியர் 6:9-10; எபேசியர் 5:5; வெளிப்படுத்தின விசேஷம் 22:15)

3. கும்பலோடு சேர்ந்து ஓடுகிறவர்களாக நாம் இனி இராததபடியினால், நம்முடைய சரீரங்களில் நாம் உபத்திரவப்படுகிறோம். (4:4-6)

அ. வசனம் 4. "அந்தத் துன்மார்க்க உளையிலே அவர்களோடுகூட நீங்கள் விழாமலிருக்கிறதினாலே, அவர்கள் ஆச்சரியப்படுகிறார்கள்". நாம் மறுபடியும் பிறக்கும்போது, நம்முடைய வாழ்க்கையில் ஒரு மாற்றம் ஏற்படுகிறது. கிறிஸ்துவுக்குள் நாம் ஒரு புதிய சிருஷ்டியாக மாறுகிறோம். (2கொரிந்தியர் 5:17, கலாத்தியர் 6:15) துன்மார்க்கமான இச்சைகளால் கறைப்படுத்தப்பட்ட பழைய மனிதனைக் களைந்துபோட்டு விட்டு, புதிய மனிதனைத் தரித்துக்கொண்டோம். நம்முடைய சிந்தனைகளில் நாம் புதியவர்களாக்கப்பட்டோம். (எபேசியர் 4:23-24) ஆகவே, நாம் ஒருபோதும் மாம்ச இச்சைகளை நிறைவேற்றும் மிஞ்சின களியாட்டுகளில் "மூழ்கிப்போக" மாட்டோம்! (சிந்திக்காமல் தலைதெரிக்க ஓடுவது)

ஆ. வசனம் 4. "உங்களை தூஷிக்கிறார்கள்" ஏனெனில், களியாட்டும் வெறியும் நிறைந்த வாழ்க்கையில், இனி ஒரு போதும் நாம் அவர்களோடு ஐக்கியப்பட முடியாது. நாம் இனிமேல், "கும்பலோடு சேர்ந்து ஓடமாட்டோம்" நம்முடைய பழைய சிநேகிதர்கள், உறவினர்கள், அயலகத்தார் மற்றும் வேலைபார்க்கும் இடங்களிலுள்ள நண்பர்கள் ஆகிய இவர்கள், அந்நியர்களாக நம்மைப் பார்க்கத் துவங்குகிறார்கள் மற்றும் நம்மைக்குறித்து விநோதமான காரியங்களைச் சிந்திக்கிறார்கள். இது, அநேக சமயங்களில் நம்மீது அவர்கள் அவதூறுகளைக் குவிப்பதில் முடிவடையும். அவர்கள் நம்மீதும், கிறிஸ்துவின்மீதும்,(உணர்ச்சியில் அவமானமடைவது) அவமான தூஷணங்களைச் சுழற்றி எறிந்து, நகைக்கிறார்கள் என்று இது பொருள்படும். சரீர பிரகாரமாக அல்லது அரசியல் சம்பந்தமாக மற்றும் பணசம்பந்தமாக துன்பங்கொடுக்கவும் அவர்கள் முயற்சி செய்யக்கூடும்.

இ. வசனம் 5. ஆனால் "அவர்கள் கணக்கொப்புவிப்பார்கள்" ஆகிலும், கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களை அவமதிப்பவர்கள், "நியாயத்தீர்ப்பின் பெரிய வெள்ளை சிம்மாசனத்தில்" இருக்கும் தேவனுக்கு முன்பாக நின்று, அவர்களுடைய கிரியைகளுக்காக கணக்கொப்புவிக்கவேண்டும். (வெளிப்படுத்தின விசேஷம்20:11-15) அவர்களுடைய நியாயத்தீர்ப்புக்காக, தேவன் ஒரு நாளைக் குறித்திருக்கிறார். (அப்போஸ்தலர் 17:31).

ஈ.வசனம்6."இதற்காகமரித்தோரானவர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது". தேவன் உண்மையுள்ளவர். ஒருவரை நியாயந்தீர்க்கவும், அவர்கள் அழிந்து போவதையும் அவர் விரும்பவில்லை. ஒவ்வொரு தலைமுறையும் மனந்திரும்புவதற்கும், நீதியுள்ள ஜீவியம் செய்வதற்கும், அவர் கொடுக்கும் அழைப்பின்சத்தத்தைக்கேட்டனராஎன்பதைக்குறித்து,அவர் நிச்சயப்படுத்திக்கொள்ளுகிறார். நோவாவின் காலத்தில் வாழ்ந்தவர்களும், வித்தியாசமானவர்கள் அல்ல. நீதிமானாகிய நோவாவின் மூலமாகப் பரிசுத்த ஆவியானவர் பேசி, அவன் தலைமுறையில் இருந்த மக்களை மனந்திரும்புவதற்கும், நீதிக்கும் அழைத்தார்.

சரீரத்தில் பாடநுபவித்தல்
1 பேதுரு 4:1 - 6

உ. நோவாவின் காலத்திலிருந்த மக்களுக்கும், இன்று உலகத்தில் வாழும் மக்களுக்கும் எந்தவிதமான வேற்றுமையும் இல்லை. ஆனால் மனந்திரும்புவதற்கும், நீதியுள்ள வாழ்க்கைக்கும், தேவனுடைய அழைப்பை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள், பொய்யாக நியாயந்தீர்க்கப்பட்டு, இந்த உலகத்தின் மக்களால், சரீரத்தில் அவமானப்படுத்தப்பட்டு துன்புறுத்தப் படுகிறார்கள். அவர்களுக்குள் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவரின் தூண்டுதலினாலும்,

வல்லமையினாலும், கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய வாழ்க்கையை அவர்கள் வாழுகிறார்கள். இக்காரணத்தினாலே, அவர்கள் இனி ஒரு போதும் "கும்பலோடு ஓட மாட்டார்கள்". இதன் விளைவாக, சரீரத்தில் துன்புறுத்தப்பட்டு, உணர்ச்சியில் அவமானத்திற்குட்படுகிறார்கள்.

முடிவுரை

அ. இயேசுவில் விசுவாசம் வைக்கிற ஒவ்வொருவரும் சரீரத்தில் துன்பப்படுவார்கள். தேவனுடைய ஆவியினால், நம்முடைய ஆவி, மறுபடியும் பிறப்பதினால், இது நடைபெறுகிறது நாம் இனிமேல், பாவ சுபாவத்தின் இச்சைகளுக்கு இசைந்து வாழமாட்டோம். ஆனால் நமக்குள் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவர் சொல்லும் காரியங்களுக்கு ஏற்றவாறு நடப்போம். அவர்கள் நகைத்து அவதூறுகளை அள்ளி வீசுகின்றனர். (நம்முடைய மனதைப் புண்படுத்துகிறார்கள்.)
சரீரபிரகாரமாகவும், பண விஷயங்களிலும், அரசியல் சம்பந்தப்பட்ட காரியங்களிலும் அநேக முறைகளில் நமக்கு துன்பம் செய்வார்கள்.

ஆ. கிறிஸ்துவைப்போலவே நாமும் நம்முடைய சரீரங்களில் அநியாயமாகப் பாடுபடவேண்டும் என்று நமக்கு அவர் கூறும்போது, பேதுரு இவைகள் யாவற்றையும் நமக்குச் சுருக்கி விவரிக்கிறார். இது இவ்வாறு நடக்கிறது ஏனெனில் நாம்,

1. பாவத்தைவிட்டு ஓய்ந்திருக்கிறோம்.

2. நம்முடைய வாழ்க்கையில் பொல்லாத மாம்ச இச்சைகளை நிறைவேற்ற, இனி ஒருபோதும் வாழமாட்டோம்.

3. கும்பலோடு சேர்ந்து இனிமேல் ஓடமாட்டோம்.

இந்தக் கடைசி நாட்களில் விசுவாசிகளின் நடத்தை
1 பேதுரு 4:7-11

முன்னுரை

அ. பேதுரு இந்த வேதபாகத்தை, "எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று", என்ற சொல்களோடு துவங்குகிறார். எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாக இருக்கும்போது, விசுவாசிக்குத் தொல்லைகளும், வருத்தங்களும் அதிகரிக்கும். இக்காரணத்தினால், நாம் கீழ்க்கண்ட காரியங்களில் கவனமாக இருக்கவேண்டும்.

1. தெளிந்த மனதோடு இருக்கவேண்டும்.

2. ஊக்கமாக ஒருவரிலொருவர் அன்பு கூர வேண்டும்.

3. நாம் பெற்றுக்கொண்ட ஆவிக்குரிய ஈவுகளை பயன்படுத்தவேண்டும்.

1. இந்தக் கடைசி காலங்களில் விசுவாசிகள் தெளிந்த புத்தியோடு இருக்கவேண்டும் (4:7)

அ. "எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று". இது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிக்கும் குறிப்பு. மானிடர்களுக்காக தேவனுடைய மீட்பின் திட்டத்தில் நடக்கப்போகும் அடுத்த பெரிய சம்பவம்! தற்போதுள்ள உலக ஒழுங்கின் முடிவு சமீபமாயிருக்கிறது. அப்போஸ்தலர்கள் மற்றும் ஆதிசபையிலிருந்த விசுவாசிகளைப்போல, நாமும் கிறிஸ்து சீக்கிரம் திரும்ப வருவதை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்!

1. "இரவு சென்றுபோயிற்று, பகல் சமீபமாயிற்று..... கர்த்தர் சமீபமாயிருக்கிறார்", என்று பவுல் சொல்லுகிறார். (ரோமர் 13:12; பிலிப்பியர் 4:5)

2. "கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறது" என்று யாக்கோபு நமக்குக் கூறுகிறார். (யாக்கோபு 5:8)

3. "மெய்யாகவே, நான் சீக்கிரமாய் வருகிறேன்" என்று வெளிப்படுத்தின விசேஷப் புத்தகத்தில் இயேசு தாமே கூறுகிறார். (பரிசுத்த ஆவியானவர் மூலமாக) (வெளிப்படுத்தின விசேஷம் 22:20)

ஆ. "ஆகையால்" முன்னுரையான இந்தச் சொல்லைத் தொடர்ந்து பேதுருவினுடைய எல்லா கூற்றுகளும், இந்தக் காலத்தின், எல்லா காரியங்களுக்கும் முடிவு சமீபமாயிருக்கிறது என்ற கருத்தின் வெளிச்சத்தில், அறிந்து கொள்ளவேண்டும். சபை மேகங்களுக்கு மேலாக மகிமையோடு எடுத்துக் கொள்ளப்படுவதற்கும், அதைத் தொடர்ந்து உடனடியாக நடக்கப்போகும் சம்பவங்களும் நடைபெற, கிறிஸ்துவின் இரண்டாம் வருகை சமீபமாயிருக்கிறது.

இ. "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள்" தெளிந்த புத்தி என்றால் நல்லநிலையிலுள்ள மனது, ஆவிக்குரிய காரியங்களில் ஞானமாக இருப்பது, வார்த்தையை விசுவாசித்து விளங்கிக்கொண்டதில் உறுதியாகவும், தெளிவாகவும் நிலைத்திரு, என்று பொருள்படும். கடைசி கால சம்பவங்களைக் குறித்த பொய்யான தீர்க்கதரிசனத்தைக் குறித்தோ அல்லது தவறான போதகத்தைப் பற்றியோ மூர்க்கமாகி அல்லது வெறிபடைந்து மனநிலையில் தடுமாற்றம் அடைவதற்கு எதிராக இது ஒரு எச்சரிக்கையாகவும் இருக்கிறது.

**இந்தக் கடைசி நாட்களில் விசுவாசிகளின் நடத்தை
1 பேதுரு 4:7-11**

ஈ. 'ஒரு ஆவியினாலாவது, வார்த்தையினாலாவது, எங்களிடத்திலிருந்து வந்ததாய்த் தோன்றுகிற ஒரு நிருபத்தினாலாவது, கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருக்கிறதாகச் சொல்லப்பட்டால், உடனே சுஞ்சலப்படாமலும் கலங்காமலும் இருங்கள். எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்,' (2தெசலோனிக்கேயர் 2:2-3). என்று பவுல், தெசலோனிக்கேயர் சபைக்குக் கூறுகிறார். ஆதி சபையின் நாட்களிலிருந்தவர்களைப்போலவே, நாமும் அப்போஸ்தலர்கள் போதித்தவாறு, நம்முடைய சிந்தனையில் உறுதியாய் நிலைத்திருக்க வேண்டும்.

உ. போதகர், அவ்வாறாகவே சபையில் தலைமைப் பதவியில் சேவிக்க தேர்ந்தெடுக்கப்படுகிற மற்றவர்களும், "தெளிந்த புத்தியோடு இருக்கவேண்டும்" என்பதும், பவுலினால் தகுதிபெற்றவர்களுக்குரிய ஒரு பண்பாக இருக்கிறது. (1தீமோத்தேயு3:2; தீத்து 2:1-6). இந்த வெறியும், மூர்க்கமுமான சந்ததி மத்தியில் சபை, சமநிலையைக் காத்துக்கொள்ளவேண்டும், "கட்டுப்பாடு இல்லாத" ஒரு சந்ததி.

ஊ. "இச்சையடக்கமுள்ளவர்களாய் இருங்கள்" என்றால் ஒரு காரியத்தை செய்வதற்குமுன் அல்லது ஒரு முடிவு எடுக்கும் முன் கவனமாக எல்லாவற்றையும் குறித்து ஆலோசித்து செய்யவேண்டும், கவனமாகவும் எச்சரிக்கையுடனும் தீர்மானங்கள் செய்யவேண்டும், என்று பொருள்படும். எதற்கு முன்னுரிமை தரவேண்டும் என்று சரியாகத் தீர்மானித்து, அவற்றை சரியான ஒழுங்கின்படி அட்டவணைப்படுத்தவேண்டும்:

1. தனிப்பட்ட முறையில் கிறிஸ்துவோடு நெருங்கியதொடர்பைக்காத்துக் கொள்ளவேண்டும்பரிசுத்தஜீவியம் செய்யவேண்டும்.

2 உங்களுடையசகோதரர், சகோதரிகளைக் குறித்து கரிசனையாயிருக்கவேண்டும்.

3. இழந்து போனவர்களுக்குச் சுவிசேஷ செய்தியை எடுத்துச்சொல்லவேண்டும்.

சோம்பேறித்தனமாக அல்லது தூங்கி விழுகிறவர்களாயிராமல் இருக்க இது ஒரு எச்சரிக்கையாகவும் இருக்கிறது. (1தெசலோனிக்கேயர் 5:1-8; மத்தேயு 25:1-13).

எ.ஜெபம்பண்ணுவதற்குஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்.தெளிந்தபுத்தியுள்ளவர்களாகவும், சுயஅடக்கமுள்ளவர்களாகவும்நிலைத்திராவிட்டால் நாம் ஜெபிக்க முடியாது. நாம் ஜெபித்தாலும் நாம் சரியான ஜெபத்தை, ஜெபிக்கமுடியாது. எனவே, இந்தக் கடைசி காலத்தில் நாம் எப்படி ஜெபிக்கவேண்டும்? தெளிந்த புத்தியோடும், சுய அடக்கத்தோடும், ஜெபிப்பது என்றால், என்ன?

(அ) ஜெபத்திற்கு உங்களையே முற்றிலும் அர்ப்பணித்துவிடவேண்டும் (1கொரிந்தியர் 7:5).

(ஆ) இடைவிடாமல் ஜெபம்செய்யுங்கள் (1தெசலோனிக்கேயர்5:17).

(இ) எல்லா சமயங்களிலும், எல்லா விதமான ஜெபங்களையும், வேண்டுதல்களையும், ஆவியில் ஜெபித்து தேவனிடம் தெரியப்படுத்துங்கள்.(உங்களுக்காகவும், மற்றவர்களுக்காகவும்).

(ஈ) சுவிசேஷத்தின் இரகசியத்தை பயமின்றி நாம் அறிவிப்பதற்காக.

இந்தக் கடைசி நாட்களில் விசுவாசிகளின் நடத்தை 1 பேதுரு 4:7-11

(உ) தேவனுடைய சித்தத்திற்கேற்றவாறு ஜெபியுங்கள். (1யோவான்5:14-15) எல்லா மனிதர்களும் இரட்சிக்கப்படவும், குணமாக்கப்படவும், ஆவியில் அதிகமாக அறிவுறுத்தப்பட, பிசாசுகளிடமிருந்தும், இந்த இருள் நிறைந்த உலகத்தின் பொல்லாப்பிலிருந்தும் விடுவிக்கப்பட ஜெபியுங்கள்.

(ஊ) பரலோகத்தில் உள்ளது போல, பூமியில் தேவனுடைய இராஜ்ஜியமும், அதிகாரமும் நிலைநாட்டபட ஜெபிக்க வேண்டும்.

(எ)நீங்கள் சோதனைக்குட்படாமல், பொல்லாங்கனிடமிருந்து நீங்கள் விடுவிக்கப்படுவதற்காக ஜெபியுங்கள்.

(ஏ) உங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படும்படியாக ஜெபிக்கவும் (மத்தேயு 6:10, 12-13).

(ஐ) நீங்கள் தாங்கிக்கொள்வதற்கு அதிகமாகச் சோதிக்கப்படாதபடிக்கு ஜெபியுங்கள் (1கொரிந்தியர் 10:13).

(ஏ) இழந்துபோனவர்களுக்காக ஜெபி. மற்ற விசுவாசிகளுக்காக ஜெபி. உனக்காக ஜெபிக்க மறந்துபோகாதே. உலகம் முழுவதையும் ஆதாயம் செய்து கொண்டாலும், உன்னுடைய ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் உனக்கு லாபம் என்ன? (லூக்கா9:25) மிக முக்கியமான காரியம் என்னவென்றால், நம்முடைய பெயர்கள், ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுத்தகத்தில் எழுதப்பட்டதாக இருக்கவேண்டும் (லூக்கா 10:20).

2. இந்த கடைசி நாட்களில் விசுவாசிகள் ஒருவரிலொருவர் ஊக்கமாக அன்புகூர வேண்டும் 4:8-9).

அ. வசனம் 8. "ஒருவரிலொருவர் ஊக்கமாக அன்புகூருங்கள்" "ஒருவரில் ஒருவர் அன்புகூருவது" என்றால், ஒருவருக்காக ஒருவர் அக்கறையுடன் கவனிப்பதைக் காட்டுவது. "ஊக்கமாக அன்புகூருவது" என்றால், ஆழமாக, குறிப்பிட்ட நோக்கத்துடன் எப்போது மற்றவர்களை நேசிப்பது என்று பொருள்படும். ஒரு பந்தய ஓட்டக்காரன் ஓயாமல் முயற்சியுடன், கஷ்டப்பட்டு எல்லைக்கோட்டை அடைய அதை நோக்கிச் செல்லும் வருணனை ரூபமாக இது இருக்கிறது. "இருதயத்திலிருந்து ஒருவரையொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்" (1பேதுரு 1:22).

ஆ. வசனம் 8. "அன்பு திரளான பாவங்களை மூடும்" "மூடும்" என்றால் ஒரு பொருளின் மீது ஒரு மூடியைவைப்பதினால் அது முழுவதும் மறைக்கப்பட்டிருப்பதுபோல், என்று பொருள்படும். அன்பு பாவத்தை மூடுகிறது. அது மறுபடியும், மறுபடியும் மன்னிக்கிறது. (நீதிமொழிகள் 10:12).

இ. பேதுரு, இயேசுவினிடம் வந்து கீழ்க்கண்டவாறு கேட்டான், "ஆண்டவரே, என்னுடைய சகோதரன், எனக்கு விரோதமாகப் பாவம்செய்யும்போது, எத்தனைமுறை நான் அவனை மன்னிக்கவேண்டும்? ஏழுதரமட்டுமோ? அதற்கு இயேசு, "ஏழுதரமட்டுமல்ல, ஏழு எழுபதுதரம்மட்டும்" என்று பதிலளித்தார். (மத்தேயு 18:21-22)" அன்பு தவறுகளை அட்டவணைப்படுத்தி எழுதிவைக்காது .....ஒருபோதும் திரும்பசெலுத்தக் கூடாத கடன்போல அது இருக்கிறதென்று பவுல் நமக்குக் கூறுகிறார். (1கொரிந்தியர்13:5; ரோமர் 13:5) "அன்பு திரளான பாவங்களை மூடும்" என்று பவுல் கூறும்போது, இப்பொருள்பட சொல்கிறார்.

இந்தக் கடைசி நாட்களில் விசுவாசிகளின் நடத்தை
1 பேதுரு 4:7-11

ஈ. வசனம் 9 "......ஒருவரையொருவர் உபசரியுங்கள்" முடிவு சமீபமாய் நெருங்கிவர, கிறிஸ்தவர்கள் சமீபமாய் நெருங்கிச் சேர்ந்துவரவேண்டிய அவசியம் நேரிடும்! நாம் பயணம் செய்துவரும் சுவிசேஷகர்களுக்கும், வெளி இடங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மட்டுமல்லாமல், தேவையிலிருக்கும் மற்ற விசுவாசிகளுக்கும் தற்காலிகமாகத் தங்க இடமும், மற்ற உதவிகளும் செய்ய திறந்த மனதோடு வரவேற்கவேண்டும். இதை, முறுமுறுக்காமலும் மற்றும் முணுமுணுக்காமலும் அல்லது நமக்குள்ளே அல்லது மற்றவர்களிடம் முறையிடாமலும் செய்யவேண்டுமென்று, பவுல் நமக்குக் கூறுகிறார்.

3. விசுவாசிகள் அவர்கள் பெற்றுக்கொண்ட ஆவிக்குரிய ஈவுகளை, இந்தக் கடைசி நாட்களில் பயன்படுத்த வேண்டும். (10-11).

அ. வசனம் 10. "அவனவன் பெற்ற வரத்தின்படியே, வரங்களைப்பயன்படுத்துங்கள்". "வரம்" என்றால், ஆவிக்குரிய ஈவு மற்றும் அற்புதவல்லமை, என்று இங்கு பொருள்படும். அதிசயமானவைகளை வெளிப்படையாகச் செய்யும், பரிசுத்த ஆவியானவரின் வரத்தை இது குறிப்பிடுகிறது.

ஆ. பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்ற, ஒவ்வொரு விசுவாசிக்கும், இந்த வரங்களில் (1கொரிந்தியர் 12:7) ஒன்று அதிகம் கொடுக்கப்பட்டுள்ளது. (பயன்படுத்தும்படியாக) என்று வேதம் நமக்குக் கூறுகிறது.

இந்தக் கடைசி நாட்களில், நாம் அவைகளைப் பயன்படுத்தவேண்டுமென்று பேதுரு சொல்லுகிறார்! கடினமான நாட்களில் விசுவாசிகள் அவர்களுடைய விசுவாசத்தையும் ஐக்கியத்தையும் காத்துக்கொள்ள, எல்லாவிதமான அனுகூலமான சூழ்நிலைகளும் தேவைப்படும். அவர்களுக்கு, ஆவியின் வரங்கள் மூலமாக, தேவனுடைய அற்புதமான உதவி அவசியமானதாக இருக்கும்.

இ. வசனம் 10. "ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள்" "உதவிசெய்வது" என்றால் வேலையாளாக இருப்பது, விருந்தளிப்போனாக அல்லது ஏவலாளாக பணிசெய்வது,வேறு ஒருவருக்கு உதவிசெய்வது, மூப்பனாக ஊழியம் செய்வது, என்று பொருள்படும். ஆவிக்குரிய வரங்களைப்பற்றிபேசும்போது, அப்போஸ்தலனாகிய பவுல் அவை கீழ்க்கண்டவைகளுக்குப் பயன்படும் என்று சொல்லுகிறார்.

1. பொதுவான நன்மைக்காக, எல்லா விசுவாசிகளின் ஆதாயத்திற்காக (1கொரிந்தியர் 14:3,26).

2. மற்ற விசுவாசிகளை, பலப்படுத்த, உற்சாகப்படுத்த மற்றும் ஆறுதல் செய்ய.(1கொரிந்தியர் 14:3,26).

3.சபையின்(சரீரத்தின்) பக்திவிருத்திக்காக (1கொரிந்தியர் 14:5).

4. சபையைக் (சரீரத்தை) கட்டுவதற்காக (1கொரிந்தியர் 14:12).

5. அவிசுவாசிகள், தாங்கள் பாவிகள் என்பதை உணர்ந்துகொள்ளும்படியாக. (1கொரிந்தியர்14:24). விசுவாசிகள் தேவன் அவர்களுக்குக்கொடுத்தஆவிக்குரிய வரங்களைபயன்படுத்தும்போது,மற்ற விசுவாசிகளுக்குஅற்புதமாகஉதவிசெய்கிறார்கள்.

இந்தக் கடைசி நாட்களில் விசுவாசிகளின் நடத்தை 1 பேதுரு 4:7-11

தொல்லைகளும், துன்பங்களும் நிறைந்த காலங்களில், மற்றவர்கள் தேவையில் இருக்கும்போது, அவர்கள் தேவனுடைய அதிசயமான உதவியை வெளிப்படுத்துகிறார்கள்.

ஈ. வசனம் 10. "தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல.." பற்பலவிதமான ஆவிக்குரிய ஈவுகள் இருக்கிறது. புதிய ஏற்பாடு வேதபாகங்களில் நான்கு அட்டவணைகள் காணப்படுகின்றன. (1கொரிந்தியர் 12:7-10,28; ரோமர் 12:6-8; எபேசியர் 4:11) கிறிஸ்து,சபைக்கு ஈவாகக்கொடுத்த ஆவிக்குரிய தலைவர்களை எபேசியர் நிருபத்திலுள்ள வேதபாகம் குறிப்பிடுகிறது. இரண்டுமுறை கூறப்பட்டவைகளை நாம் விட்டுவிட்டாலும், மொத்தத்தில் சுமார் 20 வரங்கள் இருக்கின்றன. நாம் உண்மையாக இருப்போமானால், கீழ்க்கண்டவற்றைக் காணலாம்.

1. பவுல் சில வரங்களை மட்டும் குறிப்பிடுகிறார். (1கொரிந்தியர் 14:26)

2. அவர் ஆவிக்குரிய ஈவுகளின் பல பிரிவுகளையே உண்மையில் குறிப்பிடுகிறார். அநேக விதமான குணமாக்குதல்கள், பல வழிகளில் உற்சாகப்படுத்தல், பல முறைகளில் அற்புதவல்லமையை யாவரும் காணும்படிசெய்தல், மற்றும் மற்றவர்களுடைய தேவைக்கு தானம் செய்தல் மற்றம் பல இருக்கின்றன.

உ.வசனம்11."ஒருவன் போதித்தால்...உதவிசெய்தால்". ஆவிக்குரிய வரங்கள். தேவனுடைய ஞானத்தின் சிறிய அளவுகள்.

மற்றவர்களுடைய ஆதாயத்திற்காக, விசுவாசிகளின் மூலமாக அவருடைய வல்லமையின் சிறிய பாகம் வெளிப்படுத்தப்படுகிறது. ஒரு ஆவிக்குரிய வரம் வெளிப்படுத்தப்படும்போது விசுவாசமாகிய அற்புதவரம், அத்துடன் சேர்ந்து காணப்படுகிறது. இக்காரணத்தினால், நாம் பரிசுத்த ஆவியானவரின் அற்புதவரத்தை, தெய்வீக அதிகாரத்துடன் வெளிப்படுத்துகிறோம்.

1. சொல்லும்போது, "தேவனுடைய வார்த்தைகளைப்பே ஒருவர் பேசுவது போல,

2. அவருடைய பலத்தையும், வல்லமையையும் வெளிப்படுத்தத் தேர்ந்தெடுக்கப்பட்டஒருவர் சேவிப்பதுபோல,

ஊ. வசனம் 11. "...எல்லாவற்றிலேயும்...தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக ...." மற்ற விசுவாசிகள் ஆறுதலும், நன்மையுண்டாகும் வார்த்தைகளைக் கேட்கும்போதும், ஆவியின் வரங்கள் மூலமாக, அவர்களுடைய வாழ்க்கையில் அதிசயமான காரியங்கள் நடக்கும் போதும் தேவனுக்குத் துதி உண்டாகிறது. அவர் கனப்படுத்தப்பட்டு, மிக உயர்வாகப் போற்றப்படுகிறார் ஏனெனில், இவையெல்லாவற்றிற்கும் அவர்தான் மூலகாரணம் என்று அவர்கள் அறிவார்கள்! நம்முடைய ஆராதனைகளில் வருகை தரும் அவிசுவாசிகளும் ஆவியின் வரங்கள் வெளிப்படுத்தப்படுவதின் மூலமாக, அவருக்கு துதி செலுத்துவார்கள். அநேக நேரங்களில், ஆவிக்குரிய வரங்கள் வெளிப்படுத்துவதின் மூலமாக, அவர்கள்,

1. அவர்கள் பாவிகள் என்று உணர்த்தப்படுகிறார்கள்.

2. அவர்களுடைய இருதயத்தின் இரகசியங்கள் வெளிப்படுத்தப்பட்டது என்பதை அறிந்து கொள்ளுகிறார்கள்.

இந்தக் கடைசி நாட்களில் விசுவாசிகளின் நடத்தை
1 பேதுரு 4:7-11

3. கீழே விழுந்து தேவனைப் பணிந்து, "மெய்யாகவே தேவன் உங்கள் மத்தியில் இருக்கிறார்", என்று ஆச்சரியத்துடன் கூறுவார்கள். (1கொரிந்தியர் 14:24-25)

முடிவுரை

அ. இந்தக் காலத்தின் முடிவு சமீபமாயிற்று. கிறிஸ்து சீக்கிரம் வருகிறார். விசுவாசிகளுக்கு தொல்லையும் துன்பங்களும் தெளிவாகப் பார்க்கும் வண்ணம் வெளிப்படையாக அதிகரிக்கும். நாம் தனிப்படுத்தப்பட்டு, உபத்திரவப்படுத்தப்பட்டு, பொதுவான முக்கியமான காரியங்களின் ஒழுங்குகளில் பங்கெடுக்க மறுக்கப்படுவோம்.

ஆ. இக்காரணங்களினால், அப்போஸ்தலனாகிய பவுல், கீழ்க்கண்ட காரியங்களில்எச்சரிக்கையாயிருக்க ஆலோசனை கூறுகிறார்:

1. நீங்கள் ஜெபிக்கும்படியாக தெளிந்த புத்தியுள்ளவர்களாகவும் தன்னடக்கம் உள்ளவர்களாகவும் இருக்கவேண்டும்.

2. இருதயத்திலிருந்து ஒருவரிலொருவர் அன்பு கூரவேண்டும். மற்றவர்கள் உங்களுக்கு விரோதமாகச் செய்த பாவங்களை அவர்களுக்கு மன்னியுங்கள்.

3. மற்ற விசுவாசிகளையும், வருகைதரும் ஊழியர்களையும் உபசரியுங்கள்.

4. பரிசுத்த ஆவியானவருடன் சேர்ந்த துணைவர்களாகி, ஆவியின் வரங்களை யாவரும் அறிய வெளிப்படுத்துங்கள்.

சபையிலுள்ள மூப்பர்களுக்கு அறிவுரைகள் 1 பேதுரு 5:1-4

முன்னுரை

அ. கிறிஸ்துவால் நியமிக்கப்பட்ட மற்றும் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் செய்யப்பட்ட தலைமைப் பதவியில் ஒருவர் அவசியமில்லை என்ற நிலை, சபையின் சரித்திர காலத்தில் ஒருபோதும்இருந்ததில்லை. எல்லாக்காரியங்களின் முடிவும்,அதினால்விசுவாசிகளுக்குக்குழப்பங்களையும், தொல்லைகளையும் நாம் நெருங்கிவருகிற இக்காலத்தில் போதகர்களின் பங்கு வரவர அதிக முக்கியத்துவம் பெற்றதாகிக் கொண்டு வருகிறது.

ஆ. போதகர்களின் வாழ்க்கை, கிறிஸ்துவை பிரதிபலித்துக் காட்டவேண்டுமென்று, பேதுரு நமக்குக் கூறுகிறார். அவர், அவருடைய அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்ட விசுவாசிகளை, எவ்வளவுக்கு அதிகமாக, வார்த்தையை பிரசங்கிப்பது மற்றும் போதிப்பதின் மூலமாக அவர்களை வழிநடத்துகிறாரோ அவ்வளவுக்கு அதிகமாக முன்மாதிரியாக வாழ்க்கை நடத்தவேண்டும்.

1.தேவனுடையமந்தையின் மேய்ப்பர்களாக மூப்பர்கள் ஊழியம் செய்யவேண்டும் (5:1-2).

அ. வசனம் 1. "உங்களிலுள்ள மூப்பருக்கு...." அநேக ஆதி சபைகளில், அவர்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்கள் இருந்தார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. அவர்கள் ஒரு சமயம் வயது சென்ற மனிதர்களாக இருந்தார்கள்என்பது, "மூப்பர்" என்ற சொல் காட்டுகிறது; "மூப்பர்கள்" போதகர்களாக இருந்தார்கள்.

புதிய ஏற்பாட்டு வேதவசனங்களில், மேய்ப்பர்கள், ஆயர்கள் மற்றும் கண்காணியாளர்கள்என்று வேறு பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளது. (அப்போஸ்தலர் *20:27;28, தீத்து 1:5-7*).

ஆ. "அந்தந்த சபைகளில், பவுலும் பர்னபாவும் அவர்களுக்கு மூப்பர்களை நியமித்தார்கள்". (அப்போஸ்தலர் 14:23) அவருடைய மூன்றாவது வெளிநாட்டு சுவிசேஷம் அறிவிக்கும் பயணத்தில், எபேசுவுக்கு ஆள் அனுப்பி மூப்பர்களை, பவுல் வரவழைத்தான் என்று வாசிக்கிறோம். (அப்போஸ்தலர் *20:17; 1தீமோத்தேயு 5:17; தீத்து 1:5*).

இ. வசனம் 1...."உடன் மூப்பனாகப்.புத்தி சொல்லுகிறதென்னவென்றால்...." "புத்தி சொல்லுகிறது" என்றால், ஏதோ ஒரு முக்கியமான காரியத்தை, நீ அவர்களுக்குச் சொல்லும்படியாக அவர்களை உனக்குச் சமீபமாக வர கேட்டுக் கொள்வது, என்று பொருள்படும். "நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும், விண்ணப்பங்களையும், ஜெபங்களையும், வேண்டுதல்களையும், ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்". (1தீமோத்தேயு *2:1*)

ஈ. தேவனுடைய மந்தையின் மேய்ப்பனாகவும் அவ்வாறே, ஒரு அப்போஸ்தலனாகவும், பேதுரு தான் இருப்பதாகக் கருதினான். உயிர்த்தெழுந்தபின் இயேசு அவனுடன் நடத்திய உரையாடலுக்குப்பின் இவ்வாறு அவன் நினைத்திருக்கக் கூடும். "யோனாவின் குமாரனாகிய சீமோனே, ...நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா? என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக....என் ஆடுகளை மேய்ப்பாயாக....என் ஆடுகளைக் கவனித்துக்கொள்வாயாக...." (1யோவான் *21:15-17*).

சபையிலுள்ள மூப்பர்களுக்கு அறிவுரைகள் 1 பேதுரு 5:1-4

உ. வசனம் 2. "தேவனுடைய மந்தையை மேய்த்து....." இஸ்ரவேலுடன் தேவனுடைய தொடர்பை விவரிக்க, அவனுடைய ஆடுகளுக்காகக் கவலைப்படும் ஒரு மேய்ப்பனாக பழைய ஏற்பாட்டில் வடிவமைக்கப்பட்டுள்ளது. (ஏசாயா40:11; சங்கீதம் 23). இயேசுவும் கூட இந்த உருவகத்தைக் தம்மைக்குறிக்க பயன்படுத்துகிறார். "நானே நல்ல மேய்ப்பன். நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளுக்காகத் தன்னுடைய ஜீவனைக் கொடுக்கிறான்....நான் என்னுடைய ஆடுகளை அறிந்திருக்கிறேன். என்னுடைய ஆடுகள் என்னை அறிந்திருக்கின்றன." (யோவான் 10:11,14; லூக்கா 15:3-7)

ஊ. மேய்ப்பனுடைய வேலைகளில் கீழ்க்கண்டவை உள் அடங்கும்:

1. புல்லுள்ள இடங்களுக்கு வழி நடத்துவது.

2. விழிப்புடனிருந்து காட்டுமிருகங்களிடமிருந்து காப்பாற்றுவது.

3. பூமியில் வளரும் முட்புதர்கள் மற்றும்செடிகளினால் ஏற்படும் காயங்களை குணமாக்கவேண்டும்.

4. பின்தொடர்ந்து வர மறுக்கும் ஆடுகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவேண்டும்.

(5) ஒன்றும் வழிதவறிச்சென்று விடாதபடி கவனமாக இருக்கவேண்டும்.

எ. தேவனுடைய வார்த்தையினால் போஷிப்பதும்,பொய்ப்போதகர்களிடமிருந்து பாதுகாப்பதும்,சரீரம் மற்றும் மன உணர்ச்சிகளில் ஏற்பட்ட காயங்களை குணமாக்குவதும், தேவனுடையவார்த்தைகளினால் ஒழுங்குமுறைக்குக் கொண்டுவருவதும், பொய்ப்போதகர்கள்பின்னால்வழிதவறிச்சென்றுவிடாதபடி காத்துக்கொள்வதும் போதகர்களின் வேலையாயிருக்கிறது. எருசலேம் சபையிலிருந்த ஆரம்ப கால போதகர்கள் (அப்போஸ்தலர்கள்) அவர்களுடைய அதிகமான நேரத்தை ஜெபத்திலும், தேவ வார்த்தைகளைப் போதிப்பதிலும் செலவழித்தார்கள் என்றால் அது தற்செயலாய் நிகழ்ந்தது அல்ல (அப்போஸ்தலர் 6:4).

ஏ. மேய்ப்பர்கள், (எபேசியர் 4:11 வசனத்தில், "போதகர்-உபதேசியார்" என்ற சொல் மேய்ப்பர் என்று பொருள்படும்) அப்போஸ்தலர்கள் தீர்க்கதரிசிகள், மற்றும் சுவிசேஷகர்கள் ஆகியவர்களுடன் ஒத்துழைத்து, விசுவாசிகளுக்கு, தேவனுடைய சத்தியத்தை அன்புடன் எடுத்துக்கூறவேண்டும். (எபேசியர் 4:15). அவைகளாவன.

1. தேவனுடைய மக்களை, தேவனுடைய ஊழியத்தின் வேலைக்கு ஆயத்தப்படுத்தவேண்டும்.

2.விசுவாசிகளடங்கிய சரீரமாகிய சபையை பலப்படுத்தவேண்டும்.

3. விசுவாசத்திலும், கிறிஸ்துவைப்பற்றிய அறிவிலும்,விசுவாசிகளை ஐக்கியப்படுத்தவேண்டும்.

4.கள்ளப்போதகர்களிடமிருந்தும், பொய்யான உபதேசங்களிலிருந்தும் விசுவாசிகளைக்காப்பாற்றவேண்டும் (எபேசியர்4:12-14).

ஐ. வசனம் 3. "கண்காணித்து ஊழியம்" செய்யுங்கள் ஊழியம் என்றால், 'பணிவிடை செய்வதின்மூலமாகக் கொடுப்பது" என்று பொருள்படும்.

**சபையிலுள்ள மூப்பர்களுக்கு அறிவுரைகள்
1 பேதுரு 5:1-4**

"கண்காணிகளாயிருங்கள்" என்றால், ஆவிக்குரிய தலைவர்களாக இருந்து, அவர்களுக்கு "மேற்பார்வையாளர்களாக" பணியாற்றுவது என்று பொருள்படும். விசுவாசிகளின் குழு ஒன்றிற்கு, ஆவிக்குரிய மேற்பார்வையாளர்களாக பணிசெய்யும் ஊழியத்திற்குப், போதகர்கள் தங்களை முற்றிலும் ஒப்புக்கொடுக்கவேண்டும். இயேசு வருமளவும் சபைக்கு இதுவே மிக அவசியமான ஒரு ஊழியமாக இருக்கும். இது சரியானபடி செயல்முறைப்படுத்தப்படவேண்டுமானால், அது, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையோடும், வெளிப்படையான எடுத்துக்காட்டுகளுடனும் செய்யப்படவேண்டும். (அப்போஸ்தலர் 20:28).

2. மூப்பர்கள், மனப்பூர்வமாய் வேலை செய்யும் மேய்ப்பர்களாய் இருக்கவேண்டும். (5:2).

அ. "கட்டாயமாய் அல்ல. மனப்பூர்வமாயும்..." தேவனுடைய மக்கள் மத்தியில், போதகர்கள் மனப்பூர்வமாய், ஊழியம் செய்யவேண்டும். (தன் ஆர்வ ஊழியர்கள்போல) அவன் விருப்பத்திற்கு எதிராக, கட்டாயத்தின்பேரில் நிறைவேற்றவேண்டிய கூலி வேலையைப்போல், அவன் இதை ஒருபோதும் பார்க்கக்கூடாது. இது உண்மையான காரியமாக இருக்குமானால், அவன் நிச்சயமாக கிறிஸ்துவால் அழைக்கப்படவில்லை, அத்துடன் அவன் சபைக்கு ஒரு ஈவாகக்கொடுக்கப்படவுமில்லை. (எபேசியர்4:11).

ஆ. "நீங்கள் எப்படியிருக்க விரும்புகிறாரோ அவ்விதமாக...." இது ஒரு சமயம், போதகர்கள் கீழ்க்கண்டவாறு அவர்களுடைய வேலையைச் செய்யவேண்டும் என்று பொருள்படும்.

1. தேவன், அதை அவ்வாறு செய்வாரோ அம்மாதிரியாக.

2. தேவன் எவ்வாறு அவருடைய மக்களுக்கு பணிசெய்யும் மனப்பூர்வமான மனப்பாங்குடன் இருக்கிறாரோ அவ்வாறாக.

இ. "அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல." இது, ஆதி சபைக்குள் தந்திரமாய் நுழைந்த கள்ளப்போதகர்களின், தனிப்பட்ட குணப்பண்பாயிருக்கிறது. (2 பேதுரு 2:14-15) இது, தேவனுடைய மக்களைக் கண்காணிக்கும் போதகர்களின் நடத்தைப் பண்பாக இருக்கமுடியாது. உள்ளூர் சபையினால் போதகர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்பட்டு ஆதரிக்கப்படுவது தகுதியான செயலாயிருக்கிறது. மற்றும் அது நியாயமாகவும் தாராளமாகவும் செய்யப்படவேண்டும் (1கொரிந்தியர் 9:1; 1தீமோத்தேயு 5:17-18) ஆனால் பணம் சம்பாதிப்பதும், சுகபோகத்தில் சம்பிரமாய் வாழ்வதும், போதகர்களின் நோக்கமாக இருக்கக் கூடாது. (1தீமோத்தேயு 3:3; தீத்து 1:7).

ஈ. "உற்சாக மனதோடு சேவிக்கவேண்டும்" "உற்சாகமாக" என்றால், ஆயத்தமாகவும், ஆர்வமாகவும் என்று பொருள்படும். தேவனுடைய மக்கள் அடங்கிய ஒரு குழுவிற்கு ஆவிக்குரிய மேற்பார்வையாளர்களாக தங்களையே ஒப்புக்கொடுக்க ஆயத்தமாகவும், ஆர்வமுள்ளவர்களாகவும் போதகர்கள் இருக்கவேண்டும்.

சபையிலுள்ள மூப்பர்களுக்கு அறிவுரைகள் 1 பேதுரு 5:1-4

3. மூப்பர்கள், மந்தைக்கு முன்மாதிரிகளாக சேவை செய்யவேண்டும் (5:3-4).

அ. வசனம் 3. "சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல....." மற்றொரு மனிதரை "ஆளுகிறவர்களாக" என்றால் உன்னை பிரபுவைப் பார்ப்பதுபோல, நோக்கிப்பார்க்கவேண்டும் என்று அதிகாரத்துடன் கேட்பது மற்றும் உன்னுடைய விருப்பத்தையும் பேராசைகளையும் அவர்கள் உனக்குச் செய்ய தங்களை உனக்கு அடிபணியச்செய்வது என்று பொருள்படும்.

தேவன், விசுவாசிகளைப் போதகர்களிடம் நம்பி ஒப்படைத்தது, இம்மாதிரியான நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அல்ல!!.

ஆ. யாக்கோபும் யோவானும், தேவனுடைய இராஜ்ஜியத்தில் உயர்ந்த பதவியில் உயர்த்தப்படவேண்டிக்கொண்டபோது, இயேசு கீழ்க்கண்டவாறு பதிலளித்தார். "....புறஜாதியாருடைய அதிகாரிகள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், பெரியவர்கள் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரம் செலுத்துகிறார்கள் என்றும் அறிந்திருக்கிறீர்கள். உங்களுக்குள்ளே அப்படியிருக்கலாகாது. உங்களில் எவனாகிலும் பெரியவனாய் இருக்க விரும்பினால் அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக் கடவன்"... எல்லோருக்கும் அடிமையாய் (மத்தேயு *20:25-27*). இம்மாதிரியான மனப்பான்மையை, அவருடைய போதகர்களிடமிருந்து கிறிஸ்து எதிர்பார்க்கிறார்.

இ. வசனம் 3 "மந்தைக்கு மாதிரிகளாக" "மாதிரிகளாக" என்றால், ஒரு மாதிரி படிவம்போல, ஒரு பட அமைப்பை உருவாக்குவது, மற்றவர்களிடம் நீ எதிர்பார்க்கும் வாழ்க்கை நடையை பிரதிபலிப்பது. அவர்களைப் பின்பற்றும்படியாக அவர்களுடைய அதிகாரத்திற்குக் கீழ் உள்ள விசுவாசிகளுக்கு, போதகர்கள் வேலைக்கார நிலையில் ஒரு எடுத்துக்காட்டும் மாதிரியாக இருக்கவேண்டும்.

ஈ. "வேலை செய்வது, புசிப்பது" ஆகியவைகளைப்பற்றிபோதிக்கும்போது, அப்போஸ்தலனாகியபவுல்,தெசலோனிக்கேயருக்குக்கீழ்க்கண்டவாறுஎழுதுகிறார். "ஒருவனிடத்திலும் இலவசமாய்ச் சாப்பிடாமலும், உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு, இரவும் பகலும் பிரயாசத்தோடும் வருத்தத்தோடும் வேலை செய்து சாப்பிட்டோம். நீங்கள் எங்களைப் பின்பற்றும்படிக்கு, நாங்கள் உங்களுக்கு மாதிரியாயிருக்கவேண்டுமென்றே அப்படிச் செய்தோம்". *(2தெசலோனிக்கேயர் 3:7-9)* மந்தைக்கு மாதிரிகளாக இருக்கவேண்டும் என்று கூறும் போது, பவுல் இப்பொருள் விளங்கும்படியாகச் சொல்லுகிறார்.

உ. வசனம் 4. "பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது". இயேசுகிறிஸ்துவே, நிச்சயமாகப் பிரதான மேய்ப்பராக இருக்கிறார். சபையை மகிமையோடு மேகங்களுக்கு மேலாக எடுத்துக்கொள்ள வரும், அவருடைய வருகையை இது குறிக்கிறது. *(1தெசலோனிக்கேயர் 4:13-17; 2தெசலோனிக்கேயர் 2:1-8; 1கொரிந்தியர் 15:51-52).*

ஊ. வசனம் 4. "நீங்கள் வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்". "வாடாத கிரீடம் என்பது நித்திய ஜீவ கிரீடம். ஒரு மகிமையான மறுபடியும்உயிர்ப்பிக்கப்பட்டசரீரம்.ஓட்டப்பந்தயத்தில் வெற்றி பெற்றபோது வெற்றி வாகை சூடப்பட்ட பந்தய ஓட்டக்காரனின் வருணனைப் படமாக இது காணப்படுகிறது.

**சபையிலுள்ள மூப்பர்களுக்கு அறிவுரைகள்
1 பேதுரு 5:1-4**

"பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும், எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள். நாமோ, அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படி செய்கிறோம்". (1கொரிந்தியர் 9:25 யாக்கோபு 1:12 2தீமோத்தேயு 4:8)

முடிவுரை

அ. போதகர்கள், ஆர்வமும், ஆயத்தமுமுள்ள, கர்த்தருடைய வேலைக்காரர்களாக இருக்கவேண்டும். தேவனுடைய மக்களின் கூட்டத்திற்கு, ஆவிக்குரிய மேற்பார்வையாளர்களாக அவர்கள் பணியாற்ற வேண்டும். அவர்களைப் புல்லுள்ள இடங்களில் மேய்க்க வேண்டும். அவர்களுடைய விரோதிகளிடமிருந்து அவர்களைக் காப்பாற்றி, அவர்கள் காயமடையும்போது, குணமாக்கவேண்டும். குழப்பம் உண்டாக்குபவர்களை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவேண்டும். ஒருவரும் வழி தவறிப் போகாதவாறு காத்துக் கொள்ள வேண்டும். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலையையும், சபையில் அவர்களுடைய பங்கையும் செய்து முடித்தபிறகு, அவர்கள் ஜீவ கிரீடத்தைப் பெற்றுக் கொள்ளுவார்கள்.

ஆ. அவர்கள் செய்யக்கூடாத காரியங்களில் கீழ்க்கண்டவைகள் அடங்கும்.

1. மகிழ்ச்சிதராத ஒரு வேலையை செய்வது போல், ஊழியம் செய்தல்.

2. பணத்தை ஆதாயம் செய்ய வேண்டும் என்ற பேராசையுடன் இருக்கக் கூடாது.

3. பிரபுக்களைப்போல், மற்றவர்கள் தங்களை மதித்து அடிபணிந்து நிற்கச் செய்யும்படி ஊழியம் செய்பவர்களாக இருக்கக்கூடாது.

இ. இன்று சபையிலுள்ள போதகர்கள், உலகமெங்கும் பரவலாக உள்ள சபைகளில், அவர்கள் எங்கு பணியாற்றினாலும், அவர்களுடைய ஊழியத்தை, பரிசுத்த ஆவியானவர், அப்போஸ்தலனாகிய பேதுரு மூலமாக, நமக்கு எழுதிய வார்த்தைகளோடு ஒப்பிட்டுப் பார்த்து மதிப்பீடு செய்வார்களானால் நலமாயிருக்கும்.

சபையிலுள்ள வாலிப ஆண்கள் மற்றும் பெண்களுக்கு அறிவுரைகள்
1 பேதுரு 5:5-10

முன்னுரை

அ. சபையிலுள்ள விசுவாசிகளின் நடத்தை, சமுதாயத்திலுள்ளவர்களுக்குச் சாட்சியாக இருக்கிறது. இது, விசேஷமாக நம்முடைய வாலிப ஆண்கள் மற்றும் பெண்கள் காரியங்களில் உண்மையாக இருக்கிறது. அவர்கள் அதிகமாக மற்றவர்களால் கவனிக்கப்படுகிறார்கள் மற்றும், மிக அதிகமான மக்களுடன் தொடர்புகொள்கிறார்கள்.

ஆ. வாலிப ஆண்கள் மற்றும் பெண்கள், போதகர்கள், மற்றும் மற்ற விசுவாசிகளிடம் தொடர்புகொள்ளும்போது, கீழ்ப்படிந்து, தாழ்மையுடன் நடந்து கொள்ள வேண்டும். இந்தக் கடைசி காலத்தில், சுவிசேஷத்திற்காக ஒவ்வொருவரும் உபத்திரவப்படுவார்கள். நம்மில் ஒவ்வொருவரையும், பிசாசு அழிக்க முயற்சி செய்வான். ஆகவே, சபையிலுள்ள மற்றவர்களுக்கு, அவர்கள் தொல்லை தரக்கூடாது. ஏனெனில், அவர்கள் ஏற்கனவே ஏராளமான துன்பங்களைச் சகித்துக்கொண்டிருக்கின்றனர்.

1. இளைஞர்கள், தங்களைவிட வயதில் முதிர்ந்தவர்களுக்குக் கீழ்ப்படியவேண்டும் (5:5)

அ. "இளைஞர்கள்" இந்த நிருபத்தின் இந்த பாகம், சபையிலுள்ள வாலிப ஆண்கள் மற்றும் பெண்களை நோக்கி எழுதப்பட்டுள்ளது.

ஆ. "இளைஞரே மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள்". "கீழ்ப்படிதல்" என்றால், நீங்கள் ஒருவருக்குக் கீழ்ப்பட்டவர்கள் என்றும், உங்களில் கூறப்பட்டவைகளுக்குக் கீழ்ப்படியவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ளுதல். சபையிலுள்ள வாலிப ஆண்களும், பெண்களும், சபையிலுள்ளவர்களை விட வயது முதிர்ந்த மற்ற ஆண்கள், பெண்கள் மற்றும் போதகர்களுக்குக் கீழ்ப்படியவேண்டும். அவர்கள், அவர்களுக்குக் கீழ்ப்பட்டவர்களென்றும், அவர்கள் சொல்லுகிறபடி அவர்கள் கீழ்ப்படியவேண்டும் என்று அவர்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

இ. இந்தச் சட்டத்தில் தவிர்க்க வேண்டியவைகள் உண்டு. இது துன்மார்க்கத்திற்கும், தேவனுக்கும் அவருடைய வார்த்தைக்கும் எதிராகக் கலகஞ்செய்வதாக இருக்குமானால், சபையிலுள்ள, போதகர்கள், அல்லது வயது முதிர்ந்தவர்களுடைய அறிவுரைகளுக்கு அவர்கள் ஒருபோதும் கீழ்ப்படியமாட்டார்கள்.

2. இளைஞர்கள் தாழ்மையை அணிந்து கொள்ள வேண்டும் (5:5-7)

அ. வசனம் 5. "ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள்" "அணிந்து கொள்ளுங்கள்" என்றால் "முடிச்சினால் கட்டு, என்று பொருள்படும். இங்கே ஒரு வஸ்திரம் மற்ற வஸ்திரங்களுடன் சேர்த்து கட்டப்படுவது (முடிவது) ஆதி சபையின் காலத்தில், அடிமைகள் வேலை செய்யும் போது அணியும் மேல் ஆடை அல்லது மேல் அங்கியை விவரிக்க இது பயன்பட்டது.

சபையிலுள்ள வாலிப ஆண்கள் மற்றும் பெண்களுக்கு அறிவுரைகள்
1 பேதுரு 5:5-10

ஆ. "மனத்தாழ்மையை" என்றால், உன் இருதயத்தில், நீ அந்தஸ்தில், புகழில், சுய மதிப்பில், குறைந்தவன் என்பதை அறிந்து கொள்வது என்று பொருள்படும். ஆகவே வாலிப ஆண்கள் மற்றும் பெண்கள், அவர்கள் தங்கள் தாழ்ந்த நிலையை அறிந்து கொண்ட அந்த ஞானத்தை, ஒரு அடிமை அவனுடைய இடையைச் சுற்றி மேல் ஆடையை அணிந்துகொள்வது போல, அவர்கள் சபையிலுள்ள மற்றவர்களிடம் தொடர்பு கொள்ளும்போது, அணிந்து கொள்ள வேண்டும்.

இ. வாலிப ஆண்கள் மற்றும் பெண்கள் சபையிலுள்ள போதகர்களிடமும் மற்ற வயது முதிர்ந்தவர்களிடமும் பணிந்து நடந்து கொள்வது மட்டும் அல்லாமல், மற்ற வாலிப ஆண்கள் மற்றும் பெண்களிடம் தொடர்பு கொள்ளும்போதும் தாழ்மையை அணிந்து கொள்ளவேண்டும். மற்றவர்களுக்காக, உண்மையாகத் தன்னயமற்று சிரத்தையுள்ளவர்களாயிருப்பதை வெளிப்படையாக யாவரும் அறிய எடுத்துக்காட்ட, சபையிலுள்ள வாலிப ஆண்களையும், பெண்களையும், பேதுரு அழைக்கிறார். சீஷர்களுடைய கால்களை, கிறிஸ்து கழுவுவது, ஒரு நல்ல உதாரணம். (யோவா 13:4-5)

ஈ. இதற்கு இரண்டு நல்ல காரணங்கள் இருக்கின்றன:

1. பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார். (தடை செய்கிறார், விரோதமாகப் போர் செய்கிறார்) எப்போதும் துன்பத்திலும் காயமடைவதிலும் முடிவடையும், அவர்களுடைய சுயதீர்மானங்களின் வழிகளுக்கு அவர்களை அவர் (தேவன்) விட்டுவிடுகிறார்.

2. தேவன் தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபையளிக்கிறார். (ஆவிக்குரிய நன்மையும் தனி சலுகையும்). இது நீதிமொழிகள் 3:34, மேற்கோளாக எடுக்கப்பட்டது. "இகழ்வோரை அவர் (தேவன்) இகழுகிறார்; தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார்". யாக்கோபு மேலும் நமக்கு இவ்வாறு கூறுகிறார். "கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்.

உ. வசனம் 6. ஆகையால் ...... அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" பெருமை தேவனுக்கு எதிராக நம்மை நிறுத்துகிறது. எனவே தேவன் மிக உன்னதமானவர் என்றும், நாம் மிகவும் தாழ்ந்தவர்கள் என்றும், அவருடைய கிருபை இல்லாவிட்டால் நாம் நம்பிக்கையின்றி இழந்துபோனவர்களாகவும் வழிதவறிச் சென்றவர்களாகவும் இருப்போம் என்பதை அறிந்து கொள்வோமானால் மிகுந்த நன்மையாக இருக்கும்.

ஊ. "தேவனுடைய பலத்த கரம்" என்ற சொற்தொடர், பழைய ஏற்பாட்டில் சாதாரணமாக காணப்படுகிறது. எகிப்து தேசத்திலிருந்து, அவருடைய மக்களை தேவன் எப்படி விடுவித்தார் என்பதை விவரிக்க இது அதிகமாக அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது. (யாத்திராகமம் 13:9; உபாகமம் 9:26) நாம் நம்மையே அவருக்கு முன்பாகத் தாழ்த்தி, அவருடைய தலைமையையும், வழி நடத்துதலையும் ஏற்றுக் கொள்ளுவோமானால், அவருடைய வல்லமையினாலும் பலத்தினாலும் உதவி செய்து நம்மை விடுவிப்பார்.

எ. வசனம் 7. "... உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள்."

**சபையிலுள்ள வாலிப ஆண்கள் மற்றும் பெண்களுக்கு அறிவுரைகள்
1 பேதுரு 5:5-10**

"வைத்துவிடுங்கள்" என்றால் எருசலேமுக்குள் இயேசு ஏறிவந்த கழுதைக் குட்டியின்மீது, சீஷர்கள் அவர்களுடைய வஸ்திரங்களை போட்டது போல "போட்டுவிடுங்கள்" என்று பொருள்படும் (லூக்கா 19:35) மற்றும் "கவலைகள்" என்பது நமது விசாரங்களையும் வியாகுலங்களையும் என்று பொருள்படும். "கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு" என்று சங்கீதக்காரன் சொல்லுகிறார். (சங்கீதம் 55:22)

ஏ. இன்று நம்முடைய சபைகளிலுள்ள வாலிப ஆண்கள் மற்றும் பெண்களுக்கு, அவர்கள் அந்தஸ்திலும், புகழிலும், சுய மதிப்பிலும் உயர்ந்தவர்களாக இருப்பதுதான் மிக முக்கியமான காரியம் என்று உலகத்தால் கூறப்படுகிறது. ஆகவே பேதுருவுடைய இந்த போதனைகள் ஆதி சபையிலுள்ள வாலிப ஆண்களுக்கும் பெண்களுக்கும் எந்த அளவுக்குப் பொருத்தமானதாக இருந்ததோ அந்த அளவிற்கு, இன்று சபையிலுள்ள வாலிப ஆண்களுக்கும் பெண்களுக்கும் இருக்கிறது. உலகம் என்ன போதிக்கிறதோ அதற்கு நேர்மாறாக அவர்கள் கீழ்க்கண்ட காரியங்களைச் செய்ய வேண்டும்.

1. சபையில் அவர்களுடைய போதகர்களுக்கும் வயது சென்ற மற்றவர்களுக்கும் கீழ்ப்படிய வேண்டும்.

2. ஒருவர் சார்பாக மற்றவர்களிடம் தாழ்மையை அணிந்து கொள்ள வேண்டும்.

3. அவர்கள் தேவனுடைய பலத்த கரத்திற்குள் அடங்கியிருக்கவேண்டும்.

4. அவர்களுடைய எல்லா கவலைகளையும் விசாரங்களையும் அவர்மீது வைத்துவிட வேண்டும். அவர்கள், ஆவியில் அழிக்கப்படுவதைத் தவிர்க்கவேண்டுமானால், தெளிவாகச் சிந்தித்து, எப்போதும் விழித்திருந்து பிசாசை எதிர்க்க வேண்டும்.

3. வாலிபர்கள் தன்னடக்கம் உள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். (8-10)

ஆ. வசனம் 8-9. "உலகத்திலுள்ள உங்கள் சகோதரர்களிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே". வாலிப ஆண்களும் பெண்களும் தனியாகக் கிறிஸ்துவுக்காக துன்பத்தை அனுபவிக்கவில்லை. (2 தீமோத்தேயு 3:12) முதன்முதலாகக் கிறிஸ்து, அதன்பின்பு, அப்போஸ்தலர்களும், அவர்களைப் பின்பற்றினவர்களும் பாடுகளை அனுபவித்தார்கள். மற்றும் இப்பொழுது போதகர்களும், சபையிலுள்ள விசுவாசிகள் எல்லோரும் துன்பப்படுகிறார்கள். ஆகவே பெருமையுள்ளவர்களாகவும் எதிர்த்து நிற்கிறவர்களாவும் இருப்பதினால், போதகர்களுக்கும், சபையிலுள்ள வயது சென்ற அங்கத்தினர்களுக்கும் தொல்லைகொடுக்கக் கூடாது. பிசாசு நம் எல்லோரையும் அழிக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறான்!

ஆ. வசனம் 8. "உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்". வாலிப ஆண்களுக்கும் பெண்களுக்கும் தொந்தரவு தருவதற்குக் காரணமாயிருப்பது, போதகர்களும், வயது முதிர்ந்த அங்கத்தினர்களும் அல்ல.

**சபையிலுள்ள வாலிப ஆண்கள் மற்றும் பெண்களுக்கு அறிவுரைகள்
1 பேதுரு 5:5-10**

உங்களுடைய தொல்லைகளுக்கும், துன்பங்களுக்கும் ஊற்றும் காரணமுமாயிருப்பவன் பிசாசு. சாத்தான், யோபுவை அழிக்க முயற்சித்தபோது, அவனிடம், "நீ எங்கேயிருந்து வருகிறாய்?" என்று கேட்கப்பட்டது. அதற்குச் சாத்தான், "பூமியெங்கும் உலாவி, அதில் சுற்றித்திரிந்து வருகிறேன்," என்று பதிலளித்தான். அவன் இன்னமும் யாரையாகிலும், விசேஷமாகக் கிறிஸ்துவைப் பின்பற்றும் வாலிப ஆண்கள் மற்றும் பெண்களை, முக்கியமாகப் பிரிவினைகள், சண்டை, பொறாமை, பெருமை, கலகம் செய்தல் ஆகியவைகளின் மூலமாக விழுங்கிவிடலாம் என்று, உலகம் முழுவதும் சுற்றித் திரிகிறான்.

இ. வசனம் 8. "ஆகவே தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்." தெளிந்த புத்தியுள்ளவர்கள், எல்லாவற்றையும் தெளிவாய்ப் பார்க்கிறார்கள். அவர்கள் விழிப்புள்ளவர்களாயுமிருக்கிறார்கள். தூங்கி விழுவதற்கு மாறாக விழித்திருக்கிறார்கள் என்று பொருள்படும். அவர்கள் ஆவியில் மிகத் தெளிவுடன் விழித்திருக்கிறார்கள் என்று உண்மையில் இது பொருள்படும். இந்தக் கடினமான நாட்களில், நம்முடைய வாலிபர்கள் அழிக்க, பிசாசு கொண்டிருக்கும் இந்த ஆசை, இந்த மனப்பான்மையை ஆயுதமாகத் தரித்துக் கொள்ள உரிமையுடன் கேட்கிறது.

ஈ. வசனம் 9. "விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்" "எதிர்த்து" என்றால் விரோதமாகச் சண்டையிடுவது, குறுக்கே தடையாக நிற்பது, என்று பொருள்படும். "பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்" (யாக்கோபு 4:7) என்று யாக்கோபு கூறும்போது இக்கருத்தையே தெரிவிக்கிறார். "நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்". (எபேசியர் 6:11,13) பிசாசினுடைய பரீட்சைகளையும், சோதனைகளையும் எதிர்த்து நிற்கும் போது, அதை இருதயத்தில் நன்கு உணர்ந்து அர்த்தத்துடன் செய்வீர்களானால் நன்றாக இருக்கும். நாம் தீர்மானத்துடன் திட்டமாகப் பேசும்போதும், உதட்டளவில், அர்த்தமின்றி செயல்படும்போதும், அவனுக்கு அது நன்றாகத் தெரியும்.

உ. வசனம் 10. "தேவன் தாமே கொஞ்ச காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்படுத்தி .... நிலை நிறுத்துவார்" "சீர்படுத்தி" என்ற சொல், சாதாரணமாக வலைகளை பழுதுபார்ப்பது, அல்லது உடைந்து போன எலும்புகளைச் சரி செய்வது, என்று பொருள்படும்.

பரீட்சைகள், சோதனைகள் மற்றும் மன உணர்ச்சிகளிலும், சரீரத்தில் வேதனைகள் ஆகியவைகளிலிருந்து நாம் விடுவிக்கப்படும் நாள், பெரும்பாலும் இங்கேயே இருக்கிறது. இயேசு சீக்கிரம் வருகிறார். எல்லா காரியங்களின் முடிவும் சமீபமாயிருக்கிறது. அவர் வரும்போது எல்லா காரியங்களையும் சரிசெய்யப்போகிறார்! அல்லேலூயா!!

முடிவுரை

அ. கிறிஸ்தவர்கள், வாலிபர் மற்றும் வயது சென்றவர்கள் ஆகிய இருவகையினர்கள் யாவரும், சாத்தான் மற்றும் இந்த உலகத்தில் அவனுடைய அதிகாரத்திற்குக் கீழ் இருப்பவர்கள் கரங்களிலிருந்து உபத்திரவப்படுவார்கள்.

சபையிலுள்ள வாலிப ஆண்கள் மற்றும் பெண்களுக்கு அறிவுரைகள்
1 பேதுரு 5:5-10

சபையின் ஆரம்பகாலத்திலிருந்தே இம்மாதிரியாக நடைபெற்று வருகிறது. ஆகிலும் சபையிலுள்ள வாலிப ஆண்களும் பெண்களும், கீழ்க்கண்ட குறிப்புகளின்படி செய்வார்களேயாகில், அது நம் எல்லோருக்கும் சகித்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்:

1. போதகர்களுக்கும், வயதில் மூத்தவர்களுக்கும் கீழ்படிதல்.

2. தாழ்மையினால் தங்களை உடுத்திக் கொள்ள.

3. காரியங்களின் தன்மைகளை எப்போதும் தெளிவாகப் பார்த்து, ஆவியில் நன்றாக விழிப்புடன் காத்திருக்க வேண்டும்.

ஆ. நாம் யாவரும் சிறிது காலம் மட்டும் உபத்திரவப்பட்டபின்பு, கிறிஸ்து வந்து, காரியங்களைச் சீர்படுத்துவார். ஆகவே, பவுல் நமக்குக் கீழ்க்கண்டவாறு சொல்லுகிறார்: "... அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம், மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது, ஆகவே காணப்படுகிற அநித்தியமானவைகள் மீது அல்ல, காணப்படாத நித்தியமானவைகள் மீது நம் கண்கள் நோக்கிப்பார்க்க வேண்டும்". (2கொரிந்தியர் 4:17,18)